
வவுனியூர்
இரா. உதயணனின்

# சுருதி பேதமடைகிறது

(நாவல்)



3-2

# சுருதி பேதமடைகிறது

(நாவல்)


வவுனியூர் இரா. உதயணன்



A. KUMARATHASAN
49 KALAIMAGAL ROAD
ARIYALAI WEST
JAFFNA



அருணா வெளியீட்டகம்
A15, 1/1 மனிங் ரவுண் வீடமைப்புத் தொகுதி,
மங்கள வீதி
கொழும்பு – 08, இலங்கை.
☎ - 011 2688466

இலங்கைத் தேசிய நூலகம் - பட்டியல் தரவு

வவுனியூர் இரா. உதயணன்

சுருதி பேதமடைகிறது (நாவல்)

வவுனியூர் இரா. உதயணன்,கொழும்பு- ஆசிரியர் 2008

பக்கம் - 164

ISBN : 978-955-1347-03-1 விலை : 150.00

1. தமிழ் 2. தலைப்பு
சுருதி பேதமடைகிறது (நாவல்)

ISBN : 978-955-1347-03-1

அருணா வெளியீட்டகம்

**Suruthi Pethamadaikirathu**
**by Vavuniyoor Ra.Uthayanan**

**First Edition : March 2008**

**Author : Vavuniyoor Ra.Uthayanan**

**Price : Rs150/- (Sri Lanka)**
**£ 3, USD 6, Euro 5.**

**Printed by : Unie Arts (Pvt) Ltd.**

# "Suruthi Pethamadaikirathu"

*(Tamil Novel)*

By

*Vavuniyoor Ra. Uthayanan*

**Aruna Publication**
A15 1/1 Manning Town Housing Scheme
Mangala Road
Colombo - 08, Sri Lanka.
☎ 011-2688466.

**BIBLIOGRAPHICAL DATA**

| | |
|---|---|
| Title of Book | : Suruthi Pethamadaikirathu |
| Language | : Tamil |
| Subject | : Novel / Traditional Changes. |
| Written by | : Vavuniyoor Ra.Uthayanan |
| Copyright | : Author |
| First Edition | : March 2008 |
| Published by | : Aruna Publication (Aruna Veliyettaham) |
| Font size | : 11 |
| Type setting | : Arruna Selladurai |
| No. of Pages | : 164 |
| Cover Design/ Drawings | :Sivagnanam Nishaharan |
| Number of copies | : 1500 |
| Price | : Rs150/- (Sri Lanka) £ 3, USD 6, Euro 5. |
| Printed by | : Unie Arts (Pvt) Ltd., 48B, Bloemendhal Road, Colombo 13. ☎ 2330195 |
| ISBN | : 978-955-1347-03-1 |

## ஓர் அறிமுகம்...

## வவுனியூர் இரா. உதயணன்



| | |
|---|---|
| முழுப்பெயர் | : உதயணன் ஸ்ரீ இராமகிருஸ்ணா |
| பிறந்த இடம் | : குடியிருப்பு, வவுனியா, இலங்கை |
| பிறந்த ஆண்டு | : 1960 |
| ஆரம்பக்கல்வி | : யாழ்.பரியோவான் கல்லூரி |
| உயர்கல்வி | : வவுனியா தமிழ் மகா வித்தியாலயம் |
| பட்டப்படிப்பு | : கணக்காளர் தொழில்சார் பட்டப்படிப்பு<br>முதுமானி கணக்கியல்துறை (MAcc)<br>(University of Dundee, Scotland)<br>முதுமானி நிர்வாக முகாமைத்துவம் (MBA)<br>(University of Manchester, UK ) |
| தொழில் | : பணிப்பாளர், கணக்கியல் பிரிவு, தனியார்துறை |
| எழுத்துத்துறை | : 20 வயதில் ஆரம்பம். 1980 களில் இருந்து முப்பதுக்கும் மேற்பட்ட சிறுகதைகள். |
| வெளியான பத்திரிகைகள் | : ஈழநாடு, வீரகேசரி, தினகரன், தமிழன், ஈழகேசரி. |
| எழுதிய நாவல்கள் | : "ஒரு அத்தியாயம் முடிவடைகிறது"<br>"இடைவெளிகள்" – தினகரன்<br>"உதட்டுப் பூச்சுக்கள்" – தமிழன் |

25 வருடங்களாக தொடர்ந்து எழுதிவரும் வவுனியூர் இரா. உதயணன் இலங்கையிலும் புலம்பெயர் நாடுகளிலும் பல்லாயிரக்கணக்கான வாசகர்களின் உள்ளங்களில் இடம் பிடித்தவர். அவர் எழுதிய நாவலை நூல் வடிவில் வெளிக்கொணர்வதில் பெருமை கொள்கிறேன்.

அன்புடன் அருணா செல்லத்துரை

## உங்களுடன் உதயணன் ....

ஆயிரத்து தொளாயிரத்து எண்பதுகளில் சிறுகதைகள் பலவற்றை பத்திரிகைகளுக்கு எழுதி எனது எழுத்துலகை ஆரம்பித்தேன்.

பின்னர் நாவல்களை எழுதி பத்திரிகைகளுக்கு அனுப்பியபோது அவற்றை பிரசுரித்து எனக்கு ஊக்கமளித்த பத்திரிகையாசிரியர்களான காலஞ்சென்ற கலாசூரி ஆர். சிவகுருநாதன், மற்றும் திரு. எஸ். சபாரட்ணம், திரு. ஈ.கே. ராஜகோபால் ஆகியோரை நன்றியுடன் நினைவு கூருகின்றேன்

எனது ஆக்கங்களை வாசித்து அவ்வப்போது ஆக்கபூர்வமான கருத்துக்களை வழங்கிய எனது தந்தையாரையும் காலஞ்சென்ற எனது தாயாரையும் மனக்கண் முன் நிறுத்துகிறேன்.

இந்த நாவலுக்கு அட்டைப் படத்தோடு ஏனைய படங்களையும் வரைந்து தந்த ஓவியர் நிஷாவுக்கும் நூலை அச்சிட்டுத் தந்த Unie Arts நிறுவனத்தாருக்கும் எனது நன்றிகள்

நீண்ட இடைவெளிக்குப் பின்னர் எழுதிய இந்த நாவலை முதல் நூல் வடிவமாக உருவமைக்க ஊக்குவித்து, அறிமுக உரையும் தந்து நூலை வெளியிட்டுவைக்கும் திரு அருணா செல்லத்துரை அவர்கட்கு நன்றி சொல்லக் கடமைப்பட்டுள்ளேன்.

வாசகர்களாகிய உங்களுக்கும் மனமார்ந்த நன்றிகள்.

நன்றியுடன்
உங்கள்
**வவுனியூர் இரா. உதயணன்**

28, கித்துல் வீதி.
குடியிருப்பு, வவுனியா
இலங்கை.

## சமர்ப்பணம் ....

என்னை வளர்த்தெடுத்து
எழுத்துலகில் புகுவதற்கு
உதிரம் தந்த
காலஞ்சென்ற
அன்னை
கமலநாயகி அவர்கட்கும்......


நாவல் உலகில்
எழுத்தாளர்
உருவம் தந்த
தினகரன் தலைமை ஆசிரியர்
காலஞ்சென்ற
கலாசூரி ஆர். சிவகுருநாதன்
அவர்கட்கும்
இந்த நாவல்
**சமர்ப்பணம்.**

வவுனியூர் இரா. உதயணன்.

வவுனியூர் இரா. உதயணனின்

# சுருதி பேதமடைகிறது

(நாவல்)



# 1

ஸ்கொட்லாந்தில் எங்கோ தூரத்தில், வெகுதூரத்தில் அந்த தைன் நதி மெல்லியதாய் பாய்ந்து கொண்டிருந்தது.

பிரசன்னா யன்னலோரமாக நின்று அந்த தைன் நதியின் மேலாக அமைக்கப்பட்டிருந்த நீண்ட புகையிரதப் பாலத்தில் ஊர்ந்து வந்து கொண்டிருந்த புகையிரதத்தைப் பார்த்து ரசித்துக் கொண்டிருந்தான்...!

அந்த நதியைச் சுற்றி மலையும், மலை சார்ந்த இடமாகவிருந்த அந்த நகரமும், அதைச் சுற்றியிருந்த அழகான பழமை வாய்ந்த பல்கலைக்கழக கட்டிடங்களும், அவனுக்குப் புதுமையாக இருந்தன.

பிரசன்னா கணனித்துறையில் பட்டமேற்படிப்பு படிக்க வந்து ஆறு மாதங்களுக்கு மேலாகிவிட்டன. அவன் இன்னமும் தன்னைப் புதிய சூழ்நிலைக்கு முழுமையாக பழக்கப்படுத்திக் கொள்ளவில்லை. அவன் பேசும் ஆங்கிலத்திற்கும், இங்கேயே பிறந்து வளர்ந்தவர்கள் பேசும் ஆங்கில மொழிப் பாவனைக்கும் நிறைய வித்தியாசம் இருந்தது.

அந்தப் பல்கலைக்கழகத்தில் ஓரிருவர் மாத்திரமே வெளிநாட்டவர்கள். அதுவும் இந்தப் பல்கலைக் கழகத்திற்கு இலங்கையிலிருந்து பட்ட மேற்படிப்பு படிக்க வந்தவன் இவன் ஒருவனே. ஆனால் இந்த நாட்டில் பிறந்து வளர்ந்த ஆசிய நாட்டுப் பரம்பரையைச் சேர்ந்த பலர் இங்கு படித்துக் கொண்டிருந்தார்கள்.

பிரசன்னா மீண்டும் நிமிர்ந்து யன்னலூடாக வெளியே பார்த்தான். தூரத்தில் நீண்டு வளர்ந்திருந்த கூம்பான அந்தச் சவுக்கு மரங்கள் பல்கலைக்கழகக் கட்டிடங்களுக்கு மேலும் மெருகூட்டிக் கொண்டிருந்தன.

அவன் ஒருபோதும் இவ்வளவு தூரம் மேற்படிப்பிற்காக வருவதாக எதிர்பார்க்கவில்லை. அவனுக்கு அரசாங்கம் கொடுத்த அந்த 'ஸ்கொலர்சிப்'பை பெரிதாக மதித்தான். வாழ்க்கையில் மேலும் முன்னேறுவதற்கு ஒரு வாய்ப்பாக அதைப் பயன்படுத்த வேண்டும் என்று நினைத்து இந்தச் சந்தர்ப்பத்தை ஏற்றுக் கொண்டான்.

வாழ்க்கையில் ஒவ்வொரு மனிதனுக்கும் சரியான சந்தர்ப்பம் என்பது அனேகமாக ஒரு முறைதான் கிடைக்கும். அதைச் சரியான முறையில் பயன்படுத்தாவிட்டால் அது வாழ்க்கையையே எங்கோ மாற்றிவிடும்.

பிரசன்னா மெதுவாய் நிமிர்ந்து மேசைப்பக்கம் திரும்பினான். அங்கே 'சிந்துவும் திலக்கும்' சிரித்துக் கொண்டிருந்தார்கள். 'அப்பா எப்ப வருவீர்கள் எங்களைப் பார்க்க' என்று கேட்பது போலிருந்தது பிரசன்னாவுக்கு.

பிரசன்னா பல்கலைக்கழகம் வந்து ஆறு மாதங்களுக்கு மேலாகி விட்டன. இன்னமும் அவன் லண்டன் போய் மனைவி அகல்யாவையோ, பிள்ளைகளையோ பார்க்க முடியவில்லை.

அவன் கவனம் படிப்பின் மேலிருந்தது.

அகல்யாவிற்கும் பிரசன்னாவைப்பற்றி நன்றாகத் தெரியும். அவன் கவனம் முழுக்க படிப்பில்தானிருக்கும் என்பதும் அவளுக்குத் தெரியும். வாழ்க்கையில் ஏதோ ஒன்றை விட்டுக் கொடுத்தால்தான் முன்னுக்கு வரலாம் என்பதும் அகல்யாவுக்குத் தெரியும். அதனால்தான் இந்தத் தற்காலிகப் பிரிவை மிகவும் பொறுமையாகத் தன் உணர்வுகளையெல்லாம் மென்று விழுங்கி விட்டு ஏற்றுக் கொண்டாள்.

தான் செய்த புண்ணியமோ என்னவோ, தனக்குக் கிடைத்த அன்பான கணவனைப்பற்றி ஒருபோதும் விட்டுக் கொடுத்துக் கதைத்ததில்லை. பிரசன்னா என்றால் அகல்யாவுக்கு உயிர். அவனது கடந்த கால வாழ்க்கையைப் பற்றி அறிந்து வைத்திருந்தும் கூட, ஒரு நல்ல கணவன் தனக்குக் கிடைத்த பெருமை அவளுக்கு.

பிரசன்னாவின் சாதுவான குணம், மென்மையான பேச்சு, மற்றவர் மனதை நோகடிக்காத தன்மை, இவையெல்லாம் அவளுக்குப் பிடித்திருந்தது.

அகல்யா அவனைப் பார்த்து அவனுக்குத் தெரியாமல் அவனை ரசிப்பதுண்டு. ஒரு நேர்மையான மனிதர் தனக்குக்

கணவனாகக் கிடைத்ததற்காக அவள் அடிக்கடி இறைவனைப் பிரார்த்திப்பதுண்டு.

அகல்யா பிரசன்னா தாம்பத்திய வாழ்க்கையில் முதலில் பிறந்தவன் 'திலக்'. திலக்கிற்கும் சிந்துவுக்கும் இரண்டு வயது வித்தியாசம்.

அகல்யாவின் தாய் தந்தை இருவரும் அவள் சிறு வயதாக இருக்கும்போதே இறந்து விட்டார்கள். அவளை வளர்த்து ஆளாக்கியது அவளது தந்தையின் தங்கை சிவமலர். சிவமலர் இவளை வளர்ப்பதற்காக ஒன்றிக்கட்டையாகவே வாழ்ந்து விட்டாள்.

இப்பொழுது அவளுக்கு வயது அறுபத்தி ஏழுக்கு மேலாகிவிட்டது. சுண்டிக்குளி தாண்டிப் போகவரும் கொழும்புத்துறையில் ஒரு சிறு வீட்டில் அவள் வசித்து வந்தாள்.

அகல்யா அடிக்கடி தொலைபேசி மூலம் அவளுடன் கதைப்பதுண்டு. தன்னை வளர்த்தெடுத்த மாமிமேல் அவளுக்கு அளவு கடந்த பாசம். இலங்கையிலிருந்து லண்டன் வரும்போது மாமியைவிட்டு வருவது அவளுக்குப் பெரும் கவலையாக இருந்தது.

பலமுறை அழுது விட்டாள். இரண்டு வருடங்களில் திரும்பி வந்து விடுவோம் என்று தனக்குத் தானே ஆறுதல் கூறிக் கொண்டாள் அகல்யா!

சிவமலர் அன்பாக அவளைக் கட்டிப் பிடித்து முத்தம் கொடுத்து, நீ வரும்போது நான் இருக்கிறேனோ இல்லையோ என்று இழுத்தது....., அகல்யாவுக்கு பெரும் வேதனையைக் கொடுத்தது.

அகல்யா சிவமலரை 'அம்மா' என்று கூப்பிடுவதுதான் வழக்கம்.

அம்மா ! நாங்கள் கெதியில் வந்து விடுவோம் என்றவள் பொங்கி வந்த உணர்வுகளை மென்று விழுங்க முடியாமல் அழுதே விட்டாள்.

பிரசன்னாவின் அறைக்கதவை யாரோ தட்டும் சத்தம் கேட்டது.

மல்லாந்து படுத்து சிந்தனையில் ஆழ்ந்திருந்தவன் அவசர அவசரமாக சேர்ட்டை எடுத்து உடம்பில் மாட்டிக் கொண்டு போய் அறைக் கதவைத் திறந்தான்.

அங்கே பைரவி நின்றிருந்தாள்.

அழகான ஒரு ஜீன்ஸும், மேலே கறுத்த மேல்சட்டையும் அணிந்து அவனைப் பார்க்க வந்திருந்தாள். "Hello பிரசன்னா" அவள் சொல்ல.....

"Hello" என்றவனுக்கு, அறைக்கதவை அடித்துச் சாத்தவேண்டும் போல் தோன்றியது.

அந்த அரைகுறைத் தமிழில் நான் "Shopping" போறேன், நீங்கள் வாறீங்களா?" அவள் பைரவி கேட்டாள்.

தனக்கு வேலையிருக்கிறது என்று சாக்குப்போக்குச் சொல்லித் தட்டிக் கழித்தவன் அறைக்கதவை மூடிவிட்டு "அப்பாடி" என்று பெருமூச்சு விட்டான்.

பைரவி இவனைப்போல கணனித் துறையில் MSc படிக்க வந்தவள்தான்.

பிரசன்னாவைக் கண்ட நாள் முதல் அவன் மேல் ஆசைப்பட்டு தனக்குள்ளே பல கனவுகளை வளர்க்க ஆரம்பித்து விட்டாள்.

பிரசன்னாவுக்கும் பைரவியின் போக்கில் ஏற்பட்ட மாறுதலைக் காண முடிந்தது.


அவள் அவனை நெருங்கி நெருங்கி வரும்போது பிரசன்னா விலகி விலகிச் சென்றான்.

பைரவிக்குத் தான் 'மணம் முடித்தவன்' என்று தெரிந்தும் கூட, அவள் நெருங்கி வருவது அவனுக்கு வியப்பாகத்தான் இருந்தது.

சில நேரங்களில் அந்தக் கணநேர உணர்வுகளை அடக்கவா அவள் நெருங்கி வருகிறாள் என்றுகூட நினைத்ததுண்டு.

இந்த நாட்டில் பிறந்த இவளைப் போன்றவர்களுக்கு மணம் முடித்த, மணம் முடிக்காத இளைஞர்கள் என்ற வேறுபாடு இல்லையா என்று அவன் நினைத்ததுண்டு.

'திலக் சிந்து'வின் படத்தைப் பார்த்துக் கொண்டு படுத்திருந்தவன் அப்படியே அயர்ந்து தூங்கி விட்டான்.



# 2

**கா**லை ஒன்பது மணிக்கு மேலாகிவிட்டது. கம்பளிக்குள் சுருண்டு படுத்திருந்த அவனுக்கு இன்னமும் படுக்கையை விட்டு எழும்பும் நோக்கத்தைக் காணவில்லை. 'அலாரம்' இரண்டாவது முறையாக இரண்டு நிமிடங்கள் தொடர்ந்து ஓசையைக் கிளப்பி மீண்டும் அடங்கிக் கொண்டது.

"இந்த வருடமும் சரியான குளிராக இருக்கு" அவன் தனக்குள்ளேயே முணுமுணுத்துக் கொண்டான். படுக்கையை விட்டு எழும்ப மனமில்லாமல் எழும்பியவன் கைகளை உயர்த்தி சோம்பலை முறித்துக் கொண்டு அறையின் யன்னலோரமாக சென்று வெளிப்பக்கத்தை எட்டிப் பார்த்தான்.

தைன் நதி அமைதியாய் ஓடிக் கொண்டிருந்தது. அந்த நதியைத் தாண்டி அடுத்த கரையோரமாய் நிமிர்ந்து எடுப்பாகக் காணப்பட்ட மலைகளும், மலைசார்ந்த நிலங்களையும் வெள்ளைப் பனி மூட்டம் முழுமையாக மறைத்திருந்தது. அவன் கண் வெட்டாமல் அந்த வெள்ளை பனி மூட்டத்தையே பார்த்துக் கொண்டிருந்தான். அதில்தான் அவனுக்கு எத்தனையோ அர்த்தங்கள் தொனித்தன.

"சீ இந்தக் குளிருக்குள், இந்த நாட்டில் இப்பிடியிருக்க வேணுமே . மனுசி பிள்ளையள் வேற இடத்தில்.....நான் வேற இடத்தில்..... ஏதோ பெரிசாப் படிச்சுப் பட்டம்

வாங்கினாலும் கடைசியாய்ப் போய் பெற்றோல் ஸ்டேசனில் அல்லது சுப்பர் மார்க்கட்டில்தான் முடிய வேணும். அதுவும் இந்தக் காலத்திலை கஷ்டம்…'' நினைத்துக் கொண்டே சமையலறைக்குள் நுழைந்தவனை

"Good Morning பிரசன்னா How are you this morning" என்ற குரல் வரவேற்றது.

"I am very good . Thank you" என்றவன் அவளை நிமிர்ந்து பார்த்தான்.

அவள் இரவு படுக்கைக்கு போகும் அந்த 'நைற்றியில்' மிகவும் அழகாகத்தான் இருந்தாள். மென்மையான அந்த "நைற்றி" அவளது அங்கங்களை அரைகுறையாக அப்படியே காட்டிக் கொண்டிருந்தது.

பிரசன்னா கண்வெட்டாமல் அவளையே பார்த்தான். வாயில் வந்த வார்த்தைகளை யெல்லாம் கொண்டு அவளைப் பேச வேண்டும் போல் அவனுக்கிருந்தது.

ஆனால் அவன் ஒன்றுமே சொல்லாமல் தனது அறையை நோக்கித் திரும்பி நடந்தான். "பைரவி" ராகத்தின் பெயரைக் கொண்டுபோய், போயும் போயும் அவளுக்கு அவளுடைய பெற்றோர்கள் வைத்திருக்கிறார்கள். அதன் அர்த்தம் கூட அவளுக்குத் தெரிந்திருக்குமோ தெரியாது'' அவன் வாய் முணுமுணுத்துக் கொண்டது.

அந்த நாலறை வீட்டில், இரண்டு பெண்களும் இரண்டு ஆண்களும் ஒவ்வொரு அறையில் வசித்து வந்தார்கள். பல்கலைக்கழகத்தால் பட்ட மேற்படிப்பு படிக்கும்

மாணவர்களுக்காக ஒதுக்கப்பட்டிருந்த பல வீடுகளில் ஒன்றுதான் பிரசன்னா வசித்து வந்த வீடு.

அவன் வசித்து வந்த வீட்டில் ஒரு இங்கிலீஷ் மாணவனும், ஜேர்மன் பெண் பிள்ளையும் பைரவியும் மூன்று அறைகளைப் பிடித்திருந்தார்கள். பைரவி ஹாஸ்டலில் இருக்க விரும்பாத காரணத்தால், ஹவுஸிங் கமிட்டிக்கு விண்ணப்பிக்க அவளை பிரசன்னா வசிக்கும் வீட்டில் ஒரு அறை கொடுத்து விட்டிருந்தார்கள்.

பிரசன்னாவின் அறைக்கதவு தட்டும் சத்தம் கேட்டது. அவன் எழும்பிப் போய் மெதுவாகத் திறந்தான். அதே பைரவி. அதே "நைற்றி" யில் அவனைப் பார்த்துச் சிரித்தாள்.

"May I come" அவள் கேட்டாள்.

"Yes sure" என்றவன் அவளை அறைக்குள் வருவதற்காக வழிவிட்டுக் கொடுத்தான்.

அவள் காலுக்கு மேல் கால் போட்டிருந்து, அவனைப் பார்த்தாள்.

அவனும் அவளைப் பார்த்தாள்

அவள் உதடுகளைக் கடித்துக்கொண்டு அவனைப் பார்த்துச் சிரித்தாள். அவன்
கண் வெட்டாமல் அவளைப் பார்த்தான்.

அந்த மெல்லிய 'நைற்றி 'யுடன் மிகவும் அழகாகத்தான் இருந்தாள்.

"Are you going for two O clock lectures" அவள் கேட்டாள்.

அவன் ஆம் என்று தலையாட்டினான்,

"I want to sit next to you" என்று சொல்லி விட்டு நகங்களைக் கடித்துக் கொண்டாள்

பிரசன்னா ஒன்றும் சொல்லவில்லை. அவனது தொண்டை வரண்டு விட்டது.

மென்மையான அந்தக் கரங்கள் அதில் மெல்லிய பிங்க் கலரில் பூசப்பட்டிருந்த கியுரெக்ஸ், மேலும் அவளுக்கு அழகைக் கூட்டிக் கொடுத்தது.

"பைரவி" அவன் மெல்லிய தாழ்ந்த குரலில் அவளை அழைத்தான்.

அவள் அவனைப் பார்த்தாள். அதில் எத்தனையோ அர்த்தங்கள்.....

"நான் இரண்டு பிள்ளைகளுக்கு தகப்பன். எனக்கென்று ஒரு மனைவி.... எனக்கென்று ஒரு குடும்பம் இருக்கு... நான் பலமுறை உங்களுக்கு சொல்லியிருக்கிறேன்."

அவன் நிமிர்ந்து பார்த்தான். அவள் அவனையே பார்த்துக் கொண்டிருந்தாள். பிரசன்னா தலையைக் குனிந்து கொண்டான்.

“நீ படித்து முடிய உனக்கென்று ஒரு குடும்பத்தை உருவாக்க வேண்டும் பைரவி. உனக்கென்று ஒரு கணவன், உனக்கென்று பிள்ளைகள், அதுதான் தமிழினத்தின் பண்பாடு. இந்த நாட்டில் எல்லாமே தலை கீழாகத்தான் நடக்கிறது.

என்மேல் ஆசைப்பட்டு அடிக்கடி ஒவ்வொரு சாட்டுப் போக்குகளுடன் அறைக்கதவைத் தட்டுவது, உள்ளே வந்து காமப் பார்வை பார்ப்பது, இவை யெல்லாம் பெண்களுக்கு அழகில்லை…”

பிரசன்னா நிமிர்ந்து பார்த்தான்.

அவளது கண்களில் நீர் முட்டியிருந்தது.

“I like you, I love you” அவள் சொல்லிவிட்டு விக்கிய வண்ணம் அறைக் கதவைத் திறந்து கொண்டு நடந்தாள்.

பிரசன்னா மௌனமாக அவள் போவதைப் பார்த்துக் கொண்டிருந்தான்.

**ப**ல்கலைக்கழகம் வந்த இரண்டாவது நாள் புதிய மாணவர்களுக்காக ஒழுங்கு செய்யப்பட்டிருந்த வரவேற்புபசாரத்தில்தான் பிரசன்னா பைரவியை முதன் முதலில் சந்தித்தான்.

கொச்சைத் தமிழில் அரைகுறையாகவும், அடிக்கடி ஆங்கிலத்திலும் கதைத்துத் தன்னை பிரசன்னாவுக்கு அறிமுகப்படுத்திய பைரவியை அன்றே அவன் ஓரளவு எடை போட்டு விட்டான். இருந்தும் அவள் ஒரு தமிழ்ப்பெண். தமிழ்ப்பெண்களுக்கு இருக்க வேண்டிய பண்பாடுகளின்

அரைவாசியாவது அவளுக்கு இருக்கும் என்று அவனுக்குத் தெரியும்.

அன்றைய புதிய மாணவர்களுக்கான வரவேற்புபசாரத்தில் இரவு எட்டு மணிபோல் விருந்து முடிவடைய "டிஸ்கோ" ஆட்டம் தொடங்கியது.

ஒரு பக்கத்தில் ஒதுங்கி நின்று ஆட்டத்தைப் பார்த்துக் கொண்டிருந்த பிரசன்னாவை நோக்கி அவள் நடந்து வந்தாள். வேறுபட்ட நிற பல்புகள்மாறி மாறி பளிச்சென்று பாட்டிற்கும் ஆட்டத்திற்கும் ஏற்ப மின்னி மறைய அவள் நடந்து வந்த நடைகூட அப்போது அழகாகத்தான் இருந்தது.

"Why don't you come and dance with me " என்று பைரவி கேட்க

"Yes of course" என்றவன், அவளது கரங்களைப் பிடித்துக் கொண்டு மேடைக்குச் சென்றான். அவள் அவனது இடுப்பை வலது கையால் சுற்றிப்பிடித்துக் கொண்டு இடது கையை தோளின் மேல் போட்டுக் கொண்டு ஆட அவனும் ஆடினான். சிறிது நேரம் செல்ல அவளது இடது கை அவனது தலையை வருடிக் கொடுத்தது. அவள் முகத்தை அவனது நெஞ்சில் புதைத்துக் கொண்டு ஆட முற்பட அவன் சிறிது விலகிப்போனான்.

"பிரசன்னா ! You are very smart" அவள் சொல்லிக் கொண்டு அவன் முகத்தில் உரச அவளது வலக்கையின் மென்மையான விரல்கள் அவன் இடுப்பை இறுக்கமாக அணைத்துத் தன்னுடன் சேர்க்க முற்பட. அவளது

மார்பகங்கள் அவனது நெஞ்சில் உரச, அவள் அவனை இறுக்கமாக அணைக்க முயல, அவன் சற்று விலகிப் போய்

" Now I have to go home" என்றவன் அவளது பிடியிலிருந்து விடுபட்டவனாய்

"See you tomorrow bye பைரவி" என்று சொல்லி விட்டு வீட்டை நோக்கி நடக்க ஆரம்பித்தான்.

ஆனால் பைரவி ஏதோ ஒன்றை இழந்து விட்டவள் போன்று முகம் மெல்லியதாய்ச் சிவக்க, உதடுகளைக் கடித்த வண்ணம் பொங்கியெழுந்த உணர்ச்சிகளை மென்று விழுங்கிவிட்டு ஏக்கத்துடன் கண் வெட்டாமல் அப்படியே அவன் போவதை சிலையாய் நின்று பார்த்த வண்ணமிருந்தாள்.

...



# 3

லண்டனில் 'டூற்றிங் பேக்' தாண்டி டூற்றிங் நோக்கி வரும்போது இடப்பக்கமாகப் போகும் 'டொரிங்டன்' ரோட்டில் எட்டாவது வீட்டில் அகல்யா ஒரு றூமில் வசித்து வந்தாள். அதே வீட்டில் இருந்த ஒரு றூமில் இரண்டு இளசுகளும், மற்றச் சிறிய பொக்ஸ் றூமில் சுந்தரியும் வசித்து வந்தார்கள். யோசப் என்பவர் தனக்கிருந்த ஐந்து வீடுகளில் ஒன்றில்தான் இவர்களை வாடகைக்கு அமர்த்தியிருந்தார்.

அகல்யாவின் இரண்டு சிறுசுகளான 'சிந்துவும், திலக்கும்' ஹோலில் இருந்து றிமோட் கன்ரோல் காருடன் விளையாடிக் கொண்டிருந்தார்கள்.

சுந்தரி பாவம் மூன்றரை லட்சம் காசு கட்டி ஏஜென்சியால் லண்டன் வந்து ஒன்றரை வருஷம் ஆகிவிட்டது. கலியாணம் முடித்து நாலு மாதங்களிலேயே சுந்தரி இங்கு வந்து விட்டாள்.

சுந்தரியின் கணவன் உடனே வேலையை ராஜினாமாச் செய்து விட்டு இங்கு வந்தால், பத்து வருடங்கள் வேலை செய்த பின்பும் பென்சன் கிடைக்காமல் போய் விடும் என்பதால் இரண்டு வருடங்கள் கழித்து லண்டன் வர முடிவு செய்திருந்தார். ஆனால் சுந்தரியை வேளைக்கே லண்டனுக்கு அனுப்பி விட்டார். சுந்தரியின் சகோதரங்களில் ஒருவர் இங்கு

இருந்ததால் அவள் இரண்டு மாதங்கள் தம்பியுடன் இருந்து விட்டுப் பின் தனி றூம் எடுத்து வந்து விட்டாள்.

மத்தியானம் ஒன்றரை மணியாகிவிட்டது. எனினும் வானம் மங்கலாக ஒளியற்றுத்தான் கிடந்தது. ஞாயிற்றுக் கிழமையாதலால் அகல்யா அன்று வேலைக்குப் போகவில்லை. சமையல் வேலையை முடித்துவிட்டு ஹோலில் பிள்ளைகள் இருவரும் விளையாடுவதை ரசித்துப் பார்த்துக் கொண்டிருந்தாள்.

வாசற்கதவை யாரோ தட்டும் சத்தம் கேட்டது. அகல்யா யன்னலால் எட்டிப் பார்த்து விட்டுக் கதவைத் திறந்தாள்.

தம்பிமுத்து வாத்தியார் வெற்றிலை சப்பிக் காவி பிடித்திருந்த பற்களைக் காட்டிச் சிரித்துக் கொண்டே வீட்டினுள் வந்தார்.

''தங்கச்சி, பிரசன்னா எப்ப இனி இந்தப் பக்கம் வருவான்?''

''அவருக்கு Next month தான் three week holiday'' அகல்யா சொல்லிவிட்டு தம்பிமுத்து வாத்தியாரைப் பார்த்தாள்.

தம்பிமுத்து வாத்தியார் வெற்றிலையை சப்பிக் கொண்டு அகல்யாவைப் பார்த்தார். ''தங்கச்சிக்கும் இங்கு வந்த பிறகு தமிழ் மறக்கப் பார்க்குது போல இருக்கு'' சொல்லிவிட்டுச் சிரித்தார்.

''மாஸ்டருக்கு என்ன குடிக்கக் கொண்டு வாறது''

“பிளேன் கோப்பி,, இரண்டு கரண்டி சீனி தங்கச்சி. இந்தக் குளிருக்கு கோப்பிதான் கொஞ்சமாவது சூட்டைக் கொடுக்கும்.”

அகல்யா குசினியை நோக்கி நடந்தாள். திலக் தம்பிமுத்து வாத்தியார் அருகில் வந்து இருந்து கொண்டான்.

“How are you uncle” திலக் கேட்டான்.

“நலம் தம்பி” தம்பிமுத்து வாத்தியார் சுத்தத் தமிழில் அவனுக்குச் சொல்லிவிட்டு றிமோட் பட்டனை அழுத்தி ரிவி சனலை மாற்றினார்.

தம்பிமுத்து வாத்தியார் மல்லாகம் கலவன் பாடசாலையை ஒரு கலக்குக் கலக்கியவர். அந்த நாட்களில் வலது கையில் தமிழ்ப் புத்தகமும் இடது கையில் பிரம்புமாக அவர் ஒரு நடை நடந்து வரும்போதே மாணவர்கள் விலகிப் போவார்கள்.

இப்பொழுது அவருக்கு வயது எழுபத்தியிரண்டு. சுன்னாகத்தில் எண்பத்தியேழாம் ஆண்டுவரை இருந்துவிட்டு மனைவி காலமாகிய பின் பிள்ளைகள் அவரை இங்கே கூப்பிட்டு தங்களுடன் வைத்துக் கொண்டார்கள்.

பிரசன்னா தம்பிமுத்து வாத்தியாரின் ஒரு மாணவன். வாத்தியாருக்கும் பிரசன்னா மேல் அதிக பிடிப்பு. பிரசன்னா பல்கலைக்கழகத்தில் இருந்ததால், அவர் அடிக்கடி வந்து அகல்யாவைப் பார்த்துவிட்டுப் போவார்.

அகல்யா 'கோப்பிக்' கோப்பையுடன் வாத்தியாரை நோக்கி வந்தாள்.

வாத்தியாருக்கு ஆங்கிலம் அதிகம் பிடிபடாவிட்டாலும் ரிவியைப் பார்த்து ரசித்துக் கொண்டிருந்தார்.

அகல்யா கோப்பியை வாத்தியாரிடம் நீட்டினாள்.

''நன்றி தங்கச்சி'' என்றவர் நிமிர்ந்து பார்த்தார்.

''தங்கச்சி இந்த நாட்டில் இந்த குளிருக்குள்ளை, மூட்டை சுமக்கிறவன் மாதிரி ஒன்றுக்கு மேல் ஒன்றாக எத்தனை உடுப்புப் போட்டுப் போர்த்தி நடமாட வேண்டியிருக்கு. இதெல்லா்ம் தலைவிதி.. எங்கடை நாட்டிலை வேட்டியுடனும் பெனியனுடனும் மாந்தோப்பில் ஈசிச் செயர்ரில் படுத்திருந்து சுருட்டுக் குடிக்கிற செளகரியம் இங்கை வருமே. இனி என்ன செய்யிறது பிள்ளைகள் போன பக்கம் போக வேண்டியதுதான் என்று நினைத்துக் கொண்டு காலத்தைப் போக்க வேண்டி இருக்கு''

அகல்யா சிரித்துக் கொண்டே தலையாட்டினாள்.

தம்பிமுத்து வாத்தியார் மூச்சு விடாமல் பேசத் தொடங்கினார். தனக்கிருக்கும் மனக்கவலைகள், நாட்டு நிலைமை இவையெல்லாம் பற்றிச் சொந்தப் பிள்ளைகளிடமே பேசாத வாத்தியார், எல்லாம் சொல்ல அகல்யாவைத்தான் தேடி வருவார். அகல்யாவும் அவருக்குப் பிள்ளை மாதிரித்தான்.

"தங்கச்சி உனக்கு இந்த நாட்டிலை எத்தினை நடக்கிது தெரியுமே. கேடு கெட்ட நாடு. எங்கடை இளசுகளும் இதையெல்லாம் பார்த்துப் பழகி இப்ப தங்களை விட யாருமில்லை எண்ட மாதிரித்தான் திரியுதுகள்."

"நானும் ஒவ்வொரு நாளும் அந்த ரூற்றிங் ஸ்டேசனைத் தாண்டித்தான் போறனான். முந்திக் கொஞ்சக் காலம் கறுத்த காப்பிலிகள்தான் கம்பியிலை ஏறி இருந்தார்கள். இப்ப பார்த்தால் எல்லாம் எங்கடை இளசுகள். அதிலை சில இளசுகளுக்கு என்னையும் தெரியும் போல இருக்கு"

"இப்ப எங்கடை இளசுகள்தான் சரியாக ஸ்டேசன் வாசலுக்கு முன்னால் கம்பியில் ஏறியிருந்து, ஒற்றைக் காதிலை தோடும் குத்திக்கொண்டு, மற்றக் கையிலை சிகரட் வைத்து ஊதிக்கொண்டு வாற போற எங்கடை தமிழ் பெட்டையளோடை ஒரே சேட்டை விடுறாங்கள்."

"இவங்களையெல்லாம் என்ன செய்ய. அவங்கடை தலையிழுப்பையும் பார்த்தியே தங்கச்சி.. இந்த நாட்டிலை இவங்களோடை எதையும் வாய் திறந்து கதைக்க இயலாத நிலையாய் இருக்கு. இதுகளெல்லாம் தறுதலைகளாகி திரியுதுகள்".

"மாஸ்டர் உங்களுக்கென்ன, நீங்கள் ஒன்றும் அவங்களுக்குச் சொல்ல முற்படாமல் உங்கடைபாட்டிலை தெரியாத மாதிரி போவதுதான் புத்திசாலித்தனம். அல்லாவிட்டால் அவங்கள் உங்களுக்கும் மரியாதை தரமாட்டாங்கள்" அகல்யா சொன்னாள்.

“என்ன எனக்கு அவங்கள் மரியாதை தாறதோ. உனக்கு தெரியுமே தங்கச்சி, போன புதன்கிழமை நான் அதாலை போனபோது தறுதலைகளில் ஒன்று சொல்லுது, ‘வேட்டி கட்டியவருக்கு இந்த டிரவுசர் ஜீன்ஸ் அந்த மாதிரித்தான் இருக்குதடா”

மற்ற இரண்டு கம்பியிலை இருந்தபடி சிகரட் ஊதிப் புகையை முகத்திலை விடுதுகள்”

“தாய் தகப்பன்மார் காணியை விற்று, கடனை வாங்கிப் பிள்ளைகளாவது தப்பிப் போய் எங்காவது சந்தோஷமாக உயிருடன் வாழட்டும் என்று ஏஜென்சிக்கு காசு கட்டி பிளேனிலை ஏத்தி விட, இதுகள் இங்கை வந்து அவர்கள் கொடுக்கிற படிக்காசை வாங்கிக் கொண்டு, அங்கேயும் எங்கடை நாட்டிலை சொந்தக் காலிலை நிற்க வழியில்லாமல் இங்கேயும் வந்து சொந்தக் காலில் நிற்க விருப்பமில்லாமல் ரூற்றிங் ஸ்டேசன் கம்பிகளிலை ஏறியிருக்குதுகள்”

“தமிழினத்துக்கு என்ன சாபமோ தெரியாதுபிள்ளை. இல்லாவிட்டால் இப்பிடியெல்லாம் நடக்குமே.”


“எங்கடை நாட்டிலையாவது பெடியள் கொஞ்சம் பெற்றோருக்கு பயந்து கட்டுப்பாடுகளுடன் வளர்ந்து வந்தார்கள். இங்கை அவிட்டு விட்ட மாடுகள் மாதிரி கடைப்பிளியளாய் திரியுதுகள் தம்பிமுத்து வாத்தியார் மூச்சு விட்டார்.”

“மாஸ்டர் நீங்கள் அப்பிடிச் சொல்லக் கூடாது. இங்கை வந்த எத்தனையோ பெடியள் படித்து அடக்க ஒடுக்கமாகவும் இருக்கிறார்கள்”.

“இல்லை தங்கச்சி நான் எல்லாப் பெடியளையும் அப்பிடிச் சொல்லேல்லை. இங்கு வந்ததிலை முப்பது வீதம் இப்பிடித்தான் திரியுதுகள். ஒரு எழுபது வீதம்தான் படித்து பண்பாடாக தமிழனாக இருக்குதுகள்.”

ரெலிபோன் அடிக்கத் தொடங்கியது.

அகல்யா “ அத்தானின் கோலாக இருக்க வேணும்.” என்று சொல்லிக் கொண்டு எழும்பி நடக்க, தம்பிமுத்து வாத்தியாரும் அடுத்த ஞாயிறு வாறன் என்று சொல்லிக் கொண்டு எழும்பி நடந்து கதவைத் திறந்தார்.



# 4

இரவின் இனிய ஆதிக்கம் பரவ ஆரம்பிக்கும் நேரம் வானம் தூரிகைகளைக் கொண்டு செவ்வண்ண மை தீட்டியது போல் வர்ணஜாலம் காட்டியது. பின்னர் அந்தச் செவ்வண்ணக் கோலம் மெதுவாய் மறைந்துவிட தங்கத்தின் பளபளப்பைக் காட்டும் பொன்வண்ண மஞ்சள் நிறம் படர்ந்தது. அந்தப் பளிச்சென்ற மஞ்சள் வர்ணம் நிலமங்கையின் மேல் படிந்து புத்தொளி காட்டிற்று.

பிரசன்னா நிமிர்ந்து பார்த்தான். தைன் நதியின் இரு கரைகளையும் ஒன்றிணைக்கும் அந்த நீண்ட பாலத்தில் சிறியதாய், மெல்லியதாய் ஒரு புகையிரதம் ஊர்ந்து வந்து கொண்டிருந்தது.

அவன் வாழ்க்கையும் ஒரு பாலம் மாதிரித்தான். எத்தனையோ மேடு பள்ளங்கள் நிறைந்ததாக விருந்தது. கடந்து வந்த பாதையில் நடந்து முடிந்த நாட்களை எண்ணிப் பார்த்தான்.

அந்த நாட்கள், மீண்டும் திரும்பி வராத அந்த நாட்களை நினைக்கும்போது .... ஏக்கங்கள் பெரு மூச்சுக்களாக மாற கைகள் இரண்டையும் தலைக்குச் சாய்வாகக் கொடுத்து அந்தப் புற்றரையில் படுத்திருந்தான் பிரசன்னா.

மெல்லியதாய் வீசி வந்த குளிர் காற்று அவன் முகத்தை முத்தமிட்டு ஆறுதல் சொல்லிப் போயிற்று.

வானத்தை அண்ணாந்து பார்த்தான் பிரசன்னா. தங்கத்தின் பளபளப்பைக் காட்டிய வானத்தை இருள் கவ்வியிருந்தது. இருந்தும் இடையிடையே பரவலாக வெண் முகிற் கூட்டங்கள் படர்ந்திருந்து இருள் வானுக்கு அழகூட்டிக் கொண்டிருந்தன.

கண்களை இறுக மூடிக்கொண்டான் பிரசன்னா. காலத்தின் கோலங்கள், வரைகோடுகளாக அவன் மனதிற்குப்பட்டன.

''சே என்ன உலகம் இது'' அவன் நினைத்துக் கொண்டான். மெல்லியதாய் கண்களைத் திறந்து பார்த்தான்.

வெண்முகிற் கூட்டத்தின் நடுவே 'ஆரதி' மென்மையான அந்த நீண்ட கூந்தல் விரிந்த நிலையில் அவனைப் பார்த்துச் சிரித்தாள்.

''பிரசன்னா, வாழ்க்கை என்பது பல அத்தியாயங்களைக் கொண்ட ஒரு கதைப்புத்தகம் மாதிரி !. அதில் சிரித்து மகிழ வேண்டிய அத்தியாயங்களும் உண்டு. அழுது மறக்க வேண்டிய அத்தியாயங்களும் உண்டு'' சொல்லி விட்டு அவள் சிரித்தாள்.

பிரசன்னா கண்களை இன்னும் இறுக மூடிக்கொண்டான். ஆரதி அந்த வெண்முகிற் கூட்டத்திற்கிடையே நடந்து வந்தாள். அவனை நோக்கி , மெல்லிய இடை அசைந்தாட கைகளை நீட்டிய வண்ணம் ''பிரசன்னா'' என்று சத்தமிட்டபடியே அவனை நோக்கி நடந்து வந்தாள்.

பிரசன்னா கண்களைத் திறந்து வானத்தைப் பார்த்தான். வானத்தின் கறுத்த உள்ளாடையினூடாக வெள்ளிப் பதக்கங்கள்

போன்று நட்சத்திரங்கள் தலை நீட்டத் தொடங்கியிருந்தன. வெண் முகிற் கூட்டம் லேசாக அசைந்து கொண்டிருந்தது.

லேசாகக் கண்களை கசக்கிக் கொண்டான் பிரசன்னா.

அவள் அவனை நெருங்கி விட்டாள். ஆமாம்! அந்தச் சிறிய முத்துப் பற்களைக் காட்டி அவள் அவனைப் பார்த்துச் சிரித்தாள்.

"பிரசன்னா! என்ன ஒரு மாதிரி இருக்கிறீங்கள்! நான்தான் என்றும் உங்கள் பக்கத்திலேயே இருக்கிறேனே" சொல்லிவிட்டு இரண்டு கைகளையும் நீட்டினாள்.

அவன் விரல்களைக் கோர்த்து அவளை அணைக்க ஆரதி மெல்லிய அந்தச் செவ்விதழ்களை விரித்து அவன் கன்னத்தில் முத்தமிட்டாள்.

கண்களைத் திறந்து பார்த்தான் பிரசன்னா! அவனையறியாமலேயே அவனது கண்களில் கண்ணீர்த்துளிகள் பனித்திருந்தன.

வானம் நன்றாக இருட்டியிருந்தது. இருந்தும் வெண்முகிற் கூட்டங்கள் பரவலாக அங்குமிங்கும் அசைந்து கொண்டிருந்தன.

புல் தரையில் எழும்பி கால்களை மடக்கி இருந்து கொண்டான் பிரசன்னா.!

அவனது வாழ்க்கையும் கூட ஒரு தொடர் கதையாகத்தான் மாறிக்கொண்டிருந்தது. அவனுக்கும் கூட எழுதும் வல்லமை இருந்திருந்தால் தன் கதையை ஒரு தொடர்கதையாக்கி இருக்கலாம்.

ரோஜாப் பூக்களதும், கார்னேசன்களதும் நறுமணம் மூக்கைத் துளைக்க மறுபக்கம் திரும்பிப் பார்த்தான் பிரசன்னா.

நீண்டு உயரமாகத் தோற்றமளித்த அந்தப் பல்கலைக்கழகத்தின் ஒரு கட்டடத்தின் வெளிப்பக்க விளக்குகள் பளிச்சென்று மின்னி, பளிச்சென்று மறைய, அந்த வெளிச்சத்தில் பல ஜோடிகள் ஆங்காங்கே அமர்ந்திருந்து ஒருவரையொருவர் இறுக்கமாக அணைத்துத் தழுவுவது அவன் கண்களுக்குத் தெரிந்தது.

பிரவாகமாகப் பொங்கும் உணர்ச்சிகளை அடக்கிக் கொண்டு தலையைக் கோதிக்கொண்டான் பிரசன்னா. ஆங்காங்கே ஆங்கில வசனங்கள் காற்றோடு கலந்து வர அவன் தனது Lectures Notes ஐ எடுத்துக்கொண்டு வீடு போவதற்காக எழும்பி நடந்தான்.

அறைக்கதவை திறந்த அவனுக்கு வெள்ளைக் கவரில் முத்துப் போன்ற எழுத்துக்களைக் கண்டதும் மனைவியின் கடிதம் என்று அவனுக்குப் புரிந்து விட்டது.

கவரைப் பிரித்துக் கடிதத்தைப் பார்த்தான்.

'அகல்யா தான்! அவன் மேல் எத்தனை அன்பு வைத்திருக்கிறாள் என்பதற்கு அந்தக் கடிதம் சான்று பகர்ந்தது.'

அவள் சின்னப்பிள்ளை மாதிரி மனசில் வந்ததையெல்லாம் வசனங்களில் அவனுக்கு எழுதியிருந்தாள்.

'அத்தான்! பல நாட்களாக உங்களைக் காணாதது எனக்கு என்னவோபோல் இருக்கிறது. இன்னும் ஒரு கிழமை. அந்த ஏழு நாட்கள் எப்படித்தான் போகப்போகிறதோ தெரியாது. நீங்கள்

விடுதலையில் வரும் நாட்கள் கிட்டக்கிட்ட ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு கணப்பொழுதாக எனக்குத் தெரிகிறது.

இங்கு 'சிந்துவும், திலக்கும்' சுகமாக இருக்கிறார்கள். போன ஞாயிறு தம்பிமுத்து மாஸ்டர் இங்கு வந்து எங்களைப் பார்த்து விட்டுப் போயிருந்தார். நீங்கள் இங்கு வந்ததும் தரும் அந்த முத்தத்தை எதிர்பார்த்து உங்கள் அரவணைப்புக்காக ஆவலுடன் காத்திருக்கிறேன்.'

பிரசன்னா கடிதத்தை படித்து மேசையில் போட்டான்.

அவனது மனம் ஒரு நிலைப்பட்ட நிலையில் இல்லை. சிகரற் ஒன்றைப் பற்ற வைத்துக் கொண்டான்.

'அகல்யா' குழந்தையுள்ளம் படைத்தவள். தன்னுயிரை பிரசன்னாவுக்காக விடக்கூடியளவு அன்பு அவன் மீது வைத்திருந்தாள்.

மென்மையான உள்ளம் படைத்த அவளுக்கு எத்தனையோ எதிர்பார்ப்புகளும், ஏமாற்றங்களும் காத்துக் கொண்டுதானிருந்தன.

பிரசன்னா சேர்ட்டைக் கழற்றி ஹங்கரில் போட்டான்.

அப்பொழுது யாரோ கதவைத் தட்டும் சத்தம் கேட்டது. சேர்ட்டை திரும்ப எடுத்துக் கொழுவிக் கொண்டு சென்று கதவைத் திறந்தான்.

அங்கே பைரவி சிரிப்புடன் அவனைப் பார்த்தாள். இந்தமுறை அவன், அவள் கேட்காமலேயே வழி விட்டுக் கொடுக்க அவள் சென்று அவனது கட்டிலில் அமர்ந்து கொண்டாள்.

சிறிது நேர மௌனம். அவன் 'சிகரட்டை' உள்ளெடுத்து புகையை சுருள் சுருளாக வெளியில் விட்டுக் கொண்டிருந்தான்.

பைரவி அவனைப் பார்த்தாள். சில கணங்கள் கண் வெட்டாமல் அவனையே பார்த்தாள்.

"What happened to you பிரசன்னா?" அவள் கேட்டாள்.

"Nothing" அவன் சொன்னான்.

"Something wrong with you today" அவள் சொன்னாள்.

அவன் பெரிதாகச் சிரித்தான். பின் ஏதோ நினைத்தவனாய் மௌனமானான். ஆனால் அவனது கண்களில் பனித்த கண்ணீர்த்துளிகள் அவனைக் காட்டிக் கொடுத்தன.

"Are you crying? silly பிரசன்னா" அவள் சொன்னாள்.
அவன் நிமிர்ந்து அவளைப் பார்த்தான். முகத்தைச் சுருக்கி அவளை பார்த்தான். அவள் உதடுகளைக் கடித்துக் கொண்டு தலையைக் குனிந்து கொண்டாள்.

மெல்லியதாய் அவள் அணிந்திருந்த Blouse உம், கட்டையாய் போட்டிருந்த Skirt உம் அவளது அங்கங்களின் அழகை மெருகூட்டிக் கொண்டிருந்தன.

"பிரசன்னா" மெல்லியதாய் அவள் கூப்பிட்டாள்.

"What happened to you " அவள் அவனிடம் திரும்பவும் கேட்டாள்.

அவன் அவளை நிமிர்ந்து பார்த்துவிட்டு தலையைக் குனிந்து கொண்டான்.

அவள் கட்டிலை விட்டெழும்பி அவனை நோக்கி வந்தாள்.

அப்பொழுதும் அவன் மௌனமாகவே இருந்தான்.


அவள் தன் கண்களால் அவன் கண்களை நேருக்கு நேர் பார்த்தாள். சில கணங்கள் கண்களை வெட்டாமல் அவனையே பார்த்தாள்.

பின் முழங்காலில் மண்டியிட்டிருந்து இரண்டு கைகளால் முகத்தை உயர்த்தி அவனைப் பார்த்தாள்.

"You are a funny man பிரசன்னா" சொல்லிவிட்டு அவள் அவன் முகத்தில் "உச்" சென்று முத்தமிடப்போக, அவன் அவளை விலத்திவிட்டு முறைப்புடன் நிமிர்ந்து அவளைப் பார்த்தான்.

அப்பொழுது அவள் கைகள் நடுங்க, பிரவாகமாகப் பொங்கும் உணர்ச்சிகளை மென்று விழுங்கி விட்டு அவனைப் பார்த்துச் சிரித்தாள்.

☞ ...



# 5

அகல்யா திரைச் சீலையை இழுத்துவிட்டு ஜன்னலின் ஊடாக வெளியே பார்த்தாள். தெருவிளக்குகள் இன்னும் எரிந்து கொண்டிருந்தன. இருந்தும் தெருவெங்கும் ஒரே பனிமூட்டம்.

‘சிந்துவும் திலக்’ கும் ஆழ்ந்த நித்திரையில் இருந்தார்கள்.

அவள் தேனீர்க் கோப்பையுடன் வந்து ஹாலில் இருந்து கொண்டாள்.

அகல்யாவின் இதழ்கள் மெல்ல விரிந்து கோப்பையின் மேல் படிந்து அழகாய்ச் சிவந்தன.

அவள் அழகைத் தூண்டும் விதமாய் சிவந்த உதட்டில் கட்டிய அரும்பு கலையாமல் அவள் கண்கள் சிந்தனையில் ஆழ்ந்தன.

உருண்டையான முகத்தின் அழகும், காதோரம் ஒட்டிச் சுருண்ட கேசச் சுருளும், கன்னங்களில் சிவப்புத் திட்டும், மெழுகு போன்ற சந்தண வெண்மையில் பழுபழுத்த கழுத்தும் மேலும் அவளுக்கு மெருகூட்டிக் கொண்டிருந்தன.

மெதுவாய் சறுக்கிச் சற்று உள்ளே செற்றியில் நகர்ந்து உட்கார்ந்து கொண்டாள். நிகழ்ச்சிகளில் திரண்டெழுந்த பழைய நினைவுகள், அவன் ஞாபகமாகத் தோன்றும் உணர்ச்சிகள் உருக்கொண்டாற்போல் இருந்தது.

அவள் வாழ்க்கையில் நாளை என்பது எத்தனை துடிப்பு மிகுந்தது. இப்படி எத்தனை நாட்கள் நிறைந்து கிடக்கின்றன அவளது வாழ்க்கையில்.

கடந்த காலத்தை, நேற்றைய தினங்களை, நாளை மலரும் நிகழ்ச்சிகளை எதிர்காலத்தின் கனவுகளை நினைத்துப் பார்த்தாள் அகல்யா.

கடந்ததை நினைத்தபோது ஏற்பட்ட நுட்பமான உணர்ச்சிகள், நாளை அவள் வாழ்க்கையில் விரியப்போகும் அதன் நிழல்கள்! அந்த நினைவில் இன்று நெஞ்சில் கனமாகித் தூங்கும் மனம் நிறைந்த எண்ணங்கள்!

ஜன்னலருகே சாய்ந்து வெளியே பார்த்தாள் அகல்யா. புதிதாக நட்டிருந்த அந்த ரோசாச் செடி காய்ந்துபோய், அந்தச் செடியில் இரண்டொரு பசுந்துளிர்கள் காண ஆரம்பித்தன !. அது நாளையின் சின்னமாகவிருக்க, கனத்த சூடான பெருமூச்சு அவள் தொண்டையை வறட்டி வெளி வந்தது.

அவள் பிரசன்னாவின் மேல் வைத்திருந்த தூய்மையான அன்பு. அதற்குச் சான்றாக அயர்ந்து தூங்கும் இரு சிறிய உள்ளங்கள், எல்லாம் தன்னை விட்டு விலகிப் போவதைப் போன்ற ஒரு பிரமை.!

அழகான அந்த உதடுகளை எடுத்து நாக்கால் நனைத்து திரும்பவும் ஈரமாக்கிக் கொண்டாள் அகல்யா.

இப்பொழுது தெருவிளக்குகள் அணைந்து விட்டன. மென்மையான செங்கதிர்கள் வானத்தில் பரவ ஆதவன் தலை நீட்டி கொண்டிருந்தான்.

அகல்யா! மென்மையான உள்ளம் கொண்டவள், அவளது எண்ணங்கள் அவன் மேல் நிலைத்திருந்தன. அவன் வேறு யாருமில்லை. அவளது அருமைக் கணவன் பிரசன்னா!

தேனீர்க் கோப்பை வெறுமையாகி விட்டது. வறண்டிருந்த தொண்டை கொஞ்சம் ஈரமாகிவிட்ட பிரமை அவளுக்கு.

மனநினைவுகளின் அலைகள் அடித்து வர அவள் அந்த நினைவில் மதிமயங்கி தனக்குள்ளே சிரித்த வண்ணமிருந்தாள்.

அந்த முதல் நாள். அவன் கம்பீர நடை நடந்து வந்த நாள். அவள் கண்வெட்டாமல் அவனைப் பார்த்து மயங்கிப் போன நாள்.

ஆமாம் ! காலங்கள் உருண்டோடியும் நினைவலைகள் இசை மீட்ட அவள் அப்படியே அவனை நினைத்தாள். பிரசன்னாவை நினைத்துப் பார்த்தாள்.

கடந்துபோன நாட்களை நினைக்கும்போதுதான் எத்தனை இன்பம்.

அன்று அவள் இருபது வயது நிரம்பிய இளம் பருவப் பெண். இளமையின் துடிப்பும், பருவத்தின் கொந்தளிப்பும் நிரம்பிய வயது.

Advance level படித்துவிட்டு அதற்கு மேல் படிக்க வசதியில்லாமல் குடும்பத்தின் மூத்தவளாய் குடும்பப்பொறுப்பை ஏற்று கொழும்பு வந்து ஓர் Export கம்பனியில் 'கிளார்க்' ஆக வேலை செய்து கொண்டிருந்தாள்.

வாழ்க்கையில் படிப்பினைகளும் அனுபவங்களும் தான் ஒருவருக்கு அறிவையும் சிந்திக்கும் தன்மையையும் கூட்டுகிறது.

இவள் 'அகல்யா' அனுபவமில்லாத ஒரு இளம் பெண்.

பார்ப்பதற்கு அழகான மென்மையான ஒரு இளங்கொடி.

அன்று ஒரு திங்கட்கிழமை அவள் வேலை செய்யும் Marketing டிபார்ட்மென்ட் மனேஜர் மாற்றலாகிப் போய் புதிய மனேஜர் வரப் போகும் அந்த நாள்.

பழைய மனேஜர் கொஞ்சம் வயதானவர். கோபம் என்பதே வராத சுபாவம் கொண்டவர். அகல்யாவின் வயதில் அவருக்கு ஒரு மகள் கூட இருந்தாள். அகல்யாவையும் அவர் 'மகள்' என்றுதான் அன்புடன் அழைப்பார்.

அகல்யா மனதிற்குள் நினைத்துப் பார்த்தாள். இனிவரப் போகும் அந்தப் புதிய மனேஜரும் அன்பாக கோபமில்லாதவராக இருக்க வேண்டும் என்பதுதான் அவளது ஆசை.

ஒருவகையில் பழைய மனேஜர் மாற்றலாகிப் போனது அகல்யாவைப் பொறுத்தவரை ஒரு பெரிய இழப்பாகத்தானிருந்தது. பெற்றோரைப் போல் தன்மேல் அன்பு காட்டிய அந்த மனேஜர் போவது அவளுக்கு கவலையாகத்தான் இருந்தது.

பழைய மனேஜர் போவதற்கு முன் நடந்த அந்தப் பிரியாவிடையில் அவர் உரையாற்றியபோது அவள் அழுதே விட்டாள்.

"ஒரு ஸ்தாபனம் ஒரு குடும்பத்தைப் போன்றது. ஒரு குடும்பத்தில் மனைவி, பிள்ளை, என்ற பாசம் வருகிறது. ஒரு ஸ்தாபனத்திற்கு, நாங்கள் வேறுபட்ட திக்கிலிருந்து வந்து சேர்ந்துள்ளோம். இருந்தும் எங்களை அறியாமலேயே எங்களுக்குள் அன்பு பின்னிக் கொள்கிறது. இது மனித பலவீனமல்ல. நடைமுறையின் வாசனை. ஒருவருடன் ஒருவர் பழகும்போதுதான் ஒருவரைப் பற்றி மற்றவருக்குத் தெரிகிறது. அதனால்தான் பாசமே வருகிறது." சொல்லிவிட்டு அந்த மனேஜர் அகல்யாவைப் பார்த்தார்.

அவள் கண்கள் நனைந்து விட்டன. அவளை அறியாமலேயே அவளிற்குள் அவள் சொந்தத் தகப்பனைப் போல் வைத்திருந்த பாசம் பொத்துக்கொண்டு அழுகையாக மாறியது.

அந்தப் பழைய மனேஜர் கடைசியாகப் போகும்போது அகல்யாவைப் பார்த்து "அகல்யா உனக்கு என்ன உதவி வேண்டுமானாலும் தயங்காமல் எந்த நேரமும் என்னிடம்

கேட்கலாம். நீயும் என் சொந்த மகள் மாதிரி “ என்று சொல்லி விட்டுப் போனார்.

நேரம் ஒன்பதரை ஆகிவிட்டது. எல்லோரும் புதிய டிபார்ட்மெண்ட் மனேஜரை எதிர்பார்த்த வண்ணமிருந்தார்கள்.

ஒரே பரபரப்பு. புதிய மனேஜர் வந்து விட்டதாகவும் இப்பொழுது ஜெனரல் மனேஜரின் அறையில் இருப்பதாகவும் ஆபீஸ் . பியூன் ஆறுமுகம் வந்து சொன்னான்.

கொஞ்ச நேரத்தில் ஜெனரல் மனேஜருக்குப் பக்கமாக அந்தப் புதிய எடுப்பான, அழகான இளம் வாலிபன் நடந்து வர, ஜெனரல் மனேஜர் ஒவ்வொருவராக அந்த வாலிபனுக்கு அறிமுகம் செய்து கொண்டு வந்தார்.

அகல்யாவின் உள்ளம் திக்திக்கென்று அடித்துக் கொண்டது.

ஜெனரல் மனேஜர் அவளை நோக்கி நடந்து வந்தார். அந்த வாலிபனும் அவளை நோக்கி நடந்து வந்தான். .அவள் நிமிர்ந்து பார்த்தாள். சில கணங்கள் கண்வெட்டாமல் பார்த்தாள்.

“She is அகல்யா” ஜெனரல் மனேஜர் சொல்ல..


“ I am பிரசன்னா” என்ற வண்ணம் அவன் வலக்கையை நீட்டினான்.

அவளும் கையை நீட்ட “Nice to meet you” என்ற வண்ணம் அவன் அவள் கையைப் பிடித்துக் குலுக்க, குளிர்மையான அவனது அந்தக் கரம், மென்மையான அவளது வலக்கரத்தை இறுக்கிப் பிடித்துத் தளர்த்திக் கொள்ள, அந்தக் கண நேரச்

சிலிர்ப்புக்களுடன் அவள் இதயம் வேகமாக அடிக்க, அவள் அவனை நிமிர்ந்து பார்க்க "See you later" என்றவன், மெதுவாக ஜெனரல் மனேஜருடன் அவனது ஆபீஸை நோக்கி நடந்தான்.

ஆனால் அகல்யாவின் கைகளில் இன்னமும் அவன் கரங்கள் பதித்த அந்தக் குளிர்மை போகாமலிருக்க எடுப்பான அவனை, பிரசன்னாவை ஒரு முறை நினைத்து தனக்குள்ளே சிரித்த வண்ணம் அகல்யா கதிரையில் இருந்து கொண்டாள்.

...



# 6

பிரசன்னா கால்களை நீட்டிக் கட்டிலில் படுத்திருந்த வண்ணம் Lectures Notes ஐ புரட்டினான். வலது கையில் வைத்திருந்த சிகரட் சாம்பலாகி அவனை அழித்துக் கொண்டிருந்தது.

ஆனால் பிரசன்னா ! சிகரட் புகையை அடிக்கடி உள் எடுத்து வெளிவிட்டு தன்னை அழித்துக் கொண்டிருந்தான்.

Notes இல் ஒரு சில பக்கங்களைப் புரட்டினான் அவன். ஆனால் அவன் மனம் ஒரு நிலைப்பட்டிருக்கவில்லை. அந்த நாட்களில் அவன் படிக்கும் போதெல்லாம் மனம் படிப்பில் மாத்திரம் ஒன்றிப் போயிருக்கும். ஆனால் இப்பொழுது....... எனக்கு என்ன நடந்து விட்டது?. தனக்குள்ளேயே ஒரு கேள்வியைக் கேட்டுப் பதில் காணமுடியாத நிலையில் உணர்ச்சிகள் பந்துபோல் உருண்டு வந்து தொண்டையை அடைக்க பனித்த கண்ணீர்த் துளிகளை துடைத்துக் கொண்டான்.

மேசையில் சிந்து, திலக் அகல்யா மூவரும் இருந்து அவனைப் பார்த்துச் சிரித்தார்கள்.

ஆமாம் அவர்கள் மூவரும் ஒன்றாகவிருக்கும் படம் அந்த மேசையில், அவன் இருந்து படிக்கும் அதே மேசையில் இருந்தது.

ஆனால் அதே நேரம், அதே மேசையில் இன்னொரு இளம் பெண் அவனைப் பார்த்துச் சிரித்துக் கொண்டிருந்தாள்.

அவளது மென்மையான அந்தக் கூந்தல், நெற்றியிலே மெல்லியதாய் வைக்கப்பட்டிருந்த கறுத்தப் பொட்டு, தலை நிறைய மல்லிகை மலர்மாலை இவையெல்லாம் அவளை ஒரு தேவதை போல் அழகூட்டி மெருகூட்டிக் கொண்டிருந்தது.

அவனால் தான் செய்வது தவறா அல்லது சரியா எனப் பிரித்து அறிந்து பார்க்கக் கூடிய அளவுக்கு மனம் ஒன்றுபட்டிருக்கவில்லை.

படிப்பிலும் முழுமையாக கவனத்தைச் செலுத்த முடியவில்லை.

Notes ஐ மூடி வைத்துவிட்டு கண்களை இறுக மூடிக்கொண்டான் பிரசன்னா.

அவள் மீண்டும் அவன் முன் தோன்றினாள். கை நிறைய வளையல்கள் நிறைந்திருக்க மெல்லியதாய் ஒரு சிவத்தப்பொட்டு நெற்றியிலிட்டு, கால் சங்கிலிகள் சுரமமைத்து இசை பாட அவள், தன் மெல்லிடையை வளைத்துக் கொடியாய் தன் முத்துப்பற்களைக் காட்டிச் சிரித்த வண்ணம் அவனை நோக்கி நடந்து வந்தாள்.

“பிரசன்னா ! நான் எப்படியிருக்கின்றேன்! அழகாய் இருக்கிறேனா.....?” அவள் அவனைப் பார்த்துக் கேட்டாள்.

அவன் சிரித்தான். சின்னக் குழந்தையுள்ளம் படைத்த ஆரதியின் கேள்விகளைக் கேட்டு அவன் சிரித்தான்.

“ஆரதி ! உனக்கு அழகு மாத்திரமில்லை. உனது கண்கள், அந்தக் கண்களின் சிரிப்பு, உனது உதடுகள், அந்த உதடுகளால் வெளிவரும் வார்த்தைகள் எல்லாமே அழகாகத்தான் இருக்கிறது.”

அவள் நாணத்தால் இரண்டு கைகளால் முகத்தை மூடி விரல்களின் இடைவெளிகளினூடாக அவனைப் பார்த்தாள். கைநிறைந்த வளையல்கள் அவள் ஒவ்வொரு முறையும் கையசைக்கும் போது சுரம் மீட்டின.

“ஆரதி ! நீயில்லாமல் என் வாழ்க்கை பாலைவனம் போலாகிவிட்டது. உன்னை ஒருகணம் நினைக்காமல் இருக்க முடியவில்லை.” அவன் குரல் அடைத்து விட்டது. நெஞ்சில் ஒரு சுமை போன்ற வலிப்பு. அவன் கண்கள் சிவந்து கலங்கி விட்டன.

அவள் சிரித்தாள். காற்றில் முகத்தை மூடிய கூந்தலை, மெல்லிய பின்னிய விரல்களால் விலத்தி விட்டு அவனைப் பார்த்துச் சிரித்தாள்.

“பிரசன்னா! வாழ்க்கை என்பது ஒரு மேடு பள்ளம் நிறைந்த நீண்ட பாதை. அந்தப் பாதையில் நடந்து

வரும்போது, அடிபட்ட ஒரு தடைக்கல்லாக நினைத்து என்னை மறந்து விடுங்கள் பிரசன்னா''. சொல்லும் போதே அவளது கண்களில் இருந்து கண்ணீர்த் துளிகள் வழிந்தன.

"ஆரதி ! உன்னை எப்படி மறப்பது. எனக்கு வழிகாட்டியாக இந்தளவு ஒரு நிலைக்குக் கொண்டு வந்துவிட்ட உன்னை எப்படி மறப்பது.'' அவன் அழுதான். கேவிக் கேவி அழுதான்.

அவள் கூப்பிட்டாள். "பிரசன்னா! நீங்கள் இன்னமும் சின்னப்பிள்ளையில்லை. உங்களுக் கென்று மனைவி இரு பிள்ளைகள் உங்களுக்காக காத்துக் கொண்டிருக்கின்றார்கள்.

நானும் எப்பொழுதும் உங்கள் பக்கத்திலேயே இருக்கிறேனே. அப்பிடியிருக்க நீங்கள் மனம் கலங்கக் கூடாது''. சொல்லிவிட்டு அவள் அவனைப் பார்த்துச் சிரித்தாள்.

அவன் கண்களைத் துடைத்துக் கொண்டான்.

பிரசன்னா.....! அவள் திரும்பவும் கூப்பிட்டாள்.

அவன் நிமிர்ந்து பார்த்தான்.

"எனக்கு அந்த நாட்களை நினைக்கும் போது எவ்வளவு இனிமையாக இருக்கிறது தெரியுமா?''

அவன் கண்களை வெட்டாமல் புருவங்களை உயர்த்தி அவளைப் பார்த்தான். ஆமாம் ஆரதியைப் பார்த்தான்.

"நடந்து முடிந்த அந்த இனிய நாட்கள்.....! நாங்கள் இருவரும் இளம் பிஞ்சுகளாக கைகோர்த்து நடந்து வந்த அந்த நாட்கள்,,,,,,,!

நீங்கள் என்னை சீண்டி விட்டு வேடிக்கை பார்ப்பீர்களே அந்த இனிய நாட்கள்."

அவள் குரல் வறண்டு போய் விட்டது. நெஞ்சின் ஆழத்தில் ஏதோவொன்று கூடுவது போன்ற பிரமை.. இருந்தாற் போல் ஆகாயத்தில் மிதப்பது போன்ற பிரமை.

அவன் தண்ணீர் ஊற்றி வளர்த்த ஒரு ரோஜாச் செடி பூக்காமலேயே கருகி விட்டது போன்ற ஒரு பிரமை.

அவள் பெரிதாய்ச் சிரித்தாள். அவனைப் பார்த்துச் சிரித்தாள்.

"என்ன பிரசன்னா அப்படி மலைத்துப் போய் இருக்கிறீர்கள்?" அவள் கேட்டாள்.

"ஆரதி ....." அவன் வாயிலிருந்து பேச்சு வரவில்லை.

"சொல்லுங்கள் பிரசன்னா..... சொல்ல வந்ததைச் சொல்லுங்கள். நீங்கள் எப்பவும் இப்பிடித்தான். இடையில் சொல்லாமலேயே விழுங்கி விடுவீர்கள்."

"ஆரதி ......" அவன் இழுத்தான். "வாழ்க்கையில் எதிர்பார்ப்புகள் ஏமாற்றங்களாக மாறிவிட்டால் அவற்றை தாங்கிக் கொள்ளவே முடியாது."

“ஆமாம் பிரசன்னா. அது உண்மைதான். எதிர்ப்புகள் ஏமாற்றங்களாவதால் எத்தனை பைத்தியங்கள் இந்த உலகில் உருவாகியிருக்கின்றன தெரியுமா?”

“நானும் கூட அப்படித்தான் ஆரதி. உன்னை நினைத்து நினைத்து பைத்தியமாகிக் கொண்டிருக்கின்றேன்.”

அவள் அவனை நெருங்கி வந்தாள். கொழுகொம்பற்ற ஒரு கொடியாய் அவனை நெருங்கி நடந்து வந்தாள்.

“பிரசன்னா! முன்பெல்லாம் நான் ஒரு பைத்தியமாக உங்கள் மீது அன்பு காட்டிய போது நீங்கள் என்னைப் பார்த்துச் சிரிப்பீர்களே.....”

“ஆரதி ஒருவர் மீது அன்பு அதிகம் வைக்கக் கூடாது. அந்த அன்பு கிடைக்காவிட்டால் அதன் தாக்கம் பாரதூரமானதாக இருக்கும்.” என்று சொல்லும் நீங்களே இப்ப பைத்தியமாகிக் கொண்டிருக்கின்றேன் என்று சொல்கிறீர்களா?”

அவள் கைகள் அவன் முகத்தை வருடிக் கொடுத்தன.


“ஒருவன் இந்த உலகத்திற்கு மனிதனாகப் பிறக்கும்போது அவனது வாழ்க்கை, விதி, நியதி, என்பதெல்லாம் நிச்சயிக்கப்பட்டு விடுகிறது. நாங்கள் இருவரும் இதற்கு விதி விலக்கல்ல பிரசன்னா...!” அவள் அவன் தலையைக் கோதிக் கொடுத்த வண்ணம் முகத்தோடு முகத்தை உரசினாள்.

பிரசன்னா அவளை, ஆரதியை அப்படியே அணைத்து அவள் நெற்றியிலே முத்தமிடப் போக அவள் சிரித்தாள். அவனைப் பார்த்துச் செல்லமாகச் சிரித்தாள்.

"பிரசன்னா இன்னமும் நீங்கள் அந்தப பழைய பிரசன்னாதான்." சில கணங்கள் அவளது இமைகள் அசையவில்லை. அவள் கண்வெட்டாமல் அவனையே பார்த்தாள்.

அந்தப் பார்வையிலும் அவள் ஒரு அழகு தேவதையாக நிற்க, அவன் அவளை இறுக அணைத்து நெற்றியிலே முத்தமிட்டான்.

...



# 7

அகல்யா, வீட்டில் அவசர அவசரமாக வேலைகளைச் செய்து கொண்டிருந்தாள். அன்று அவள் வேலைக்கு லீவு போட்டிருந்தாள்.

எத்தனையோ மாதங்களின் பின் பிரசன்னா இன்று வருகிறார் என்ற சந்தோசம் அவளுக்கு! அவனது வருகையை எதிர்பார்த்தே வாழ்க்கையை ஓட்டிய அவளுக்கு மனதில் ஒரு நிறைவு.

அத்துடன் அன்று வெள்ளிக்கிழமையாதலால் அவள் வேலைகளை முடித்துவிட்டு அன்று பிள்ளையார் கோவிலுக்கும் போக நினைத்திருந்தாள்.

திலக்கும் சிந்துவும் பள்ளிக்கூடம் போயிருந்தார்கள். ஒரு மணிக்கெல்லாம் பாடசாலை முடிய அவர்கள் முன் வீட்டு ஆங்கிலப் பெண்ணின் காரில் அந்த ஆங்கிலப் பெண்ணின் பிள்ளைகளுடன் வந்திறங்குவார்கள்.

அகல்யா சேலைத் தலைப்பை இடுப்பில் செருகிக் கொண்டு ஒவ்வொரு கறியாக அடுப்பில் வைத்து இறக்கிக் கொண்டிருந்தாள்.

'அத்தான் பாவம்! கன நாட்களாக நல்ல சாப்பாடு சாப்பிட்டிருக்க மாட்டார். கண்டதையும் சாப்பிட்டு விட்டு படிப்பில் ஒரே மும்முரமாக இருந்திருப்பார்' என்று அகல்யாவின் உள் மனம் கவலைப்பட்டது.

இன்னும் ஆறுமாதங்கள்தான் அகல்யா பிரசன்னாவை விட்டுப் பிரிந்திருக்க வேண்டும்.

அத்தானின் படிப்பு இன்னும் ஆறு மாதங்களில் முடிந்து விடும் என்ற திருப்தி அவளுக்கு.

'இலங்கைப் பல்கலைக்கழகத்தில் பி..எஸ்.சி பட்டம் பெற்றிருந்தாலும், விரைவில் அவர் பெறப்போகும் எம்.எஸ்.சி. பட்டம், அத்துடன் இங்கிலாந்தில் உயர் கல்வி படித்த மதிப்பு, இவையெல்லாம் தனது கணவனுக்குப் பெரியதொரு வேலையை எடுக்க உதவியாயிருக்கும்' என்று நினைத்தாள் அகல்யா. 'காஸ் குக்கரில்' பாயாசம் காய்ச்சுவதற்காக பாத்திரத்தை வைத்து, எல்லாவற்றையும் அதில் போட்டு பாலையும் விட்டு, அடுப்பை எரிய வைத்துவிட்டு கொஞ்ச நேரம் 'ஹாலில்' வந்து அமர்ந்தாள்.

இனிமையான அந்தப் பழைய நினைவுகள் அவளைச் சுற்றிச் சுற்றி வட்டமிட்டு வந்தன.

அந்த இனிமையான நாட்களை நினைத்துப் பார்க்க அவளுக்கே வெட்கமாகவும் சிரிப்பாகவும் இருந்தது..

கடவுளை ஒரு முறை நினைத்துக் கொண்டாள் அகல்யா. ஆண்டவன் எவ்வளவு அற்புதங்களைச் செய்கிறான். மிருகங்களுக்கு மாறுபட்ட இயல்புகளையும் வேறுபட்ட

உருவங்களையும் கொடுத்து, அதிலும் மனிதன் என்ற மிருகத்திற்கு ஒரு அறிவை, பகுத்தறிவை கொடுத்ததினால்தானே, மனிதன் என்ற 'மிருகம்' வேறுபட்ட சூழ்நிலைகளில் மாறுபட்ட உணர்ச்சிகளை வெளிப்படுத்துகின்றான்.

ஒரு ஆணுக்கும் பெண்ணுக்கும் எத்தனை விதமான பருவங்கள்.! குழந்தைப் பருவம், இளமைப் பருவம், வயோதிபப் பருவம். இந்தப் பருவங்களுக்கிடையே ஒருவனது வாழ்க்கை ஆடி, அடங்கி, முடிந்து விடுகிறது.

அகல்யா என்ற பெண் இன்னும் இளமைப் பருவத்திலேயே இருந்தாள். அதனால்தான் அவளது மென்மையான உணர்ச்சிகள் ஏக்கங்களாக மாற, அந்த ஏக்கங்கள் எதிர்பார்ப்புகளாக பிரசன்னாவை எதிர்பார்த்துக் காத்துக் கொண்டிருந்தாள்.

பழமையை நினைத்துப் பார்ப்பதில்தான் எத்தனை சந்தோசம்.

எனது பூட்டனார் கூட நான் சிறு வயதாக இருக்கும் போது கூப்பிட்டுக் கதை சொல்லுவார். நான் சின்ன வயதில் அப்படி இருந்தேன். இளம் வயதில் எடுப்பான ஆம்பிளையாக இருந்தேன், அதனால் எத்தனையோ பேர் பெண் பேசி வந்தார்கள் என்றெல்லாம் சொல்லுவார். வயது போகத்தான் இளமையின் அருமை தெரிகிறது. திரும்பி வராத அந்த இளமை வாழ்க்கையை நினைத்தே வயது போனவர்கள் வாழ்க்கையை ஓட்டுகிறார்கள். அதனால்தான் வயதானவர்கள் பிற்காலத்தில் குழந்தைகளைப் போல தங்கள் செயல்களை வெளிப்படுத்துகிறார்கள்.

அகல்யா பழமையை அந்த இளமையை நினைத்துப் பார்த்தாள். இன்னும் இளமை விட்டுப் போகாத அவளுக்கு அந்தப் பழைய நிகழ்ச்சிகள் கூட இரைமீட்க இரைமீட்க எத்தனை சுவையாகவிருந்தது.

அவள் ஆபீஸில் வேலை செய்த நாட்களில் பிரசன்னாவை முதல் நாள் சந்தித்ததிலிருந்து நினைத்துப் பார்த்தாள்.

அந்த நாட்களில் அவள் ஒரு பருவப் பெண். சரி, பிழைகளை சரிவரப் பிரித்தறிய முடியாத பருவப் பெண்.

பிரசன்னா ஆபிசுக்கு வந்த முதல்நாள், அவளது கைகளைப் பிடித்துக் குலுக்கியதில் ஏற்பட்டுவிட்ட குளிர்மை, அவளது வாழ்க்கையில் விசயம் தெரிந்த வயதிலிருந்து எந்தவொரு ஆணும் அவளது கரங்களைப் பிடித்துக் குலுக்காததால் ஏற்பட்டுவிட்ட ஒரு புதிய அனுபவம், அவளுக்கு ஏதோ ஒரு புதிய நுட்பமான உணர்ச்சியைக் கொடுத்தது.

பிரசன்னாவின் எடுப்பான தோற்றமும் மிடுக்கான சிரிப்பும் அவளது நெஞ்சத்தின் ஆழத்தில் நன்றாக ஒட்டியிருந்தது.

அவனை அவள் அடிக்கடி நினைத்துப் பார்ப்பாள். பழைய மனேஜரைப் போல மென்மையான சுபாவம் கொண்ட அவனை அவளுக்கு நன்றாகப் பிடித்திருந்தது.

பிரசன்னா அவளைக்கூப்பிட்டு செய்ய வேண்டிய வேலைகளை விபரமாகச் சொல்லும் போதெல்லாம் அவள் அவனைக் கண்வெட்டாமல் சில கணங்கள் பார்ப்பாள். அவன் நிமிர்ந்து பார்க்கும் போது தலையைக் குனிந்து விடுவாள். எத்தனை முறை அவனது அழகை அவள் தனக்குள்ளே ரசித்திருப்பாள்.

அவளை அறியாமலே அவன் மேல் ஏற்பட்டுவிட்ட அன்பு, வெறும் அன்பு மாத்திரமா அல்லது காதலா என்று கூட பிரித்தறிய முடியாத ஒரு இளம் பெண்ணாக அவள் தோற்றமளித்தாள்.

நாளுக்கு நாள் அவளது நடைமுறையில் பாவனையில் ஏற்பட்டு விட்ட மாறுதல் அவளுக்குத் தெரிந்தது.

ஒவ்வொரு நாளும் காலையில் வேலைக்குப் போக முதல் அரைமணி நேரம் கண்ணாடியின் முன் நின்று தன்னை அலங்கரித்துக் கொள்வதில் ஏற்பட்ட மகிழ்ச்சி, பிரசன்னாவும் தன்னைப் பார்த்து மயங்குவார் என்ற நினைப்பு!

இவையெல்லாம் அவளது இளமையின் துடிப்புகளாகவிருக்க, அவள் கனவுகளை நெஞ்சில் சுமையாக சுமந்து கொண்டு வேலைக்குப் போய் வந்தாள்.

ஆனால் அகல்யாவுக்கு அவளது மனேஜரின் வாழ்க்கைப் பின்னணி,, அவள் அடைய விரும்பும் அந்தப் பிரசன்னாவின் முடிந்த வரலாறு. இவையெல்லாம் தெரிந்திருந்தால் அன்றே அந்தக் கனவுச் சுமைகளை இறக்கி வைத்திருந்திருப்பாள்.

அடுப்பில் பாயாசம் கொதித்துப் பொங்கி வழிந்து கொண்டிருந்தது. அவளது உணர்ச்சிகளைப் போல, எழுந்து ஓடிச் சென்று அடுப்பை நூற்றுவிட்டு பொங்கிய பாயாசம் அடங்கிப் போவதைப் பார்த்துக் கொண்டு நின்றாள், அந்தப் பேதைப் பெண் அகல்யா.

...



# 8

தூறலாக மழை பெய்து கொண்டிருந்தது. கருமேகக் கூட்டங்கள் வானை மூடி கதிரவனை மறைத்துக் கொண்டிருந்தன.

பிரசன்னா உடுப்புக்களை அடுக்கி பயணத்திற்கு ஆயத்தமாகிக் கொண்டிருந்தான். இன்னும் நாலரை மணி நேரத்தில் அவன் அகல்யாவின் பக்கத்திலிருக்க அவள் அவனைக் கண்ட களிப்பில், இதயத்துடிப்பின் வேகம் அதிகரிக்க அப்படியே அவர்கள்...... பிரசன்னா நினைத்துக் கொண்டான்.

புகையிரதம் சரியாக ஒன்பதரை மணிக்கெல்லாம் லண்டன் நகரம் நோக்கிப் புறப்பட்டு விடும். பிரசன்னா 10 நிமிடங்களுக்கு முன் புகையிரத நிலையத்திற்குப் போய் விட்டால் நேரம் சரியாக இருக்கும்.

ஒன்பதரைக்கு இன்னமும் ஐம்பது நிமிடங்கள் இருந்தன.

அவனது சிறிய 'சன்யோ' கசற் ரெக்கோடரில் 'இதய வீணை தூங்கும் போது' என்ற பாடல் போய்க் கொண்டிருந்தது.

ஆமாம், அவனது இதயமும் இசைமீட்டி, இசைமீட்டி சுரங்கள் மாறுபட்டு அவனுக்குக் குழப்பத்தை உண்டாக்கி நிம்மதியைக் குலைத்து, இரவுகளும் கூட அவனுக்குப் பகல்களாக காட்சியளிக்க பைத்தியம் பிடிக்காத நிலையில் அவன் எத்தனை நாட்களை வெறுமையாகக் களித்திருக்கிறான்.

என்றோ வறண்டு போன வாழ்க்கையில், ஒரு ரோசாச் செடியாக காட்சியளித்து அவனது வாழ்க்கைக்கு ஓரளவு பசுமையூட்டியவள் அகல்யா. கடந்து வந்த பாதையில், நடந்து முடிந்த அந்த நாட்களில் அவன் அனுபவித்த வேதனைகள், அவன் மனதை பாலைவனமாக்க, அந்தப் பாலைவனத்திலும் கூட பசும் புல்லை வளர்த்து அழகு காட்டியவள் அகல்யா.

யாரோ அவன் அறைக்கதவைத் தட்டினார்கள்.

எழுந்து சென்று திறந்தான் பிரசன்னா.

சிலையாக, மிக அழகாக அவள் அவன் முன் நின்றாள். அவன் கண்களை வெட்டாமல் அவளைப் பார்த்தான். அவள் வேறு யாருமில்லை.

தனக்குள் ஆசையை வளர்த்துக் கொண்டு அவனை, பிரசன்னாவை எப்படியாவது அடைந்து விட வேண்டும் என்ற துடிப்பில் ஏங்கித் தவிக்கும் பைரவி.

அவன் சொல்லாமலேயே அவள் அறைக்குள் வந்து கதிரையில் அமர்ந்து கொண்டாள்.

அவளது முகத்திலும் உடையிலும் சற்று மாறுதல் தெரிந்தது. அத்துடன் அவள் மிகவும் அழகாக இருந்தாள்.

"Hi பிரசன்னா" ! அவள் சொல்லிவிட்டு மென்மையாகச் சிரித்தாள்.

பதிலுக்கு அவனும் சிரித்தான்.

"I am taking half past nine train today to go to London"

அவள் குரலில் ஒரு தாகம் தெரிந்தது.

" Even I am taking the same train" பிரசன்னா பதிலுக்குச் சொன்னான்.

"I am delighted to hear that" சொல்லிக்கொண்டே அவள் அவனைப் பார்த்தாள்.

அவன் ஒரு பதிலும் சொல்லவில்லை.

"Can I sit next to you" அவள் திரும்பவும் அவனைக் கேட்டாள்.

"Why not" என்றவன் அவளைப் பரிதாபமாகப் பார்த்தான்.

அவனுக்கு மனம் விட்டு அவளுடன் பேச வேண்டும் போல் தோன்றியது. அவனது கடந்த கால வாழ்க்கையை அவளுக்கு எடுத்துச் சொல்லி 'பைரவி நாங்கள் இருவரும் இரு துருவங்கள். நீ என் மீது வீணாக ஆசையை வளர்த்து வாழ்க்கையை பாழாக்கி விடாதே' என்று அவளுக்கு எப்படியாவது சொல்ல வேண்டும். அதற்கு இதுதான் சந்தர்ப்பம் என அவன் நினைத்துக் கொண்டான்.

ஆசைகளை மனதில் வளர்த்துக் கொள்வது சுலபம். ஆனால் அவற்றை மனதை விட்டு நீக்குவதுதான் கஷ்டம்.

பிரசன்னா! இவற்றை அனுபவித்தவன். ஆசைகளை அதிகம் மனதில் வளர்த்தவன். அந்த ஆசைகள் நிறைவேறாத பட்சத்தில் அவன் பைத்தியமாகாத குறையில் அனுபவித்த வேதனைகள்தான் எத்தனை.

எச்சிலை மென்று விழுங்கிவிட்டு நிமிர்ந்து பைரவியைப் பார்த்தான் பிரசன்னா. அவள், கண்வெட்டாமல் அவனையே பார்த்து ரசித்துக் கொண்டிருந்தாள்.

இங்கேயே பிறந்து இங்கேயே வளர்ந்து இந்த நாட்டுச் சூழ்நிலைகளுக்குப் பழக்கப்பட்டு விடுவதால், இந்த நாட்டில் பிறந்த எத்தனையோ தமிழ்ப் பிள்ளைகள் கூட தமிழ்ப் பண்பாடுகளை மறந்து விடுகிறார்கள். எல்லோரும் அப்படி மாறிவிடா விட்டாலும் பலரது செய்கைகள் தமிழ்ப் பண்பாடுகளுக்கு முரண்பாடாகவே இருக்கின்றன.

**பை**ரவியும் அவர்களில் ஒருத்தி. மென்மையான, தூய்மையான உள்ளத்தைக் கொண்டவளாக இருந்தாலும் அவளது செய்முறைகள் தமிழ்ப் பண்பாடுகளுக்கு முரண்பாடானவையாகவே இருந்தன.

தூறலாக நிலத்தை நனைத்த மழைத் துளிகள் நின்றிருந்தன. கருமேகக் கூட்டங்கள் மெதுவாக கலையத் தொடங்கின.

பைரவி தனது Travelling bag ஐ எடுத்து வர தனது அறையை நோக்கி நடந்தாள்.

பிரசன்னாவும் எழுந்து நடந்தான்.

பிரசன்னாவும் எழுந்து சூட்கேசை பூட்டி ஆயத்தப்படுத்தினான்.

ஐந்தே நிமிடங்களில் பைரவி தனது bag உடன் திரும்பி வந்து விட்டாள். அவளது கனிவான பார்வை அவனைக் கவர்ந்தது.

"Shall we go to station now" என்று கேட்க,

"Yes" என்று பிரசன்னா தனது சூட்கேசைத் தூக்க இருவருமாக புகையிரத நிலையத்தை நோக்கி நடந்தார்கள்.

"பிரசன்னா.....! பைரவி மென்று விழுங்கிய வண்ணம் அவனைக் கூப்பிட்டாள்.

"Yes" என்ற பிரசன்னா நடந்தவண்ணம் அவளைத் திரும்பிப் பார்த்தான்.

அழகான அவளது முகத்தில் ஒரு மாறுதல் தெரிந்தது. சிமிட்டும் அவளது கண்களில் கண்ணீர்த் துளிகள் பனித்திருந்தன.

"I am really going to miss you பிரசன்னா!" அவள் குரல் அடைத்து விட்டது.

இருவரும் அருகருகே நடந்தார்கள். பிரசன்னா ஒரு பதிலும் சொல்லாமல் மௌனமாகவே நடந்தான்.

சரியாக ஒன்பதரை மணிக்கு லண்டன் நகர் நோக்கிப் புறப்படும் புகையிரதம் பிளாட்பாரத்தில் வந்து நின்றது.

பைரவி ஏற, பிரசன்னா பின் தொடர இருவரும் ஒரு சீற்றில் அருகருகே அமர்ந்து கொண்டார்கள்.

வாழ்க்கை என்ற பாதையில் எத்தனை விதமானவர்களைச் சந்திக்க முடிகிறது. வேறுபட்ட மனிதர்கள். மாறுபட்ட சுபாவங்கள்.

ஒருவரை நினைத்துவிட்டால் மறப்பது கஷ்டம்.

பைரவி தன் மனதில் முழுமையாக நிறைவாக பிரசன்னாவின் நினைவை சுமந்திருப்பவள். ஒரு தலைக்காதலாக அவனை நினைத்து ஏங்குபவள். அவனுக்கென்று ஒரு குடும்பம் இருப்பது தெரிந்தும் தன் உள்ளத்துள் அவனை புதைத்து வைத்திருப்பவள். அவளுக்கு தான் செய்வது சரியானதா பிழையானதா என்று தெரியவில்லை.

நான்கு கிழமைகள் விடுதலையில் போகும் பிரசன்னாவை, மனைவி கணவனைப் பார்க்கும் உரிமையுடன் அவனைப் பார்த்தாள் பைரவி.

அவளது நெஞ்சு கனமாகிச் சுமந்தது.

“பிரசன்னா I am seriously loving you” அவள் விக்கலுடன் அவனுக்குச் சொன்னாள்.

அவன் மௌனமாகத் திரும்பி அவளைப் பார்த்தான்.

சில கணங்கள் கண்வெட்டாமல் அவளைப் பார்த்தான். நீ ஒரு பைத்தியம் என்பது போல் அவளைப் பார்த்தான். வீணாக உனது வாழ்க்கையைப் பாழாக்கி விடாதே என்பது போல் அவளைப் பார்த்தான். ஆனால் அவள் நான் எப்பிடியாவது உங்களை அடைவேன் என்பதுபோல் மனதில் ஒரு திடமான நம்பிக்கையுடன் கண்கள் கலங்கிய நிலையில் அவனைப் பார்த்துச் சிரித்தாள்.


பிரசன்னா ஒரு முடிவுக்கு வந்தவனாய் பந்து போல் உருண்டு வந்து தொண்டையை அடைத்த விக்கலை மென்று விழுங்கி விட்டு நிதானமாக பொறுமையாக "பைரவி" என்று கூப்பிட்டான்.

அவள் தலை நிமிர்ந்து நேருக்கு நேராக அவனைப் பார்ததாள்.

பைரவி எனது வாழ்க்கை பல அத்தியாயங்களைக் கொண்ட ஒரு கதைப்புத்தகம் மாதிரி. அந்தக் கதைப் புத்தகத்தில் ஒவ்வொரு பக்கத்தையும் நீ புரட்டிப் பார்த்தால் என்னை விரும்பவே மாட்டாய்!. நானாகவே கடந்து வந்த பாதையில் நடந்து முடிந்த அத்தியாயங்களை உனக்குச் சொல்கிறேன். சிலவேளை நான் சொல்லப் போவது உனக்கு ஒரு சாதாரண கதையாக இருக்கலாம். ஆனால் என்னைப் பொறுத்தவரை மனதை விட்டு நீங்க முடியாத ஒரு நீண்ட கதை. எனது வாழ்க்கையில் நடந்து முடிந்த ஒரு துயரக்கதை.

அவள் கண் வெட்டாமல் அவனையே பார்த்த வண்ணம் இருந்தாள். அவன் கதையை சொல்லத் தொடங்க புகையிரதமும் பிளாட்பாரத்தை விட்டு நகரத் தொடங்கியது.

☞ ...



# 9

புகையிரதம் மெதுவாய் ஓடிக்கொண்டிருந்தது. தைன் நதியின் அந்த நீண்ட பாலத்தைத் தாண்டி ஓடிக் கொண்டிருந்தது. அந்தத் தைன் நதியிலும் கூட அலைகள் குமுறியெழுந்து பின் அடங்கிப் போயின.

பிரசன்னா திரும்பி பைரவியைப் பார்த்தான். அவள் அந்த நீண்ட நதியையே கண் வெட்டாமல் பார்த்துக் கொண்டிருந்தாள். அவள் மார்பும் விம்மிப் பொருமித் தணிந்து போயின.

கருமேகக் கூட்டங்கள் கதிரவனுக்கு வழிவிட்டு விலகிப்போய் கொண்டிருந்தன. அந்தக் கதிரவனின் ஒரு சில கதிர்கள் ஓடும் புகையிரதத்தின் யன்னலினூடாக பிரசன்னாவின் முகத்தில் பட்டுத் தெறித்தன.

பிரசன்னா எச்சிலை மென்று விழுங்கி விட்டு ''பைரவி'' என்று கூப்பிட்டான்.

''Yes darling'' என்றவள், வலது கையால் மார்பகத்தைச் சாடியிருந்த கூந்தலை பின்புறமாகத் தள்ளிவிட்டு சிரித்தவண்ணம் அவனைப் பார்த்தாள்.

பிரசன்னாவால் அவளைப் புரிந்து கொள்ள முடியவில்லை. அவள், மனதின் ஆழத்தை அறிய முடியாத ஒரு புதிராகவே தோன்றினாள்.

அவள் தன்னை darling என்று கூப்பிட்டது ஒரு புறம் அவனுக்கு கோபத்தை ஏற்படுத்தினாலும், மறுபுறம் ஏதோ ஒரு பரிதாப உணர்வு அவனுள் புகுந்து அவளைத் திட்ட மறுத்தது.

அவன் தொடர்ந்தான். நடந்து முடிந்த அந்த நாட்களை, அந்த நிகழ்ச்சிகளை அவனது வாழ்க்கையின் கடந்த அத்தியாயங்களை தொடர்ந்து அவளுக்குச் சொன்னான்.

**பை**ரவி ! அப்பொழுது எனக்கு வயது இருபது. வாலிபப் பருவம். பேராதனைப் பல்கலைக்கழகத்தில் BSc முதலாம் வருட மாணவனாகப் படித்துக் கொண்டிருந்த நேரம்.

வாழ்க்கையில் முதன் முதலாக பெற்றோரைப் பிரிந்து பட்டப் படிப்பிற்காக தனித்து வந்திருந்த நேரம்.

சிறு வயதிலிருந்து படிப்பிலேயே கவனத்தைச் செலுத்திய எனக்கு, பல்கலைக்கழக வாழ்க்கையின் தொடக்கம் ஒரு திருப்பத்தை ஏற்படுத்தியது. ஏதோ காணாததைக் கண்டு விட்டது போன்ற பிரமை! எங்களின் சுதந்திரத்தைத் தடுக்க யாருமில்லை என்ற ஒரு உணர்வு.

அந்த நாட்களில் நாங்கள் நால்வர் ஒன்றாகத் திரிவோம். கல்லூரி வாழ்க்கையிலிருந்து வேறுபட்ட பல்கலைக்கழக

வாழ்க்கை. அந்த வேறுபட்ட சூழ்நிலை....... இவையெல்லாம் எமக்குப் புதுமையான ஒரு அனுபவத்தைத் தந்தது.

அசோக மர நிழலில்களின் கீழ் அமைக்கப்பட்டிருந்த சீமெந்து பெஞ்சுகளில் இருந்து நாங்கள் கழித்த அந்த நாட்கள்..... அவன் பைரவியைத் திரும்பிப் பார்த்தான். அவள் ஆவலுடன் அவனைப் பார்த்த வண்ணம் இருந்தாள்.

அந்த நாட்களில்தான் ஒருநாள் அவளைச் சந்தித்தேன். நீண்ட கூந்தல், மெல்லியதாய் காற்றில் அடித்து வரக் கறுத்தப் பொட்டு வைத்துக் கொடியாய் அவள் நடந்து வந்தாள்.

அவளைக் கண்டவுடன் எனக்குள் ஏதோ ஒருவித உணர்வு பளிச்சிட்டது. எங்கேயோ அவளைப் பார்த்த ஞாபகம் நன்றாக அறிந்த முகம்.

"Excuse me" அவள் திரும்பிப் பார்த்தாள்.

"உங்களின் பெயரை அறியலாமா?" அவள் தன் சின்னப் பற்களைக் காட்டிச் சிரித்தாள். மெல்லிய அவளது உதடுகள் அவளது அழகை மேலும் மெருகூட்டிக் கொடுத்தது.

"உங்களுக்கு ஏன் என் பெயர் தேவை?" அவள் சிரித்துக் கொண்டே கேட்டாள்.

"எங்கேயோ உங்களைப் பார்த்த ஞாபகம். அதனால்தான் கேட்டேன்."

“ஆரதி” சொல்லிவிட்டு அவள் நடந்தாள்.

ஆரதி ! உடனே எனக்குப் புரிந்து விட்டது. “ஆரதி” நான் திரும்பிக் கூப்பிட்டேன்.

அவள் நின்றாள். அசையாமல் அப்படியே நின்றாள். அவள் முன் போய் நின்று அவளைப் பார்த்துக் கேட்டேன்.

“என்னைத் தெரிகிறதா ஆரதி?” அவள் கண் வெட்டாமல் சில கணங்கள் என்னைப் பார்த்துவிட்டு “இல்லை” என்று சொன்னாள்.

“அந்த நாட்களில் நான் மிருதங்க class ற்கு வரும்போது நீங்கள் வீணைக் class இற்கு வருவீர்கள் ! அந்த ஆரதிதானே நீங்கள்...” அவளைப் பார்த்துக் கேட்டேன்.

அவள் தலையாட்டினாள். “ஆம்” என்பதற்கு அடையாளமாகத் தலையாட்டிவிட்டுச் சிரித்தாள்.

“இப்பொழுதாவது என்னைத் தெரிகிறதா ?” அவளைக கேட்டேன்.

அவள் மீண்டும் மௌனமாய் ‘ஆம்’ என்று தலையாட்டினாள்.

“பெயரைச் சொல்லுங்கள் பார்க்கலாம்”

அவள் ''பிரசன்னா'' என்று சொன்னாள். எனக்குள் ஏதோ ஒருவித உணர்வு. ஆகாயத்தில் பறப்பது போன்ற பிரமை. நெஞ்சு ஒருமுறை கூசுவது போன்ற உணர்வு.

''நீங்கள் எவ்வளவு வளர்ந்து விட்டீர்கள் தெரியுமா ஆரதி'' என்னையறியாமலே அவளுக்கு நான் சொல்லிக் கொண்டிருந்தேன்.

அவள் வெட்கித் தலை குனிந்து கொண்டாள்.

அன்றிரவு நானும் எனது மூன்று நண்பர்களும் ஒன்று கூடியபோது நான் 'ஆரதி பற்றி அவர்களிடம் சொன்னேன். என்னையறியாமலேயே அவளை அவர்களுக்கு வர்ணித்தேன்.

அவர்கள் சிரித்தார்கள்.

''பிரசன்னா உனக்கு என்ன நடந்து விட்டது. உனக்கு அந்த ஆரதி மேல் மோகம் வந்து விட்டதா? இப்படி எத்தனையோ ஆரதிகள் இந்த நாலு வருடப் பல்கலைக்கழக வாழ்க்கையில் வந்து போவார்கள்''. நண்பர்கள் சிரித்துக் கொண்டே சொன்னார்கள்.

ஆனால் எனக்குள் ஏதோ ஒருவித உணர்வு, அவளைத் திரும்பத் திரும்ப அழைத்து மனக்கண் முன் படமெடுத்துக் காட்டியது.

அவள் சிறு வயதில் இருந்ததற்கும், இப்போது இருப்பதற்கும் எவ்வளவு மாறுதல். ஒரு பெண்ணுக்குத்

தேவையான அத்தனையையும் கொண்டவளாக தோற்றமளிக்கும் இந்த ஆரதி சங்கீதத்தில் எத்தனை நிபுணத்துவம் கொண்டவள். இவளைப்பற்றி எத்தனை முறை பத்திரிகைகளில் வாசித்திருக்கிறேன். வீணை வாசிப்பதில் தனியிடத்தை பெற்றுவிட்ட இந்த ஆரதியின் அரங்கேற்றத்திற்கு எனது பெற்றோர்கள் போனதுகூட இப்போது எனக்கு ஞாபகத்திற்கு வந்தது.

இரவு புரண்டு புரண்டு படுத்தேன். நித்திரை வருவதாக இல்லை. ஆரதி ! அந்த ஆரதி ! திரும்பத் திரும்ப என் முன்னால் வந்து நின்று தனது சிறிய முத்துப் பற்களைக் காட்டிச் சிரித்தாள். என்னாலேயே என்னைப் புரிந்து கொள்ள முடியவில்லை.

நான் அவளை மனதிற்குள் தரிசிக்கத் தொடங்கி விட்டேனா என்பதைக்கூட என்னால் பிரித்தறிய முடியவில்லை.

அன்று நான் பார்த்த அந்த சிறிய பெண்பிள்ளை ஆரதி பெரிய வீணையைத் தூக்கிக் கொண்டு வகுப்பறைக்குள் அரைப் பாவாடை தாவணியுடன் நடந்து வந்த நாட்களை நினைத்துப் பார்த்தேன்.

அதே ஆரதி இன்று ஒரு பருவப் பெண்ணாய் பல்கலைக்கழகத்தில், கொடி இடையை வளைத்துப் புத்தகங்களைக் கையிலேந்தி நடந்து வரும்போது எத்தனை அழகாக இருக்கிறாள் என்று நினைத்துப் பார்த்தேன்.

அன்றிரவு எனக்கு நித்திரையே வரவில்லை. எனக்குள் ஏதோ அவளைப் பார்க்க வேண்டும், பார்த்துப் பேச வேண்டும் என்ற உணர்வு ஏற்பட்டது. அந்த உணர்வுடன் நான் மறுபக்கம் புரண்டு விடியலின் வரவை எதிர்பார்த்த வண்ணம் படுத்திருந்தேன்.

...



# 10

பிரசன்னா ஓடும் புகையிரதத்தில் யன்னலினூடாக வானத்தை அண்ணாந்து பார்த்தான்.

அங்கே! அவள்! ஆரதி! அவனை நோக்கி, பிரசன்னாவை நோக்கி இடையை வளைத்துக் கொடியாய் நடந்து வந்து கொண்டிருந்தாள். பின்னிய கூந்தல் காற்றில் விரிந்து பறந்து விளையாட, அவள், பிரசன்னாவைப் பார்த்து முத்துப் பற்களைக் காட்டிச் சிரித்த வண்ணம் நடந்து வந்து கொண்டிருந்தாள்.

"பிரசன்னா? எவளோ ஒருத்தியின் பக்கத்தில் இருந்து இப்பிடிக் கதை அளக்கிறீர்களே" என்று சொல்லிச் சிரித்த வண்ணம் அவனை நோக்கி நடந்து வந்தாள்.

"Darling" என்ன ஆகாயத்தைப் பார்த்து இப்பிடி பிரமித்துப் போய் இருக்கிறீர்கள்?" என்று பிரசன்னாவைத் தட்டி பைரவி கேட்டாள்.

அவன் அவளைப் பார்த்துச் சிரித்துக் கொண்டே அழுதான். அந்தப் போலிச் சிரிப்புடன் கலங்கி விட்ட கண்களைக் கண்ட பைரவி தடுமாறிப் போய் விட்டாள்.

"பைரவி ! வெறுமையான அந்த ஆகாயத்தை நன்றாகப் பார். அந்த ஆகாயத்திலும் எத்தனையோ நட்சத்திரங்கள் பகல் வேளையில் தெரியாமல் ஒழித்திருந்து இரவு வேளையில் மின்னிப் பளபளக்கின்றன தெரியுமா?

ஆரதி!, இனிய ஆரதியும் அப்படித்தான். என் மனதிற்குள் அவளை ஒளித்து வைத்திருந்து அடிக்கடி அழகு பார்ப்பேன். அவளுடன் தனியாகக் கதைப்பேன். அந்த வெளியான வானத்தில் நட்சத்திரங்கள் ஒளிந்திருப்பதைப் போல ஆரதியும் என் மனதிற்குள் ஒளிந்திருக்கிறாள் பைரவி."

அவனது குரல் அடைத்து விட்டது. இருந்தும் அவன் பைரவியைப் பார்த்துச் சிரித்தான்.

"பைரவி" ! திரும்பவும் பிரசன்னா அவளைக் கூப்பிட்டான்.

அவள் திரும்பி அவன் கண்களிற்குள் பார்த்தாள்.

"வாழ்க்கை என்ற பாதை எத்தனை மேடு பள்ளங்கள் நிறைந்தது தெரியுமா? இவற்றைப் பற்றி அறிந்து கொள்ள உனக்கு இன்னும நாட்கள் இருக்கின்றன."

அவள், பைரவி அவனையே பார்த்த வண்ணமிருந்தாள். கண் வெட்டாமல் கபடச் சிரிப்பு சிரித்த வண்ணம் அவனையே பார்த்த வண்ணம் இருந்தாள்!.

பிரசன்னா தன் கதையை தொடர்ந்து அவளுக்குச் சொன்னான்.

ஆரதி!, அவனது இனிய அந்த ஆரதியை சந்தித்த நாட்களை மறக்க முடியாதவனாய் விம்மி வந்த அழுகையை அடக்கிக் கொண்டு தொடர்ந்து சொன்னான்.

ஆரதியை சந்தித்த அடுத்த நாள் அவளைக் காண வேண்டும் கதைக்க வேண்டும் என்ற துடிப்புடன் பல்கலைக்கழக வளவில் போடப்பட்டிருந்த சீமெந்து பெஞ்சில் காத்திருந்தேன்.

காலை ஒன்பது மணியிருக்கும் அவள் அழகாய் வெள்ளைச் சேலையுடுத்தி புத்தகங்களை கைகளில் தாங்கிய வண்ணம் நடந்து வந்தாள்.

என் இதயம் பலமுறை அடித்துக் கொண்டது. எப்படி அவளிடம் கதை கொடுப்பது என்று நினைத்துக் கொண்டேன்.

அவள் வந்தாள், நெருங்கி வந்தாள். இத்தனை அழகான அவளிடம் கலைத்தன்மை நிறைய இருப்பதை நினைக்க எனக்கு மிகவும் பெருமையாக இருந்தது.

வறண்டு விட்ட தொண்டையில் எச்சிலை மென்று விழுங்கி விட்டு ''ஆரதி'' என்று நான் கூப்பிட்டேன்.

அவள் திரும்பி என்னைப் பார்த்துச் சிரித்தாள். தன் இனிய முத்துப்பற்களைக் காட்டிச் சிரித்தாள். பின் ''என்ன வேண்டும் பிரசன்னா?'' என்னிடம் கேட்டாள்.

எனக்கு 'ஆரதி நீதான் வேண்டும்' என்று சொல்ல உதடுகள் துடித்தன.

அவளைப் பார்த்துச் சிரித்து விட்டு "கொஞ்ச நேரம் இப்பிடி இருந்து கதைக்கலாமே" என்று சொன்னேன்.

"எனக்கு 10 மணிக்கு Lectures இருக்கிறது. எதுக்கும் கொஞ்ச நேரம் கதைப்போமே" என்று சிரித்த வண்ணம் சொன்னாள்.

இருவரும் அசோக மர நிழல்களின் கீழ் அமைக்கப் பட்டிருந்த சீமேந்து பெஞ்சில் அமர்ந்து கொண்டோம்.

நான் அவளைப் பார்த்தேன். கண் வெட்டாமல் அவளைப் பார்த்தேன். 'ஆரதி ! நீ எவ்வளவு அழகாய் இருக்கிறாய் தெரியுமா' என்று சொல்ல வேண்டும் போல் எனக்கிருந்தது.

தொண்டையை சரிப்படுத்திக் கொண்டு "ஆரதி" என்று நான் கூப்பிட்டேன்.

குனிந்த தலையை நிமிர்த்தி என்னைப் பார்த்துச் சிரித்தாள்.

"வீணை வாசிப்பதில் மேதையாகிவிட்ட உங்கள் குரலும் வீணையின் சுரங்களைப் போன்று மென்மையாகவே இருக்கிறது" என்று சொன்னேன்.

அவள் சிரித்தாள். முத்துப் பற்களைக் காட்டிச் சிரித்தாள்.

சுருண்டு நீண்ட அவளது கூந்தலை முன்புறமாக எடுத்து கைவிரல்களால் பின்னிய வண்ணம் என்னைப் பார்த்துச் சிரித்தாள்.

என் இதயம் பலமாக அடித்துக் கொண்டது. என்னையறியாமலேயே அவளை நான் எனக்குள் நேசிக்கிறேன் என்பதை புரிந்து கொள்ள எனக்கு அதிக நேரம் எடுக்கவில்லை.

''ஆரதி இன்று முதல் நானும் உங்கள் வீணை ரசிகர்களில் ஒருவன்.''

அவள் பார்த்தாள். நிமிர்ந்து என்னைப் பார்த்தாள். பின் ''அப்படியே இருக்கலாமே.'' என்று சொன்னாள்.

நான் சிரித்த வண்ணம் ''ஆரதி இனி நான் உங்களது ஒவ்வொரு வீணைக் கச்சேரிக்கும் வருவேன்'' என்று சொன்னேன். என் உள்மனம் 'ஒவ்வொரு கச்சேரியிலும் நான், நீ மீட்டும் சுரங்களின் நாதத்தை மாத்திரம் ரசிப்பதற்கல்ல. உன் விரல்கள் பின்னி அந்தச் சுரங்களை மீட்டும் போது அதை நான் ரசிக்க, நீ பாவையாய் அமர்ந்திருந்து வீணையின் சுரங்களை மீட்டி அனைவரையும் கவர்ந்திழுக்க, உன்னைக் கவர்ந்திருக்கும் அந்த அழகை தரிசிக்க நிச்சயமாய் நான் வருவேன்' என்று சொல்லிக் கொண்டது.

அவள் நிமிர்ந்து என்னைப் பார்த்து ''நீங்கள் மிருதங்கம் கற்றீர்களே பின் என்ன நடந்தது'' என்று கேட்டாள்.

''அந்தக் கலையை கற்றும் என்னால் பிரயோசனப்படுத்த முடியவில்லை ஆரதி''

அவள் என்னைப் பார்த்தாள். சிரித்துவிட்டு ''நாங்கள் இருவரும் கலைப்பற்றுக் கொண்டவர்கள்'' என்று சொன்னாள்.

அதில் எத்தனையோ அர்த்தங்கள் தொனித்தன.

அவளது அந்தச் சிவந்த உதடுகள், கொவ்வைப் பழமாய் சிவந்த கன்னங்கள், நாணலுடன் பார்க்கும் அவளது பார்வை, நீண்ட சுருண்ட கேசங்கள் அவளுக்கு தனியழகைக் கொடுத்துக் கொண்டிருந்தன.

''ஆரதி அடுத்த கச்சேரி எங்கே நடக்கப் போகிறது'' என்று கேட்டேன்.

''இம்மாதம் இருபத்தி ஐந்தாம் திகதி கொழும்பு சரஸ்வதி மண்டபத்தில்'' என்று சொன்னாள்.

''நிச்சயமாய் நான் அங்கு வருவேன் ஆரதி''

என்னுள்ளம் அவளிடம் ஏதோ கேட்க வேண்டும் என்று துடித்தது. ஆனால் உதடுகள் தடுத்தன.

சந்தித்த இரண்டாவது நாளே 'ஆரதி நான் உன்னை மனதார நேசிக்கிறேன்' என்று சொன்னால் என்னை அவள் தரக்குறைவாக நினைக்கலாம். சிலவேளை என்னுடன் கதைக்காமலும் விட்டு விடலாம் என்று தோன்றியது.

எப்படி அவளிடம் என் உள்ளத்து உணர்வுகளை வெளிக்காட்டுவது, அதற்கு ஏற்ப ஒரு சந்தர்ப்பம் கிடைக்க வேண்டுமே..

ஆமாம் அவளை அந்தப் பல்கலைக்கழக வளவிற்குள் இரண்டாவது சந்திப்பின் பின் பலமுறை சந்தித்தும், நாங்கள்

பொதுநல விஷயங்களைப் பற்றிக் கதைத்தோம். பல்கலைக்கழக வாழ்க்கையைப் பற்றிக் கதைத்தோம். படிப்பைப் பற்றிக் கதைத்தோம்....ஆனால் ஒன்றைத் தவிர.......

அந்த நாள்தான் இருபத்தி ஐந்தாம் திகதி கொழும்பு சரஸ்வதி மண்டபத்தில்.

அங்கு அவளை நான் சந்தித்த போது அவள் ஒரு தேவதையாய் வீணையைக் கைகளில் ஏந்திய வண்ணம் என்னைப் பார்த்துச் சிரித்து விட்டு "பிரசன்னா உங்களைப் பிறகு சந்தித்து கதைக்கிறேன்" என்று சொல்லி விட்டு மேடையின் பின்பக்கத்தை நோக்கி நடந்தாள்.

ஆனால நான் அவளுடன் பழகிய கொஞ்ச நாட்களிலேயே அவளும் என்னை விரும்புகிறாள் போன்ற உணர்வு என் மனதிற்குள் தோன்றியது. இருந்தும் இருவரும் மௌனமாகவே எங்கள் உணர்ச்சிகளை வெளிப்படுத்தாமல் மென்று விழுங்கி விட்டு போலியாய் பல விஷயங்களைப் பற்றிக் கதைப்போம.

அவளிடம் என் உள்ளத்து உணர்வுகளை வெளிப்படுத்தும் அநத நாளை நான் எதிர்பார்த்துக் காத்திருந்தேன்.

அன்று நானும் என்னை அவளிடம் அர்ப்பணிக்க தயாராகிவிட்டவனாய் மனதை திடப்படுத்திக் கொண்டு அவளது, வீணைக்கச்சேரி முடியும்வரை என் ஆரதிக்காக காத்திருந்தேன்.

☞ ...



# 11

மண்டபத்தில் ஆரதியின் வீணைக் கச்சேரியைப் பார்க்கக் கூட்டம் குழுமியிருந்தது.

ஆரதி வந்தாள், மேடைக்கு வந்தாள். வீணையைக் கையிலேந்திய வண்ணம் ஒரு தேவதையாய் மேடையில் வந்தமர்ந்தாள்.

வீணைக்கச்சேரியை ரசிக்க வந்தவர்கள் கைதட்ட, பின் அந்தச் சத்தம் ஓய்ந்து, வீணையின் சுரங்களை ஆரதியின் பின்னிய விரல்கள் மீட்ட எல்லோரையும் அவள் தன் இசையால் கவர்ந்திழுத்தாள்.

ஆரதியின் வீணைக் கச்சேரியில் முதல் வரிசையில் அமர்ந்திருந்தவர்களில் நானும் ஒருவன். அவளது ரசிகன்.

அவளை எப்படிப் புகழ்வது என்று எனக்கே புரியவில்லை. அவளது திறமை, அழகு இவையெல்லாம் அவளை எவ்வளவு தூரம் கொண்டு வந்து விட்டிருக்கிறது என்று அப்போதுதான் நான் உணர்ந்தேன்.

நான் மிருதங்க வகுப்புகளுக்கு சென்று கொண்டிருந்தபோது, அரைப் பாவாடையணிந்து வீணையைக் கையிலேந்தி வகுப்புகளுக்குச் சென்று கொண்டிருந்தவள் இன்று இசையில் ஒரு மேதையாகி மேடையிலே அவளது திறமையை எத்தனை பேர் புகழ, எத்தனையோ பத்திரிகைகள் அவளது போட்டோவுக்கு முக்கியத்துவம் கொடுத்து அவளை விமர்சிக்க அவள் ஒரு பல்கலைக்கழக மாணவியாய், பெருமை தலைக்கனம் கொஞ்சமும் இல்லாதவளாய் அன்று புத்தகங்களைக் கையிலேந்தி நடந்து வந்ததை திரும்ப நினைத்துப் பார்க்கும் போது ஒரு கணம் ஏக்கமாகி அந்த ஏக்கங்கள் நெஞ்சில் கனமாகி வலித்தது.

வீணைக் கச்சேரி ஒன்பதரை மணிக்கு முடிவடைந்தது.

அதன் பின் அவள் ஒரு கொடியாய் மேடையை விட்டிறங்கி என்னை நோக்கி நடந்து வந்தாள்.

ஒரு தேவதையாய் வீணையைக் கையிலேந்தி பின்னிய விரல்களால் வீணையை மீட்டி எத்தனையோ ரசிகர்களை தன்பக்கம் இழுத்துக் கொண்டவள், என்னை நோக்கி நடந்து வந்தாள்.

அப்பொழுதுதான் நான் ஒரு கணம் என்னை நினைத்துப் பார்த்தேன். இவளது திறமையை ரசிக்க வந்த நான் இவளுக்காக உள் மனதிற்குள் எவ்வளவு பெருமைப்படுகிறேன். இவளை எவ்வளவு தூரம் என் மனதிற்குள் பூட்டி வைத்து தரிசிக்கிறேன்.

இன்று எப்படியாவது உள் மனதிற்குள் பூட்டி வைத்திருக்கும் அந்தக் 'காதலை' அவளுக்கு வெளிப்படுத்த வேண்டும் என்று திடசங்கற்பம் பூண்டவனாய் அவளைப் பார்த்துச் சிரித்தேன்.

வெள்ளைச் சேலையுடுத்து நீண்ட கூந்தல் அசைந்தாட மல்லிகைச் சரங்கள் தலையில் அமர்ந்திருந்து அவளது கூந்தலுக்கு மேலும் மெருகூட்ட அவள் சிரித்த வண்ணம் மௌனமாய் என் பக்கத்தில் வந்து நின்றாள்.

"ஆரதி" வறண்டு விட்ட தொண்டையை ஈரமாக்கிக் கொண்டு அவளைக் கூப்பிட்டேன்.

அவள் தன் முத்துப் பற்களைக் காட்டி என்னைப் பார்த்துச் சிரித்தாள். பின்.....

"பிரசன்னா இன்று என் வீணைக் கச்சேரி எப்படியிருந்தது?" என்று கேட்டாள்..

"பிரமாதம் ஆரதி. நிஜத்தில் இப்படியொரு வீணைக் கச்சேரிக்கு நான் போனதில்லை. உன்னை இன்று இப்படி ஒரு இசை மேதையாக பார்க்க எவ்வளவு பெருமையாக இருக்கிறது தெரியுமா?"

ஆரதி தலையைக் குனிந்து கொண்டாள். "ஆரதி" நான் திரும்பவும் கூப்பிட்டேன். அவள் நிமிர்ந்து பார்த்தாள். கண்வெட்டாமல் சில கணங்கள் பார்த்தாள். மனதிற்குள்

எதையோ புதைத்து வைத்துக் கொண்டு சொல்லத் துடிப்பது போல் என்னைப் பார்த்தாள்.

"நீண்ட உங்கள் கூந்தலில் ஏறியிருக்க இந்த மல்லிகைப்பூக்கள் எவ்வளவு கொடுத்து வைத்திருக்க வேண்டும் தெரியுமா ஆரதி !"

"இந்த மல்லிகைப் பூக்கள், வெண்ணிறச் சேலை இவையெல்லாம் உங்களுக்கு எவ்வளவு அழகாய் இருக்கிறது."

அவள் சிரித்தாள். உதடுகளை கடித்துக் கொண்டு தலையைக் குனிந்த வண்ணம் சிரித்தாள்.

பின் "அதிகம் புகழாதீர்கள பிரசன்னா" என்று சொன்னாள்.

நான் அவளை நேருக்கு நேராக பார்த்தேன். கண் வெட்டாமல் சில கணங்கள் அவள் கண்ணிற்குள் பார்த்தேன்.

'ஆரதி இவ்வளவு திறமை கொண்ட உங்களை, மனதார நான் விரும்புகிறேன்' என்று சொல்ல வேண்டும் போல் இருந்தது. உதடுகளைக் கடித்துக் கொண்டேன்.

"நான் போய் வரட்டுமா? பிரசன்னா" என்றவள் என் விடைக்காக காத்து நிற்பவள் போல் நின்றாள்.

"ஆரதி நான்...." என்ற வண்ணம் அவளை நான் நிமிர்ந்து பார்த்தேன். அவளும் எதையோ ஆவலுடன் எதிர்பார்ப்பது போன்று தலையாட்டினாள்.

“பிரசன்னா சொல்ல வந்ததை சொல்லி முடியுங்கள். எப்பொழுதும் சொற்களை இடையில் விழுங்கக் கூடாது. அதுவும் கூட ஒரு வித பலவீனம்தான். மனதில் தைரியமில்லாதவர்கள்தான் சொற்களை இடையில் விழுங்குவார்கள்”


நான் நிமிர்ந்து அவளைப் பார்த்தேன். அவள் சிரித்த வண்ணம் என் கண்களைப் பார்த்தாள்.

“இன்று சொல்ல முடியாவிட்டால் நாளை Campus இல் சொல்லுங்களேன்” என்றாள் ஒரு கேள்விக்குறியுடன் .

“நாளை சந்திப்போமே!” என்று சொல்லிவிட்டு மேடையின் பின் பக்கம் நோக்கி நடந்தாள்.

அப்பொழுதும் நான் அவளது அந்தக் கேள்விக்குறிக்கு விடைசொல்ல தைரியமில்லாதவனாய், அவளை மீண்டும் நாளை சந்திக்கும் நினைவுடன் அவள் மறையும் வரை பார்த்து நின்றேன்.

...



# 12

"**வா**ழக்கை என்பது பல அத்தியாயங்களைக் கொண்ட கதைப்புத்தகம் மாதிரி. அதில் சுவைத்து ரசிக்கக்கூடிய அத்தியாயங்களும் உண்டு. அழுது மறக்க வேண்டிய அத்தியாயங்களும் உண்டு பைரவி"

பைரவி என் கண்களுக்குள்ளே பார்த்தாள். கண்வெட்டாமல் சில கணங்கள் பார்த்தாள்.

பின் " பிரசன்னா ! நீங்கள் சொல்வதன் அர்த்தம் புரியவில்லையே" என்று சொன்னாள்.

"பைரவி கடந்து வந்த பாதையில் நடந்து முடிந்த நிகழ்ச்சிகளை நினைத்துப் பார்க்கிறேன். அவற்றில் எத்தனை சுவையான அத்தியாயங்கள்! எத்தனை சோகமான அத்தியாயங்கள்!"

அவள் சிரித்தாள். பைரவி சிரித்தாள். எச்சிலை மென்று விழுங்கி விட்டு என் கண்களுக்குள்ளே சிரித்தாள்.

"பிரசன்னா! Darling ! இப்பொழுது உங்கள் பக்கத்தில் இப்பிடி உங்கள் கதையைக் கேட்டுக் கொண்டு உங்கள் தோளில் உரிமையுடன் சாய்ந்து வருவதும் என்னைப் பொறுத்தவரை ஒரு சுவையான அத்தியாயம்தானே.!"

நான் அவளைக் கோபத்துடன் பார்த்தேன். அவள்! பைரவி! தலையை எடுத்து யன்னலின் பக்கமாகச் சாய்த்துக் கொண்டாள்.

அவள் என்னைத் தேற்றுவதற்கு அப்படிச் சொல்கிறாள் என்று நினைத்துக் கொண்டேன்.

புகையிரதம் ஓடிக் கொண்டிருந்தது. வாழ்க்கையைப் போல மேடு சரிவில்லாத நீண்ட பாதையில் ஓடிக்கொண்டிருந்தது.

ஆரதி! நடந்து வந்தாள்.

என்னை நோக்கிப் புன்னகையுடன் கைகளைக் காட்டிய வண்ணம் அந்த வெண்முகில் கூட்டத்திற்கிடையே நடந்து வந்தாள்.

"பிரசன்னா! கடந்து வந்த பாதையில் உங்கள் கால்களில் முட்டி மோதி உங்கள் விரல்களைப் புண்ணாக்கிய அந்த தடைக்கல்லைப் பற்றி இந்தப் பெண்ணுக்குச் சொல்கிறீர்களா?" என்று கேட்ட வண்ணம் என்னை நோக்கி நடந்து வந்தாள்.

கண்களைக் கசக்கி விட்டு மீண்டும் அந்த ஆகாயத்தைப் பார்த்தேன். என்னைப் பார்த்துச் சிரித்து வந்த என் ஆரதியை அங்கு காணவில்லை.

ஆமாம் அவள் வெண்முகிற் கூட்டத்துடன் மறைந்து விட்டாள்.

நான் பைரவியைப் பார்த்தேன். அவள் என்னையே பார்த்த வண்ணமிருந்தாள்.

"மிகுதியை சொல்லுங்களேன் Darling" என்றாள் உதடுகளைக் கடித்துக் கொண்டு.

நான் தொடர்ந்தேன். என் ஆரதியைப் பற்றித் தொடர்ந்து சொன்னேன்.

அன்றைய வீணைக் கச்சேரியின் முடிவில் கேள்விக் குறியுடன் சென்ற அவளுக்கு விடை சொல்ல நான் பல்கலைக்கழக வளாகத்தினுள் இருந்த சீமெந்து பெஞ்சுகள் அமைக்கப்பட்டிருந்த இடத்தை நோக்கி நடந்தேன்.

ஆனால் நான் அங்கு போவதற்கு முன்பே, அவள் எனக்காக காத்திருந்தாள்.

எனக்காக காத்திருக்கும் அவளைக் கண்டதும், எனக்குள் ஏற்பட்ட மகிழ்ச்சிக்கு அளவேயில்லை.

அந்த அசோக மரங்கள், சீமெந்து பெஞ்சுகளுக்கு நிழல் கொடுக்க நான் அவளருகில் என் இனிய ஆரதியின் அருகில் அமர்ந்தேன்.

எனக்குள் அவளும் என்னை விரும்புகிறாள் போன்ற ஒரு உணர்வு.

அவள் கண்களை வெட்டாமல் என்னைப் பார்த்துச் சிரித்தாள்.

நான் சில கணங்கள் அவள் கண்களிற்குள் பார்த்தேன்.

அவள் சிரித்தாள். என்னையே பார்த்துச் சிரித்தாள். 'சொல்ல வந்ததை சொல்லத் தைரியமில்லாத முதுகெலும்பற்ற ஒரு ஆண்மகன் நீங்கள்' என்பது போலச் சிரித்தாள்.

"ஆரதி" நான் அவளைக் கூப்பிட்டேன். சிரிப்பை நிறுத்தி விட்டு கை நகங்களைக் கடித்த வண்ணம் என்னைப் பார்த்தாள்.

நாணலுடன் சேர்ந்த அவள் பார்வையில், என் ஆரதியின்! அந்த அழகை ஒரு கணம் நான் ரசித்தவனாய், "மென்மையான உங்கள் இந்த விரல்களின் மகிமை எவ்வளவு" என்றேன்.

அவள் கை நகங்களை கடிப்பதை நிறுத்திவிட்டு கால் விரல்களால் அசோக மரங்களின் காய்ந்த சருகுகளை தட்டிக் கொண்டிருந்தாள்.

என் மனதிற்குள் ஒருவித ஏக்கம். அத்துடன் சேர்ந்த கூச்சம் நெஞ்சு படபட என்று அடித்துக் கொண்டது.

ஆமாம் இதயத்துடிப்பின் வேகம் அதிகரித்து விட்டது.

உடம்பெல்லாம் வியர்த்துக் கொட்டியது. நான் அவளைப் பார்த்தேன்.

சொல்ல வந்ததை சொல்லி விட்டால் அவளது முடிவு என்னவாக இருக்கும் என்று நினைத்துப் பார்த்தேன்.

கள்ளம் கபடமற்ற இனிய அவளது, என் ஆரதியின் முகத்தை மீண்டும் பார்த்தேன்.

எனக்குள் ஒரு துணிவு வந்து விட்டது. என் மனம் 'நீ ஒரு முதுகெலும்பற்ற ஆண்மகன் பிரசன்னா!' என்று சொன்னது.

என் ஆரதி! காய்ந்த சருகுகளைக் கால்களால் தட்டுவதை நிறுத்திவிட்டு என்னைப் பார்த்தாள்.

சில கணங்கள் மௌனமாகவே என்னைப் பார்த்தாள். பின் "சொல்லுங்களேன் பிரசன்னா" என்றாள்.

தொண்டையை அடைத்து வந்த எச்சிலை மென்று விழுங்கிவிட்டு அவளை ஒரு கணநேரம் பார்த்தேன். பின் "ஆரதி நான் உங்களை மனதார......"

நான் சொல்லி முடிக்கவில்லை. அவளது முகத்தில் ஏற்பட்ட மாற்றத்தை என்னால் காண முடிந்தது. அவளது கண்களில் கண்ணீர்த் துளிகள் பனித்து விட்டன.

"Sorry ஆரதி ! நான் தப்பாக ஏதும் சொல்லிவிட்டால் என்னை...!

கள்ளம் கபடமற்ற அந்தச் சிரித்த முகத்தில் ஏற்பட்ட வேதனையை அப்போதுதான் என்னால் உணர முடிந்தது.

பனித்த கண்ணீர்த் துளிகள் காதோரம் வழிந்து செல்ல, நெஞ்சத்தின் ஆழத்தில் புதைத்து வைத்திருந்த உணர்ச்சிகள் எரிமலையாய் கொதித்தெழ அவள் நிமிர்ந்து என்னைப் பார்த்தாள்.

ஒரு கணம் என் நெஞ்சு கூசி, பாதாளத்திற்குள் போய் விழுவது போன்ற பிரமை.

வறண்டு விட்ட தொண்டையுடன் அவள் என்னைக் கூப்பிட்டாள். அவளது இனிய குரலில் ஒரு மாற்றம். சுருதி பேதமடைந்தது போன்ற பிரமை !

நிதானத்துடன் அவளை நான் பார்த்தேன். அவள் சொல்லப் போவதைக் கேட்க அவளைப் பார்த்தேன்.

அவள் சொன்னாள்.

“பிரசன்னா இந்த அசோக மரங்களின் உதிர்ந்த சருகுகளைப் பார்த்தீங்களா?”

நான் தலையாட்டினேன்.. எனக்கு ஒன்றுமே புரியவில்லை.

“நானும் அந்தச் சருகுகளில் ஒன்று”

இன்னமும் எனக்குப் புரியவில்லை.

“புரிந்ததா பிரசன்னா!” வழிந்தோடும் கண்ணீரைத் துடைத்த வண்ணம் பொத்தென்று வந்த அழுகையை அடக்கி மென்று விழுங்கி விட்டுச் அவள், என் ஆரதி ! எனக்குச் சொன்னாள்.

அப்பொழுதும் எனக்குப் புரியவில்லை. “ஆரதி” நான் கூப்பிட்டேன்.

அவள் முகம் சிவந்திருந்தது, கண்களும்கூட........!

எனக்கு இன்னமும் புரியவில்லை.

அவள் அழுதாள். விக்கி விக்கி அழுதாள். நான் “ஆரதி என்ன நடந்தது” என்று கேட்டேன்.

அப்பொழுதும் அவள் அழுகையை நிறுத்தாதவளாய் என்னை நிமிர்ந்து பார்த்தாள்.

பின் விக்கிய வண்ணமே "எங்கள் பாஷையில் சொல்லப் போனால், இந்த வீணையின் சுரங்களை மீட்ட முடியாது. தந்திக் கம்பிகள் அறுந்து போய் விட்டன பிரசன்னா!"

எனக்கு ஒரு கணம் இந்த உலகமே சுற்றுவது போன்ற பிரமை. ஏதோ ஒன்றை நான் பறி கொடுத்து விட்டது போன்ற பிரமை !

அப்படியானால் என் இனிய இந்தக் கலையரசி விடைகாண முடியாத ஒரு கேள்விக் குறிதானா?

சொன்னதை நம்பவே முடியவில்லை. பின்னிய விரல்களால் வீணையைக் கையிலேந்தி வாசிக்கும் அவளது வாழ்க்கைப் பின்னணி ? அதுவும் ஒரு கேள்விக் குறிதானா?

பொங்கி வந்த தாபத்தை மென்று விழுங்கிவிட்டு அவளை நான் பார்த்தேன். கேள்விக் குறியுடன், என் ஆரதியை நான் பார்த்தேன். அவள் அழுது கொண்டேயிருந்தாள்.

எனக்கு இப்பொழுது விளங்கி விட்டது. மெல்ல அருகில் சென்று அவள் கைகளை நான் முதன் முறையாக தளரவிடாமல் இறுக்கமாய் பற்றிக் கொண்டேன்.

அவள் என்னைப் பார்த்தாள்.


பின் ''பிரசன்னா இந்த வீணையுடன் மிருதங்கம் சேர முடியாது'' தனது பாஷையில் அவள் சொன்னாள்.

''ஆரதி'' அவளது முடிவுக்கு என்னால் ஒன்றும் சொல்ல முடியவில்லை. இன்னும். இறுக்கமாக அவள் கையைப் பற்றிப் பிடித்தேன்.

அவள் கைகளை விடுவித்துக் கொண்டவளாய் ''தந்திக் கம்பிகள் அறுந்து போன வீணையை வாசிக்க முற்பட்டால் சுருதி பேதமடைந்து போகும் பிரசன்னா'' என்று சொல்லிக் கொண்டே எழுந்து நடந்தாள்.

ஆனால் நான் அந்தச் சீமெந்து பெஞ்சில் மரநிழல்களின் கீழ், சருகுகளைப் பார்த்த வண்ணம் கேள்விக் குறியான என் ஆரதி நடந்து போவதைப் பார்த்த வண்ணம் கலங்கிப் போனவனாய் அமர்ந்திருந்தேன்.

☞ ...



# 13

வாழ்க்கை என்ற பாதையில் இறைவன் ஒவ்வொரு தனி ஜீவனையும் ஏதோ ஒரு விதத்தில் சோதனை செய்வது போன்ற உணர்வு எனக்கு.

இரவு வேளைகளின் செயலற்ற தூக்கத்தில் நான் மாத்திரம் அந்த அறையில் தனியாக விழித்திருந்தேன். நான் அததிவாரமிட்டுக் கட்டிய கற்பனைகள் எல்லாம் சிதறி விட்டது போன்ற மன உணர்வு.

வாழ்க்கையில் எவளை அளவுக்கு மேலாக நேசித்தேனோ, அவள், என் இனிய ஆரதி விலகிப் போவது போன்ற பிரமை.

நினைத்துப் பார்த்தேன், ஆரதியை. எதற்காக அவள் மீது எனக்கு இவ்வளவு மறக்க முடியாத பாசம் உருவானது.?

அவள் மேலா, அவள் உடலின் மேலா, இல்லை அவள் இசையின் மேலா?

நிச்சயமாக நான் அவளை அவள் உடலை ரசிக்கவில்லை. அவள் உள்ளத்தையும் இசையையும்தான் ரசித்தேன்.

அப்படியானால் அவள் தந்திகள் அறுந்துவிட்ட வீணையாக இருந்தால் என்ன? அது அவளைப் பொறுத்தவரை கடந்து வந்த பாதையில் நடந்து முடிந்த நிகழ்ச்சிகள். வாழ்க்கையில் நடந்து முடிந்தவைகளைப் பற்றியே நினைத்துக் கொண்டிருந்தால் நடக்க வேண்டியவைகள்...!.

ஆரதி, என் ஆரதி ஒரு கேள்விக்குறி. ஆனால் அந்த கேள்விக் குறியின் பின்னணி எனக்குத் தெரியாவிட்டாலும், அவள் எத்தனை நாட்களுக்கு ஒரு கேள்விக்குறியாகவே இருப்பது. இதற்கு ஒரு கமா, முற்றுப்புள்ளி வைக்க வேண்டும் என்று நினைத்துக் கொண்டேன்.

அன்றிரவு, என் இனிய ஆரதியைச் சந்தித்த அன்றிரவு, அவள் திரும்பத் திரும்ப என் மனக்கண் முன் வந்தாள்.

கேவிக் கேவி அழுதுகொண்டே வந்தாள்.

ஒரு இசை மேதையின் வாழ்க்கைப் பின்னணியை நினைத்துப் பார்த்தேன். ஆமாம் ஆரதியைத்தான்.

கலங்கி விட்ட என் மனதில் ஒரு உறுதி தென்பட்டது.

நிதானமாக நான் நினைத்துப் பார்த்தேன். நிச்சயமாக கேள்விக்குறிக்கு ஒரு முற்றுப்புள்ளி வைத்தாக வேண்டும்.

ஆனால் அதற்கு அவளின் முடிவு, அவளது மனதை ஆரதியின் மனதை பக்குவமாகத் திடப்படுத்த வேண்டும்.

சொல்ல வேண்டியவற்றையெல்லாம் பக்குவமாக எடுத்துச் சொல்ல வேண்டும் என்ற முடிவுடன் அடுத்த நாட்காலை பல்கலைக்கழக வளாகத்தினுள் அவளைத் தேடி நடந்தேன்.

ஆனால் அவள் அந்த அசோக மரநிழல்களின் கீழ் அமைக்கப்பட்டிருந்த சீமெந்து பெஞ்சில் அமர்ந்து எதையோ படித்துக் கொண்டிருந்தாள்.

நிதானத்துடன் அவளை நோக்கி நான் நடந்தேன்.

அவள் என்னை நிமிர்ந்து பார்த்தாள். சோகம் தோய்ந்த முகத்துடன் என்னை நிமிர்ந்து பார்த்தாள்.

'பிரசன்னா, நீங்கள் எனக்காக உங்கள் வாழ்க்கையை பாழடித்து விடாதீர்கள்' என்பது போல் என்னைப் பார்த்தாள். வறண்டுவிட்ட தொண்டையை ஈரமாக்கிக் கொண்டு "ஆரதி" என்று அவளைக் கூப்பிட்டேன். கலங்கி விட்ட கண்களுடன் நிமிர்ந்து பார்த்த அவள்....

"என்னை மன்னித்து விடுவீர்களா? பிரசன்னா, நேற்று நான் அப்படி நடந்து கொண்டதற்கு"

"ஆரதி நீங்கள் எந்தவொரு பிழையும் செய்யவில்லையே......."

"நான் சொல்லாமலேயே எழுந்து போய் விட்டேனே"

நான் சிரித்தேன். எதுவும் சொல்லாமலே அவளைப் பார்த்துச் சிரித்தேன்.

அவளும் சிரித்தாள். ஆனால் அவள் முகத்தில் சோகத்தின் களைப்புத் தெரிந்தது.

"ஆரதி மனித வாழ்க்கை எத்தனை அர்த்தங்களைக் கொண்டது தெரியுமா?"

அவள் என் ஆரதி நிமிர்ந்து பார்த்தாள்.

''நடந்து முடிந்தவைகளை விட நடக்கப் போவதைப் பற்றி எதிர்பார்த்து வாழ்வது மனதில் இருக்கும் சுமைகளை ஓரளவு இறக்கி வைக்க உதவியாக இருக்கும் ஆரதி,'' நான் சொன்னேன்.

அவள் சிரித்தாள்.

'பிரசன்னா நீங்கள் தத்துவம் கதைக்கிறீர்களா?' என்பது போல் சிரித்தாள். சோகத்தின் களைப்பு முகத்தில் தெரிய, இருந்தும் முக்காடு போட்டு மறைப்பது போல அதை மறைத்து விட்டு என்னைப் பார்த்து என் இனிய ஆரதி சிரித்தாள்.

''ஆரதி, வாழ்க்கையில் எதிர்பார்ப்புகளும், ஏமாற்றங்களும் வந்து விட்டால் அவற்றை மனதை விட்டகற்றுவது மிகவும் கஸ்டம். இருந்தும் ஏதோ ஒன்றில் கவனத்தைச் செலுத்துவதால் ஓரளவு நிம்மதியைக் காணலாம்.''

''பிரசன்னா நான் இன்று கலைத்துறையில் இவ்வளவு தூரம் முன்னேறியதற்கு ஒரு பின்னணியே இருக்கிறது. அதற்கு காரணம்கூட நான் ஏமாந்து விட்டதுதான்'' என்றாள்.

''ஒவ்வொருவரது வாழ்க்கையின் முன்னேற்றத்திற்கும் ஏதாவது ஒரு பின்னணி இருந்தாக வேண்டும் ஆரதி''

''அதுதான் நான் அடிக்கடி சொல்வேனே. 'வாழ்க்கை என்பது ஒரு கதைப்புத்தகம் மாதிரி, அதில் எத்தனையோ அத்தியாயங்கள் இருக்கும். அந்தக் கதைப் புத்தகத்தை வாசிப்பவன் ஆவலுடன் அடுத்த அத்தியாயம் என்ன என்று

எதிர்பார்ப்பது சகஜம். அப்படி ஒவ்வொரு மனிதனும் நடந்து முடிந்து விட்டவைகளை மறந்துவிட்டு நடக்கப போவதை எதிர்பார்த்து வாழ்ந்தால் கதைப புத்தகம் மாதிரியே வாழக்கையையும் ஓட்டி விடலாம்.''

அவள் அந்தக் காய்ந்த சருகுகளை கால்களால் தட்டிக் கொண்டிருந்தாள்.

'நானும் காய்ந்து போன சருகு. இனி நான் எவருக்கும் பிரயோசனப்படப் போவதில்லை' என்பது போல் அந்தச் சருகுகளைக் கால்களால் தட்டிக் கொண்டிருந்தாள்.

''ஆரதி'' நான் கூப்பிட்டேன். என் கைகள் என் புத்தகங்களை விட்டு விலகிச் சென்று மென்மையான அவளது அந்தப் பின்னிய விரல்களைத் தேடின.


நான் பக்குவமாக அவளிடம் ''அப்படி என்ன ஆரதி உங்கள் வாழ்க்கையில் நடந்துவிட்டது'' என்று கேட்டேன்.

அவள் என்னைப் பார்த்தாள். சில கணங்கள் கண் வெட்டாமல் என்னைப் பார்த்தாள்.

பின் கலங்கிவிட்ட கண்களுடன் அவள் சொன்னாள்.

அப்பொழுது என் கரங்களை அவள் விரல்கள் இறுக்கமாக மிக இறுக்கமாக பற்றிக் கொண்டன.

☞ ...



# 14

ஆரதி வந்தாள். முக்காடு போட்ட முகிற் கூட்டத்தை விலக்கி என்னை நோக்கி மெதுவாக நடந்து வந்தாள்.

"பிரசன்னா உங்களை எனக்கு அடிக்கடி பார்க்க வேண்டும் போல் இருக்கின்றது" என்று சொல்லிக் கொண்டே என்னை நோக்கி என் இனியவள் நடந்து வந்தாள்.

கூந்தல் அசைந்தாட, நெற்றியிலே வைத்த பொட்டு சற்றும் கலையாமல் முத்துப்பற்களைக் காட்டிச் சிரித்துக் கொண்டே என்னிடம் வந்தாள்.

"பிரசன்னா, அந்த நாட்களை நினைத்துப் பார்க்கிறீர்களா- அந்த இனிய நாட்கள் இனி வராது. அது கடந்து வந்த பாதையில் முடிந்துபோன ஒரு அத்தியாயம்".

அவள் கண்கள் கலங்கி விட்டன. மெல்லியதாய் என் கன்னத்தில் 'உச்' என்று முத்தமிட்டவளை நிமிர்ந்து பார்த்தேன்.

என் இனியவளைக் காணவில்லை. வானத்து முகிற் கூட்டங்கள் மீண்டும் அவளை முக்காடு போட்டு மறைத்து விட்டனவா?

திரும்பிப் பார்த்தேன்.

பைரவி என் தோள்களில் சாய்ந்து அயர்ந்து போய்க்கொண்டிருந்தாள். பாவம், பரீட்சைக்கு இரவிரவாக விழித்துப் படித்திருக்க வேண்டும் என்று நினைத்தவனாய் திரும்பி அவளைப் பார்த்தேன்.

அவள் மெல்லியதாய்க் கண்களைத் திறந்து பார்த்தாள்.

இங்கேயே பிறந்து, இங்கேயே வளர்ந்து விட்ட அவள் போக்கும், எங்கள் தமிழ்ப் பெண்களை விட சற்று மாறுபட்டு இருந்ததில் ஆச்சரியப்படுவதற்கு ஒன்றுமில்லை.

"பைரவி" நான் கூப்பிட்டேன். அவள் நிமிர்ந்து என்னைப் பார்த்தாள்.

"நீ ஒரு அழகிய பெண். அழகான பண்பாடான ஒரு பெண். அதைப் பாழடித்து விடாதே"! நான் சொன்னேன்.

அவள் சிரித்தாள். ஏதோ அர்த்தத்துடன் என்னைப் பார்த்துச் சிரித்தாள். பின்...

"பிரசன்னா Darling I like you very much" என்றவள் மறுபக்கம் திரும்பிக் கொண்டாள்.

இந்தப் பெண்களைப் புரிந்து கொள்வது எவ்வளவு கஷ்டமான விடயம் என்று நினைத்தவனாய் ஆரதியின், என் இனியவளின் கதையை அவளுக்கு, பைரவிக்குச் சொன்னேன்.

அப்பொழுது ஆரதிக்கு வயது பதினெட்டு. பருவத்து உணர்ச்சிகள் பொங்கியெழும் இனிய பருவம். அந்தப் பருவ வயதில் தான் அவளின் பெற்றோர் ஆரதிக்கு கலியாணம் பேசி திருமணம் முடித்து வைத்தார்கள்.

சவுதியில் எஞ்சினியராக வேலை செய்து கொண்டிருந்த ஆனந்தன் என்பவன் விடுமுறையில் இலங்கைக்கு வந்திருந்தபோது அவளது திருமணம் நடைபெற்றது.

அசோக மர நிழல்களின் கீழ் போடப்பட்டிருந்த சீமெந்து பெஞ்சில் அமர்ந்திருந்து கதைக்கும் போதுதான் இதை அவள் எனக்குச் சொன்னாள்.

அவள் என்னைப் பார்த்து 'நான் மணம் முடித்தவள்' என்று சொல்லியபோது எனக்கு என் மேல் இடி விழுந்து விட்டது போன்ற பிரமை.

கட்டி வைத்த மணல் வீட்டை கரையை நோக்கி வந்த கடலலைகள் அடித்துச் சென்றது போன்ற பிரமை.

அப்பொழுது நான் நிமிர்ந்து அவளைப் பார்த்தேன்.

விழிகளை இறுக மூடிக் கண்ணீரை மறைக்க நினைத்தவள் என்னைப் பார்த்துச் சிரித்தாள்.

“ஆரதி” நான் அவளைக் கூப்பிட்டேன்.

நிமிர்ந்து பார்த்தாள். கண்வெட்டாமல் சில கணங்கள் என்னைப் பார்த்தாள்.

அவள், என் ஆரதி சொன்னாள். எனக்குத் தன் கதையைச் சொன்னாள்.

‘திருமணம் முடித்து அந்த இருபத்தெட்டு நாட்கள் நான் அவருடன் வாழ்ந்த வாழ்க்கையை நினைத்துப் பார்க்கிறேன்’, என்று அவள் சொன்னாள்.

இருபத்தியொன்பதாம் நாள் சவுதிக்குப் போகும்போது “ஆரதி எப்படியும் ஒரு மாதத்திற்குள் உன்னைக் கூப்பிட்டு விடுகிறேன்” என்று அன்பாக என் இதழ்களை முத்தமிட்டுப் போன அந்த நாட்களை நான் நினைத்துப் பார்க்கிறேன்” என்று ஆரதி சொன்னாள்.

பொங்கி வந்த அழுகையை அடக்கிக் கொண்டு அவள், ஆரதி ! என்னை நிமிர்ந்து பார்த்தாள்.

வீணையை மீட்டிய அந்தக் கரங்களில் ஒரு நடுக்கம்.

உணர்ச்சிகளின் உத்வேகம்.

"பிரசன்னா! நானும் சவுதிக்குப் போவதற்கு டிக்கற்றை எதிாபார்த்து, நாட்களை கணக்குப போட்டுக் கொண்டிருந்த எனக்கு, அவர் என் கணவர் பெட்டியிலே.... வந்திறங்கியபோது ...... இந்த உலகமே என்மேல் விழுந்து விட்டது போன்ற பிரமையுடன், திக்பிரமை பிடித்து நான் கத்தியதை நினைத்துப் பார்க்கிறேன்" என்று சொன்னாள்.

அப்பொழுது எனக்குப் புரிந்து விட்டது. என் ஆரதியை எனக்குப் புரிந்து விட்டது. கேள்விக்குறியாக நின்ற அவள்......இரண்டே மாதங்களிற்குள் கணவனை இழந்து விட்ட ஒரு விதவை.! என்று எனக்குப் புரிந்து விட்டது.

எனக்கும்கூட அழுகை வந்து விட்டது. கண்களைத் துடைத்துக் கொண்டு அவளை நிமிர்ந்து பார்த்தேன்.

அவள்! என் ஆரதி ! என்னைப் பார்த்துச் சிரித்தாள்.

"பிரசன்னா, இது நடந்து வந்த பாதையில் முடிந்து போன ஒரு சோக அத்தியாயம்" சொல்லிவிட்டு மீண்டும் என்னைப் பார்த்தாள்.

நான் மௌனமாகவே அவளைப் பார்த்தேன்.

ஆரதியின் கண்கள் கலங்கி விட்டன. அழுதாள், விக்கி விக்கி அழுதாள் கண்களில் இருக்கும் நீர் வற்றும்வரை.. அவளது கண்களும் அழுதழுது சிவந்து விட்டன.

என்னால் இதை நம்ப முடியவில்லை. சின்ன வயதில் அவள் அனுபவித்து விட்ட வேதனைகள்!

"ஆரதி" நான் கூப்பிட்டேன்.

கண்களைத் துடைத்துவிட்டு என்னை நிமிர்ந்து பார்த்தாள்.

" I am so sorry" என்றேன்.

"Its all right" என்றவளின் முகம் கொவ்வைப்பழம் போல் சிவந்திருந்தது.

கேள்விக் குறியான அவளது வாழ்க்கைப் பின்னணி இப்போது எனக்குத் தெரிந்து விட்டது.

ஏன் ஆரதி, நான் எனக்குள் வைத்துப் பூஜித்த ஆரதி ஒரு விதவைப் பெண் நம்ப முடியவில்லை !

'இந்த வீணையுடன் மிருதங்கம் சேர முடியாது' என்று அவள் சொல்லியதின் அர்த்தம்..... 'தந்திக் கம்பிகள் அறுந்து போன இந்த வீணையை மீட்ட முற்பட்டால் சுருதி பேதமடைந்து விடும்' என்று அவள் சொல்லியதின் அர்த்தம்.....

நான் அவளை நிமிர்ந்து பார்த்தேன். 'ஆரதி நீங்கள் கூறியதின் அர்த்தம் எனக்குப் புரிந்து விட்டது' என்பதுபோல் பார்த்தேன்.

'இந்த மிருதங்கமும், அந்த வீணையும் சேர முடியும்' என்பதுபோலப் பார்த்தேன்.

ஆனால் அவள் ஒரு கேள்விக் குறியாகவே என்னைப் பார்த்தாள்.



# 15

புகையிரதம் லண்டன் 'கிங்ஸ்குறஸ்' புகையிரத நிலையத்தை நோக்கி மெதுவாக ஊர்ந்து கொண்டிருந்தது.

பைரவி நிமிர்ந்து பிரசன்னாவைப் பார்த்தாள்.

மென்மையான அவள் கரங்கள் அவன் தோள்களைப் பற்ற, அவன் அவள் கரங்களை விலக்கி விட்டு அவளைப் பார்த்தான்.

"பிரசன்னா! Four weeks நான் உங்களைப் பிரிந்திருக்கப் போகின்றேனே"! என்ற வண்ணம் ஏக்கத்துடன் அவனை, அவள் பைரவி பார்த்தாள்.

பிரசன்னா அவளைப் பார்த்தான். கண்வெட்டாமல் சில கணங்கள் அவளைப் பார்த்தான்.

பின் "பைரவி நீ எவ்வளவு அழகானவள் தெரியுமா?"

"உனது எதிர்கால வாழ்க்கை மிகவும் முக்கியமானது. அதை நல்ல முறையில், ஒரு நல்ல ஆண்மகனைக்

கைப்பிடித்து, நல்ல ஒரு மனைவியாக வாழ உன்னைத் தயார்ப்படுத்திக் கொள் பைரவி !

"வாழ்க்கையில் படித்தால் மட்டும் போதாது. அதைத் தக்க முறையில் பயன்படுத்த வேண்டும் பைரவி ! படிப்பு வாழ்க்கைக்கு அத்திவாரம். ஆனால் அனுபவங்கள்தான் வாழ்க்கையின் ஏணிப்படிகள்".

அவள் பைரவி ! பிரசன்னாவைப் பார்த்தாள். கண்வெட்டாமல் சில கணங்கள் அப்படியே அவனைப் பார்த்தாள்.

"பிரசன்னா ! நீங்கள் உங்கள் கதையை இன்னம் சொல்லி முடிக்கவில்லையே".

"மிகுதியை Campus தொடங்கி Exam முடிந்த பின் சொல்கிறேன்".

"நீங்கள் இன்னமும் அந்த ஆரதியைத்தான் நினைத்துக் கொண்டிருக்கிறீர்களா?"

அந்தக் கேள்வியில் எத்தனையோ அர்த்தங்கள் தொனித்தன.

அவன் நிமிர்ந்து பார்த்தான். அவள் பைரவியைப் பார்த்தான். அவள் கண்களிற்குள் பார்த்தான். 'பைரவி நீ

இன்னமும் ஒரு சின்னப் பிள்ளைதான்' என்பது போல் அவளைப் பார்த்தான்.

அவள் பைரவி, திரும்பவும் அவனை வம்பிற்கிழுத்தாள்.

"பிரசன்னா அப்படியானால் உங்களுடைய current wife ஐ நினைத்துப் பார்ப்பதில்லையா?"

பிரசன்னா ஒரு கணம் அசையாது அப்படியே நின்றான். அவள் கேட்ட கேள்விக்கு அவனால் எந்தவொரு பதிலும் சொல்ல முடியவில்லை.

அவள் சிரித்தாள். பைரவி சிரித்தாள்.

"பாவம் அந்த current wife darling"! அவள் குத்தலாக அவனுக்குச் சிரித்துக் கொண்டே சொன்னாள்.

"பிரசன்னா நீங்கள் ஆரதி ! ஆரதி ! என்று உங்கள் நடந்து முடிந்த அத்தியாயங்களைப் பற்றித்தான் சொல்கிறீங்களே தவிர, நடந்துகொண்டிருக்கிற அந்த இனிமையான அத்தியாயங்களைப் பற்றி, அதாவது உங்கள் current wife ஐப் பற்றி ஒன்றுமே சொல்லவில்லையே?"

அவள் கேட்கும் ஒவ்வொரு கேள்வியிலும் ஏதோ அர்த்தம் இருப்பது போல் அவனுக்குத் தெரிந்தது.

“பைரவி” அவன் அவளைக் கூப்பிட்டான்.

அவள் அவனைப் பார்த்துச் சிரித்தாள்.

“வாழ்க்கை என்ற பாதையில் முதலில் மனதில் நினைத்தவளை, மனதில் முதன் முதல் இடம் பிடித்துக் கொண்டவளை, சாகும்வரை மறக்க முடியாது பைரவி “!

அவள் அவனைப் பார்த்தாள்.

“பின் அப்படியானால் முதன் முதலாக என் மனதில் இடம் பிடித்துக் கொண்ட இந்தப் பிரசன்னாவை மாத்திரம் என்னால் எப்படி மறக்க முடியும்?”

பிரசன்னா அவளைப் பார்த்தான்.

அவன் தலையில் இடி விழுந்தது மாதிரி இருந்தது.

“பைரவி உனக்கு காதல் என்பதன் அர்த்தம் என்னவென்று தெரியுமா?” கோபத்துடன் அவளை அவன் கேட்டான்.

இருவரும் “மனதார” ஒருவரையொருவர் நேசிக்க வேண்டும். அதுதான் காதல், பாசம் எல்லாம்.........

ஒருத்தி மட்டும் ஒருவனை நினைத்துக் கொண்டிருந்தால் அது காதல் அல்ல. அது ஒருதலைக் காதல்.

அவள் கண்கள் கலங்கி விட்டன. பைரவியின் சிவந்த கண்களை அவன் பார்த்தான். பாவம் இளமையின் துடிப்புக்கள், பருவத்தின் கோளாறுகள்........

புகையிரதம் கிங்ஸ்குறஸ் புகையிரத நிலையத்தில் ஊர்ந்து கொண்டிருந்தது.

"பைரவி" அவன் திரும்பவும் கூப்பிட்டான்.

அவள் எச்சிலை மென்று விழுங்கிவிட்டு சிவந்த கண்களுடன் அவனைப் பார்த்தாள்.

"குடும்பம் என்பது ஒரு கோயில் மாதிரி . அதைக் கட்டுவது மிகவும் சிரமமான வேலை. நீயும் அப்படி ஒரு நல்ல குடும்ப வாழ்க்கையை வாழவேணும் பைரவி".

அவள் பெரிதாகச் சிரித்தாள்.

"You are silly பிரசன்னா ! நான் சந்தோசமாக ஒரு குடும்ப வாழ்க்கை வாழ நான் மனதார நேசித்தவர் எனக்குக் கிடைக்கவில்லையே" ! அவள் பைரவி சொன்னாள்.

அவன் நெஞ்சில் இன்னொரு குத்தல்.

"but பிரசன்னா both are in the same boat"

“நீங்கள் மனதார நேசித்த அந்த ஆரதியுடன் வாழக் கொடுத்து வைக்கவில்லை.. நான் மனதார நேசித்த அந்தப் பிரசன்னா கிடைப்பார் போலத் தெரியவில்லை”

புகையிரதம், புகையிரத மேடையில் நின்றது.
எல்லோரும் இறங்கி நடந்தார்கள்.

அவன் பிரசன்னா அவளைப் பார்த்தான்.

அவள் சோகம் தோய்ந்த சிரிப்புடன் அவனைப் பார்த்தாள்.

இருவரும் புகையிரதத்தை விட்டு இறங்கினார்கள்.


பின் இருவரும் மௌனமாகவே அருகருகே நடந்தார்கள்.

அப்பொழுது அகல்யா பிரசன்னாவைத் தேடிக் கொண்டு பிள்ளைகளுடன் காத்து நிற்பதைக் கண்டுவிட்டு, பைரவியுடன் விரைவாக நடந்தான்.

பிரசன்னாவைக் கண்ட அகல்யாவுக்கு ஒரே சந்தோஷம்.
“She is பைரவி” என்று அகல்யாவுக்கு பிரசன்னா பைரவியை அறிமுகப்படுத்தி வைத்தான்.

"Hello" என்ற அகல்யா சிரிப்புடன் அவளைப் பார்த்தாள். ஆனால் அகல்யா மனதில் ஏதோ ஒருவித கலக்கம்.

"மீண்டும் campus இல் சந்திப்போமே" என்றவள் 'bye' சொல்லி விட்டு தன் பாதையில் நடந்தாள். ஆனால் அவள் பைரவியின் மனம், அவள் நடையிலும் வேகமாக எதையோ நினைத்து அலைந்து கொண்டிருந்தது.



# 16

ஆதவனின் கொடூர ஆட்சி மறைந்து இரவின் இனிய ஆதிக்கம் ஆரம்பமாகும் நேரம்.

அவள் ! அகல்யா வாசற்கதவைத் திறந்து வெளிப்பக்கமாக எட்டிப் பார்த்தாள். அவள் தண்ணீரூற்றி வளர்த்த அந்த ரோசாச் செடி பூக்காமலேயே வாடி வதங்கி கருகிக் கொண்டிருந்தது. அவள் மனதிற்குள் ஒரு கலக்கம்.

பிரசன்னா, மேல் மாடியில் பிள்ளைகள் இருவருடனும் விளையாடிக் கொண்டிருந்தான். ஆனால் அகல்யா.......! நெஞ்சிற்குள் எதையோ புதைத்து வைத்து வெளியிலே சொல்ல முடியாமல், பிரசன்னாவைக் கேட்க முடியாமல் போராடிக் கொண்டிருந்தாள்.

அவளது கண்கள் கலங்கி விட்டன. பைரவியை அவனுடன் சேர்த்துக் கண்டது முதல் அவள் நெஞ்சில் ஒரு பாரம் பெரும் சுமையாகி போராடிக் கொண்டிருந்தது.

ஆமாம் - அவள் அகல்யா, பிரசன்னாவுடன் பைரவி ஒன்றாக புகையிரதத்தில் இருந்து இறங்கி வந்தது முதல்,

அதன் பின் அவள் கண்டு கொண்ட சாட்சியங்கள், பிரசன்னா தன்னை விட்டு விலகிப் போவதைப் போன்ற ஓர் உணர்வை அவளுக்கு ஏற்படுத்தியது.

கலங்கிவிட்ட அவளது அழகான கண்களிலிருந்து நீர்த்துளிகள் பனித்து சொட்டுச் சொட்டாக கன்னத்தை தழுவிச் சென்றன.

வாழ்க்கையில் அவளுக்கு விரக்தி ஏற்பட்டு விட்டது போன்ற பிரமை!

அவள் தனக்குள்ளேயே அழுதாள். அவளால் நம்பவும் முடியவில்லை, நம்பாமல் இருக்கவும் முடியவில்லை.

அவள்-அகல்யா, கற்பனையில் கதாபாத்திரங்களைத் தீட்டி தனக்குத் தானே கெடுதலை உண்டாக்கிக் கொண்டிருந்தாள்.

பிரசன்னா வந்து இரண்டு நாட்களாகிவிட்டன. ஆனால் அகல்யா அவனுடன் முகம் கொடுத்துக் கதைக்கவில்லை.

பிரசன்னாவும் மௌனமாகவே கேட்டவற்றிற்கு விடை சொல்லிவிட்டு புத்தகங்கள் வாசிப்பதில், அல்லாவிட்டால் திலக்குடனும் சிந்துவுடனும் விளையாடுவதில் பொழுதைக் கழித்தான்.

பிரசன்னாவின் மனமும் கலங்கிப் போயிருந்தது.

அகல்யா ஏன் இப்படி நடந்து கொள்கிறாள் என்பதை அவன் ஓரளவு ஊகித்துக் கொண்டாலும் அவனது மௌனம் அவள், அகல்யாவுக்கு மேலும் மேலும் நெஞ்சத்தின் ஆழத்தில் கேள்விக் குறிகளை அம்புகளாகத் தொடுத்தன.

ஆனால் பிரசன்னா சில நேரங்களில் அகல்யா, தான் அடிக்கடி கடிதம் போடாததற்கு அல்லது அடிக்கடி வந்து போகாததிற்கு பொய்க் கோபம் கொள்கிறாள் என்று நினைத்ததுண்டு.

அகல்யா ஒரு கணம் நினைத்தாள் 'என் அத்தான் அப்படியானவர் இல்லை. என்னை விட்டுவிட்டு இன்னொருத்தியுடன் போக மாட்டார்'

ஆனால் மறுகணம் 'இந்த ஆம்பிளைகளையே நம்பக் கூடாது. சேற்றில் மிதித்துவிட்டு கால்களைக் கழுவிக் கொள்ளும் வர்க்கம்' அவள் மனம் மாறி மாறி நினைத்துக் கொண்டது.

ஓ சமுதாயமே ! தமிழ்ச் சமுதாயமே !

கட்டுப்பாடுகள் எல்லைக்கோடுகள் வரைவிலக்கணங்கள்.... ஒருவனுக்கு ஒருத்தி என்ற கட்டுப்பாட்டை விதித்து அந்த ஒருத்தி கற்புள்ளவளாக இருக்க வேண்டும் என்று கற்புக்கு வரைவிலக்கணம் சூட்டி, அந்த மனைவி என்ற பெண்ணுக்கு எல்லைக் கோடுகளை விதித்த தமிழ்ச் சமுதாயமே, நீ ஏன் பெண்களுக்கு மாத்திரம் பாகுபாடு காட்டுகிறாய்!

அப்படியானால் எந்த ஆண்மகனும் எத்தனை பெண்களுடனும் போய் விட முடியும் என்ற அர்த்தமா. பெண்களையும் அப்பிடி நினைத்து விட்டால்.........!

அகல்யாவுக்கு தலை வெடித்து விடும்போல் இருந்தது.

அறுவடையாகிக் கொண்டிருக்கும் பண்பாடுகளை நினைத்துக் கொண்டு மாடிப்படிகளில் ஏறிக்கொண்டிருந்தாள் அகல்யா. அவள் கைகளிலிருந்த புத்தகத்தின் பெயர் "ஒரு வரலாறு தோற்றுப் போகிறது" .

சிந்துவும் திலக்கும் அயர்ந்து போயிருந்தார்கள். அகல்யா அறையை நோக்கி நடந்து வந்தாள். மென்மையான உள்ளம் கொண்ட பலமான அவளது கால்களில் ஒரு நடுக்கம் தெரிந்தது.

'என் அத்தான் அப்படிச் செய்யமாட்டார்' அவள் மனம் திரும்ப அலறிக் கொண்டது.!

பிரசன்னா நிமிர்ந்து பார்த்தான்.

அவள், அகல்யா நடந்து வருவதை 'ஒரு அழகு தேவதையாய் அவன் ஆரதி கூந்தலை விரித்துச் செல்லக் கோபத்துடன் அவனை நோக்கி நடந்து வருவது' போலிருந்தது அவனுக்கு.

அவள் வந்து கட்டிலில் அமர்ந்து கொண்டாள்.

பிரசன்னா நிமிர்ந்து பார்த்தான். கண்வெட்டாமல் சில கணங்கள் அவளைப் பார்த்தான். விரிந்து அசைந்தாடிக் கொண்டிருந்த அகல்யாவின் நீண்ட கூந்தலை ஒரு முறை பார்த்தான்.

பின் “அகல்யா! என்று கூப்பிட்டான்.

அவள் கண்கள் சிவந்திருந்தன. அவள் முகத்தை நிமிர்த்தி நேருக்கு நேராக அவனைப் பார்த்தாள்.

சிவந்து விட்ட கண்களிலிருந்து பனித்த கண்ணீர்த்துளிகளை மறைத்தவளாய் “அத்தான்” என்று அடித்தொண்டையிலிருந்து எழுந்த வந்த விம்மலை அடக்கி விட்டு அவள் கூப்பிட்டாள்.

அவன் சிரித்தான். பிரசன்னா அவளைப் பார்த்துச் சிரித்தான். அவள் அகல்யாவை, அவன் ஆரதியாக கற்பனை பண்ணி அவளைப் பார்த்துச் சிரித்தான்.

அவள் அகல்யா இரண்டு கைகளாலும் அவன் கழுத்தை கட்டிப் பிடித்துக் கொண்டு அவனைப் பார்த்தாள்.

“அத்தான்...” அவள் வார்த்தைகள் தடுமாறின.

“நீங்கள் எனக்கு மாத்திரம்தான் சொந்தம் அத்தான்........”

ஆனால் பிரசன்னா சிரித்தான். மௌனமாகவே அவள் தலையை வருடிக் கொடுத்துக் கொண்டு அவளைப் பார்த்துச் சிரித்தான்.

முடிவுரை எழுத நினைத்த அவன் வரலாற்றுக்கு மீண்டும் முன்னுரை எழுதிய அகல்யா மிகவும் இறுக்கமாக அவனைக் கட்டிப் பிடித்தாள்.

அப்பொழுதும் கூட அவள் மனம் ஒரு கணம் சிலிர்த்துக் கொண்டது.

'என் அத்தானை அவள் எத்தனை முறை கட்டிப் பிடித்து ... அந்தப் பைரவி.....எத்தனை முத்தங்கள் கொடுத்து .....இந்த மனுசனும் அதற்கெல்லாம் இடம் கொடுத்து.....அகல்யாவின் மனதில் சந்தேகங்கள்....'


இறுக்கமான அகல்யாவின் பிணைப்பு தளர அவள் அலட்சியமாக பிரசன்னாவைப் பார்த்து விட்டு கலங்கிவிட்ட கண்களை துடைத்துக் கொண்டு சமையலறையை நோக்கி நடந்தாள்.

அவன், பிரசன்னா அவளையே பார்த்தான்.

அகல்யாவின் ஒவ்வொரு நடத்தையிலும் ஏற்பட்ட மாறுதலை கவனித்தவனாய், மௌனமாகவே அவள் நடந்து போவதைப் பார்த்தான்.

அப்பொழுதும்கூட அவள் அகல்யா நடந்து போவது அவன் இதயத்துள் பூட்டி வைத்திருக்கும ஆரதி நடந்து போவது போலத்தான் அவனுக்கிருந்தது.

'ஆரம்பமாகப் போகும் பிரளயத்துக்கு இது ஒரு அத்திவாரமா?.' என்றுகூட அவனுக்குத் தோன்றியது.



# 17

இரவு பத்து மணிக்கு மேலாகிவிட்டது. பிரசன்னா அயர்ந்து தூங்கிவிட்டான். திலக்கும் சிந்துவும் அவனருகே படுத்து தூங்கிக் கொண்டிருந்தார்கள்.

கட்டிலின் மறுபுறத்தில் படுத்திருந்த அகல்யாவுக்கு நித்திரை வருவதாக இல்லை. புரண்டு புரண்டு படுத்தாள். ஆனால் அவளால நடந்தவைகளை மறந்து நிம்மதியாகத் தூங்க முடியவில்லை.

முகத்தை தலையணைக்குள் புதைத்து ஓசையற்ற விம்மலுடன் குலுங்கியவாறே படுத்திருந்தாள் அகல்யா!

அவள் மனம் கலங்கிப் போய் தேவையில்லாமல் அலைபுரண்டோடிக் கொண்டிருந்தது.

ஒரு முறை தலையணையில் புதைதது வைத்த தலையை நிமிர்த்தி பிரசன்னா முகத்தைப் பார்த்தாள்.

சில கணங்கள் கண் வெட்டாமல் அவனையே பார்த்துக் கொண்டிருந்தாள்.

அடி வயிற்றில் மூண்ட பயம் ஆத்திரத்தைக் கிளப்ப, அந்த தலையணையை எடுத்து பிரசன்னாவின் முகத்தில் போட்டு அழுத்த வேண்டும்போல் தோன்றியது அவளுக்கு.

'இந்த மனுசன் படிக்கவென்று போய் இன்னும் எத்தனை பெட்டையளோடை கும்மாளம் போடுதோ!'

அவள் அகல்யாவுக்கு நித்திரை வருவதாக இல்லை.

பிரசன்னா ! அப்படிச் செய்யக் கூடியவனா? என்ற கேள்வி ஒரு புறத்தில் மனதில் எழுந்தாலும் அதை அவளால் நம்ப முடியவில்லை.

இந்த மனுசன் இப்பிடித்தான் கொழும்பில் படிக்கும்போதும் எத்தனை பெண்களோடை நினைக்கவே சீச்சீ..........!

ஆரதியைக் காதலித்தேன் என்று சொல்லி எத்தனை ஆரதிகளை......!

உள்ளூரப் படபடத்த மனதை மறைத்து, தலையை நிமிர்த்தினாள் அகல்யா.

பிரசன்னா புரண்டு படுப்பது அவளுக்குத் தெரிந்தது.

எப்படியாவது விரைவில் இதற்கு ஒரு முடிவு காண வேண்டும் என்று நினைத்துப் புரண்டு புரண்டு படுத்தாள் அகல்யா.

தன் வாழ்க்கையை இன்னொருத்தி பறித்துச் சென்று விட்ட உணர்வு அவளுக்கு.

உலகமே தன்னைவிட்டு பிரிந்து போவது போலிருந்தது அவளுக்கு..!

இதுபற்றி தம்பிமுத்து வாத்தியாரிடம் சொல்ல வேண்டும் என்று நினைத்த வண்ணம், மீண்டும் புரண்டு படுத்தாள் அகல்யா.

மெல்லியதாய் கதிரவனின் வெண்கதிர்கள் யன்னலினூடாக, படுத்திருந்த அகல்யா முகத்தில் பட்டுத் தெறித்தன.

வேளைக்கே விழித்துவிட்ட பிரசன்னா அவளைக் எழுப்பாமல் அவள் முகத்தையே பார்த்துக் கொண்டிருந்தான்.

என்மேல் இத்தனை பாசம் வைத்திருக்கும் இவளுக்குக்கூட சந்தேகம் என்ற பேய் பிடித்துவிட்டதே. நினைக்கும்போது பிரசன்னாவின் மனம் கலங்கியது.

"அகல்யா.....!"

பிரசன்னா மெல்லிய குரலில் அவளைக் கூப்பிட்டான்..

கண்விழித்த அகல்யாவின் கண்கள் சிவந்து போயிருந்தன.

அவனைப் பார்க்க நிதானமற்றவளாக எங்கோ வெறித்துப் பார்த்த வண்ணம் கட்டிலை விட்டு எழும்பி நடந்தாள் அகல்யா.

பிரசன்னாவிற்கு ஒரே குழப்பமாகவிருக்க எப்படி அவளுடன் கதைப்பது என யோசித்தான்.

ஒரு தீங்கும் தவறும் செய்யாத குற்றவாளியாகத் தான் நிற்கும்போது, ஒரு புறம் அவனுக்கு அகல்யா மேல் கோபமும் மறுபுறம் அனுதாபமும் ஏற்பட்டது.

அகல்யா தன்னை தப்பாக புரிந்துவிட்டாள் என்று பிரசன்னாவிற்கு நன்றாக விளங்கிவிட்டது. ஆனால் தன்னை எப்படி நியாயப்படுத்துவது என்பதுதான் அவனுக்கு தெரியவில்லை.

அகல்யா சாதுவானவள். ஆனால் சாது மிரண்டால்........!

பிரசன்னாவுக்கு, அதுபற்றி கதை எடுக்கவே பயமாகவிருந்தது.

அகல்யா கோப்பி டம்ளருடன் வந்து நிமிராமலேயே பிரசன்னாவுக்கு நீட்டினாள். அவளது காது மடல்கள் சிவந்து முகக்கரையோரம் படர்ந்திருந்தது.

"அகல்யா உனக்கு சொல்ல வேணும் என்றுதான்.......!" பிரசன்னா இழுத்தான்.

“நீங்கள் இப்ப எனக்கு ஒண்டும் சொல்லத் தேவையில்லை. நடவடிக்கைகளைப் பார்த்தால் தெரியுதுதானே......!” திரும்பி நடந்தாள்.

மூண்ட ஆத்திரத்தை அடக்கிக் கொண்டு, “அகல்யா சொல்லுவதைக் கேள்.......! பிரசன்னா கூப்பிட...

அவள் கேட்காமலேயே சமயலறையை நோக்கி நடந்தாள்.

**கா**லைப் பொழுது மௌனமாகவே கழிந்து விட்டது.

அகல்யா எப்படியோ பிரசன்னாவுக்குத் தெரியாமல் தம்பிமுத்து வாத்தியாருக்கு கதையை ரெலிபோனில் சொல்லிவிட்டாள். அவரை வரும்படியும் அழைப்பு விடுத்து விட்டாள்.

சரியாக மதியம் பன்னிரண்டு மணியிருக்கும், காலிங் பெல் சத்தம் கேட்டு பிரசன்னா எழுந்து சென்று முன் கதவைத் திறந்தான்.

தம்பிமுத்து வாத்தியார் வெற்றிலைக் கறைபடிந்த பற்களைக் காட்டிச் சிரித்த வண்ணம் “தம்பி எப்ப வந்தது”என்று கேட்டார்.

“சேர் உள்ளே வாங்கோ” என்றவன் அவருக்கு ஒரு கதிரையைத் தூக்கி வந்து வைத்தான்,

வாத்தியாரும் பிரசன்னாவும் சரளமாகப் பேசினார்கள்.

பிரசன்னா தான் படிக்கும் பல்கலைக்கழகம் பற்றியும், அதன் சுற்றாடல் பற்றியும் விளக்கமாக வாத்தியாருக்கு சொல்லிக் கொண்டிருந்தான்.

வாத்தியாரும் பிரசன்னாவைப்பற்றிக் கதை தொடங்க......!

ரெலிபோன் மணி அடித்தது.

அகல்யா விரைந்து சென்று ரெலிபோனை எடுத்து "ஹலோ" என்றவள் சில வினாடிகள் அமைதியின் பின்....

"ஐயோ அம்மா .....! என்று கத்தினாள்.

பிரசன்னா அவளை நோக்கி ஓடினான்.

நிலத்தில் துவண்டு விழுந்தவள் "ஐயோ என்ரை அம்மா போயிட்டா....!" கதறியழுதாள்.

பிரசன்னா ரெலிபோன் றிசீவரை எடுத்து மறுபக்கத்தில் செய்தி சொன்னவரிடம் விரிவாக விபரம் கேட்டான்.

பொங்கியெழுந்த துயரத்தை அவளால் அடக்க முடியவில்லை.

அவளை வளர்த்தெடுத்த சிவமலர் இறந்து நான்கு நாட்களாகி விட்டன. மரணச் சடங்கும் நடந்து முடிந்து விட்டது. யாழ்ப்பாணத்தின் சூழ்நிலை காரணமாகவும், ரெலிபோன் வசதிகள் துண்டிக்கப்பட்டிருந்ததாலும் உடனடியாக அகல்யாவுக்கு உறவினர்களால் அறிவிக்க முடியவில்லை.


அகல்யாவின் தொண்டை வறண்டு விக்கல் திரும்பத் திரும்ப வந்து தொண்டையை அடைத்துக் கொண்டது.

அவளை வளர்த்த அவள் மாமியார் அவள் தாயாக நினைத்து "அம்மா" என்று கூப்பிடும் அவள் மாமியார் மாரடைப்பால் இறந்த துக்கத்தை அவளால் நேர்கொடுக்க முடியவில்லை.

ஒரு சின்னப் பிள்ளையைப் போல் விடாமல் கதறிக் கதறி அழுதாள்.

தம்பிமுத்து வாத்தியார் ஒரு சமாதானமும் சொல்ல முடியாமல் வாயடைத்து அப்படியே அமர்ந்திருந்தார்.

...



# 18

எல்லாம் முடிந்து ஒரு வார காலமாகிவிட்டது.

அகல்யா இன்னமும் சிவமலரின் மரண அதிர்ச்சியிலிருந்து விடுபடவில்லை.

பிரசன்னா மனித வாழ்க்கையை ஒரு முறை நினைத்துப் பார்த்தான். குறுகிய இந்த மனித வாழ்க்கையில்தான் எத்தனை சோதனைகள், அனுபவங்கள், மாற்றங்கள்......

அவன் அனுபவித்து விட்ட சோதனைகள் மாற்றங்கள்....இவையெல்லாம் ஒரு கனவாகிப் போய் விட்டது அவனுக்கு. நனவான அவனது வாழ்க்கை கூட ஒரு கனவுபோல்தான் அவனுக்குத் தென்பட்டது.

அவள் ஆரதி ! அவனின் இனிய ஆரதி ! பிரசன்னாவின் நெஞ்சை விட்டகலாத அந்த இனிய ஆரதி கதைகூட ஒரு கனவாகி விட்ட பிறகு நனவான இந்த உலகத்தில் அவன் கனவுகளைக் கண்டு கொண்டிருந்தான்.

ஆரதி வந்தாள். அவனை நோக்கி புன்னகையுடன் அவள் நடந்து வந்தாள்.

"பிரசன்னா ஏன் இப்பிடி சோகத்தில் ஆழ்ந்திருக்கிறீர்கள்" என்று கேட்டுக் கொண்டே அவனை நோக்கி நடந்து வந்தாள்.

அவன் கண்களில் கண்ணீர்த்துளிகள் பனித்து விட்டன.

"பிரசன்னா அந்த நாட்களை நினைத்து நினைத்து உங்கள் வாழ்க்கையை பாழடித்துக் கொண்டிருக்கிறீர்கள். நடந்து முடிந்தவற்றை மறந்து விடுங்கள் பிரசன்னா" அவள் ஆரதி மெல்லிய இதழ்களை விரித்து அவனைப் பார்த்துச் சொன்னாள்.

அவன் அழுதான். அவளைப் பார்த்து அழுதான்.

"ஆரதி ! உன்னை நினைத்து உன்னுடன் வாழ நினைத்து தோற்றுப் போன பிறகும் அகல்யாவுடன் வாழும் எனக்கு உன்னை மறக்க முடியவில்லை ஆரதி"!

ஆரதியின் கண்களிலிருந்தும் கண்ணீர்த் துளிகள் சொட்டுச் சொட்டாக விழுந்தன.

"பிரசன்னா, அதுதான் நான் உங்கள் பக்கத்திலேயே இருக்கிறேனே! என்னாலும் உங்களை மறக்க முடியாது பிரசன்னா, ஆனால் அது நடந்து முடிந்த கதை. இந்த அகல்யா ஒரு பாவி,, உங்களுக்கு ஒரு கெடுதலும் செய்யாமல் உங்களை மனதாரக் கணவனாக ஏற்றுப் பூசிக்கும் ஒரு இனிய மனைவி . அவள் என்னைவிட எல்லா விதத்திலும் உங்களுக்குப் பொருத்தமானவள் பிரசன்னா!"

அவன் கண்களைத் துடைத்து விட்டு நிமிர்ந்து பார்த்தான். அங்கே அகல்யா தேனீர்க் கோப்பையுடன் நின்று கொண்டிருந்தாள்.

அவன் தேனீர்க் கோப்பையை வாங்கிக் கொள்ள அவள் அகல்யா மௌனமாகவே திரும்பி நடந்தாள்.

பிரசன்னா பழையவற்றை நினைத்துப் பார்த்தான். அந்த இனிய நாட்களின் நினைவுகள் இன்னமும் அவன் இதயத்தைத் தாக்கி அவனைப் பலவீனப் படுத்திக் கொண்டிருந்தது.

அந்த இனிய ஆரதி ! பிரசன்னாவின் வாழ்க்கையில் குறுக்கிட்ட அந்த இனியவளின் முகத்தை அவன் திரும்ப நினைத்தான்.

அந்தப் பல்கலைக்கழகத்தில் அவன் படித்த மூன்று வருட காலத்தில் அவன் அனுபவித்து விட்ட வேதனைகள்தான் எத்தனை.

அவள் ஆரதி விதவையென்றாலும் வீணையில் ஒரு மேதை. அவள் வீணையில் ஒரு மேதையாய் வருவதற்குக் கூட அவளது வாழ்க்கையில் ஒரு பின்னணி இருக்கிறது.

பிரசன்னா அவள் விதவை என்று தெரிந்தும் அவளை மனதாரக் காதலித்து இருவரும சந்தோசமாகச் சந்தித்து வந்த அந்த நாட்களில், அவள் ஆரதிக்குத் தெரியாமலேயே அவள் உடம்பில் வளர்ந்து வந்த நோய் முற்றி

அழகான அந்த இனியவள், பிரசன்னாவின் இனிய ஆரதி, அவளை அறியாமலேயே இறந்து கொண்டிருந்தாள்.

ஒரு நாள் ஆரதி பல்கலைக்கழகத்திற்கு வந்து கொண்டிருக்கும் போது வழியில் மயங்கி விழுந்தபோதுதான், அவளை ஆஸ்பத்திரிக்கு அழைத்துச் சென்று அனுமதித்ததோடு, பல சோதனைகளின் பின் டாக்டர்கள் அவளது நோயைக் கண்டு பிடித்தார்கள்.

ஒரு டாக்டர் பிரசன்னாவை தனது அறைக்குள் அழைத்து "இந்தப் பெண் உங்களுக்கு மிகவும் வேண்டப்பட்டவளா?" என்று கேட்டார்.

அவன் "ஆம்" என்பதற்கு அடையாளமாக தலையாட்டினான்.

"நான் சொல்லப் போவது உங்களுக்குள் மாத்திரமே இருக்க வேண்டும். நான் சொல்லப் போவதைக் கேட்டு நீங்கள் அதிர்ந்து விடக்கூடாது".

பிரசன்னாவிற்கு ஏதோ புதிர் போட்டுக் கேள்வி கேட்பது போலிருந்தது. அவன் நிமிர்ந்து அந்த டாக்டரைப் பார்த்தான்.

"இந்தப் பெண்ணுக்கு இலூக்கேமியா" அதாவது இரத்தப் புற்றுநோய். இந்த நோய்க்கு இன்னும் மருந்து கண்டுபிடிக்கப்படவில்லை". இந்தப் பெண்ணுக்கு இந்த நோய் முற்றி விட்டது. இன்னும் இந்தப் பிள்ளை வாழப்போவது நான்கு அல்லது ஐந்து நாட்கள்தான், I am sorry பிரசன்னா" டாக்டர் எழுந்து நடந்தார்.

பிரசன்னாவிற்கு இந்த உலகமே சுற்றியது. தலையில் பெரிய கல்லைத் தூக்கிப் போட்டது போன்ற பிரமை.

என் இனிய ஆரதி, வாழப்போவது இன்னும் நான்கோ அல்லது ஐந்து நாட்களா? அவன் அழுதான். விக்கி விக்கி அழுதான். அவளுக்காக, அவனுடன் வாழவேண்டிய இனிய அவளுக்காக  அவன் விக்கி விக்கி அழுதான்.

ஆனால் இந்த உலகம் மௌனமாகவேயிருந்தது. இரத்தப் புற்று நோய்க்கு இன்னமும் முழுமையாக மருந்து கண்டு பிடிக்கப்படாததால் என் ஆரதி செத்துக் கொண்டிருக்கிறாள். ஆனால் இது அவளுக்குத் தெரியாது.

'ஓ கடவுளே ! உனக்குத்தான் எங்கள் காதல் மீது இத்தனை பொறாமையா? நாங்கள் உனக்கு எந்தவொரு பாவமும் செய்யவில்லையே.! எங்களைச் சந்தோசமாக வாழவிடு! அவளை என் ஆரதியை என்னை விட்டுப் பிரித்து விடாதே கடவுளே!. உனக்கு எத்தனை கோடி அர்ச்சனைகள் வேண்டுமானாலும் நான் செய்கிறேன். ஆனால் என்னால் ஆரதியைப் பிரிந்து வாழமுடியாது கடவுளே !.

ஆனால் அந்த இனிய ஆரதி,, இசை மேதை உயிருக்குப் போராடிக்கொண்டிருந்தாள். அவளுக்கு தான் சாகப்போகிறேன் என்பது கூடத் தெரியாது.

பிரசன்னா இரவு பகலாக அவள் பக்கத்திலேயே இருந்தான்.

அவள் ஆரதி பிரசன்னாவிடம் "எனக்கு என்ன வருத்தம் என்று டாக்டர் சொன்னார்?" என்று கேட்பாள்.

பிரசன்னா உள்ளத்து உணர்வுகளை அடக்கிக் கொண்டு "பெரிதாக ஒன்றுமில்லை விரைவில் குணமாகிவிடும் என்று சொன்னார்" என்று ஒரு பொய் சொன்னான்.

"அடுத்த மாதம் ஐந்தாம் திகதி நடக்கவிருக்கும் எனது கச்சேரிக்கு நீங்கள் வருவீர்களா பிரசன்னா?"

'ஆம்' என்று தலையாட்டினான்.

ஆனால் அவனுக்கு அடுத்த கச்சேரிக்கு அவள் இருக்க மாட்டாள் என்று தெரியும். அவனால் அவள் முன்னால் வெளிப்படையாக அழ முடியவில்லை. உள்ளத்திற்குள் அழுதான். இருண்டு கொண்டிருக்கும் அவனது வாழ்க்கை! இறந்து கொண்டிருக்கும் அவனது ஆரதி ! இவையெல்லாம் இந்தப் போலியான உலகத்தில் அனுபவிக்க வேண்டியவைகள்தானா?

ஆஸ்பத்திரியில் ஆரதியை அனுமதித்த மூன்றாம் நாள்,....! பிரசன்னா அவள் பக்கத்திலேயே இருந்தான். வீணையை மீட்டும் அந்த இனிய ஆரதியின் கைகளை பிரசன்னா பிடித்துக் கொண்டான். ஆனால் அவளது அந்தக் கைகள் சோர்ந்து விழுந்தன. ஒரு வீணை மேதையின் வாழ்க்கை முடிந்து கொண்டிருந்தது.

சோர்ந்து விட்ட அவளது கைகளை எடுத்து அவன் தன் கைகளில் பற்றிக் கொண்டான்.

“பிரசன்னா”! அவள் கூப்பிட்டாள்.

“எனக்குப் பயமாகவிருக்கிறது பிரசன்னா ! எனக்கு வாழத்தான் ஆசையாக இருக்கிறது. உங்களுடன் உங்கள் மனைவியாக எத்தனையோ வருடங்கள் வாழ ஆசையாக இருக்கிறது. உண்மையைச் சொல்லுங்கள் எனக்கு என்ன நோய்?.”

அவன் கண்கள் கலங்கி கண்ணீர்த்துளிகள் வழிந்தோடின. அவள் சோகத்துடன் அவனைப் பார்த்தாள்.

“உங்களைத் தெரியாமல் எனக்கு இருட்டிக் கொண்டு வருகிறது பிரசன்னா” ! அவள் ஈனக் குரலில் அவனைக் கூப்பிட்டாள்.

பிரசன்னா “டாக்டர்” என்று கத்தினான். உடனேயே அவளை அவன் இறுக்கமாகக் கட்டிப் பிடித்துக் கொண்டு கத்தி அழுதான். அவள், அவனின் இனிய அழகிய அந்த ஆரதி செத்துக் கொண்டிருந்தாள். அவளுக்கும்கூட இப்போது விளங்கியிருக்க வேண்டும். சொட்டுச் சொட்டாகக் கண்ணீர்த் துளிகள் அவள் கண்களிலிருந்து பனித்து அவன் கைகளில் கொட்டின.

பிரசன்னா அவளைப் பார்த்தான். இறுக அவளை அணைத்து முத்தம் கொடுத்தான். மாறி மாறி முத்தம் கொடுத்தான்.

“நான் உங்களுக்காகத்தான் பிரசன்னா”! அவள் வார்த்தைகளைத் தடுமாறி உச்சரித்தாள். அவள் தலை மெதுவாகச் சாய்ந்தது. மார்பு ஒருமுறை விம்மித் தணிந்தது.

அவள் போய் விட்டாள்.

வீணையை மீட்டிய அந்தக் கரங்கள் சோர்ந்து விட்டன. எத்தனையோ ராகங்களை மீட்டிய அவளது பயணத்திற்கு முகாரி ராகம் மீட்டக் கூட ஒருவருமில்லை.

பிரசன்னாவை பொறுத்த வரை அவனால் ஈடுகொடுக்க முடியாத எதிர்பாராத விபத்து ! அவன் அழுதான். ஆரதிக்காக அழுதான். ஆனால் இந்த உலகம் மௌனமாகவேயிருந்தது. போலியான இந்த உலகத்தில் போலி வாழ்க்கை, பதவி, பட்டங்கள்....எல்லாமே ஒரு குறுகிய காலத்திற்குள்தான்.

கனவிலிருந்து விடுபட்ட பிரசன்னா நிமிர்ந்து பார்த்தான். அங்கே அகல்யா யன்னலோரமாக நின்று அவனையே பார்த்துக் கொண்டிருந்தாள். அவளது முகத்தில் ஒரு மாறுதல்.

இந்த மனுசன் அந்தப் பைரவிப் பைத்தியத்தில் இருக்கு என்று மனதிற்குள் நினைத்துக் கொண்டு “அத்தான்”என்று கூப்பிட்டாள்.

அவளது குரலில் ஒரு கடினம் தெரிந்தது.

அவன் மௌனமாகவே நிமிர்ந்து அவளைப் பார்த்தான்.

“இங்கு வந்த முதல் நாள் முதல் உங்களைப் பார்த்துக் கொண்டுதான் வாறன். அவளை மறந்து ஒரு கிழமையாவது என்னுடன் இருக்க பொறுமை இல்லாமல் இருக்கிறது போல தெரியுது”

பிரசன்னாவுக்கு அவளது வார்த்தைகளின் அர்த்தம புரிந்து கொண்டாலும் மௌனமாக நிமிர்ந்து கேள்விக் குறியுடன் அவளைப் பார்த்தான்.



# 19

அகல்யா மெதுவாகச் சென்று அவன் பிரசன்னா பக்கத்தில் இருந்து கொண்டாள். அழகான இனிய அந்த வாழ்க்கையில்தான் எத்தனை சோதனைகள் !

தன்னை முழுதாக பிரசன்னாவிற்கு அர்ப்பணித்துவிட்ட அவள் வாழ்க்கையிலும் ஒரு புயலா ?

என் அத்தான் அப்படிச் செய்ய மாட்டார் என்று நினைத்த அவள் மனம் மறுகணம் தடுமாறிப் பேதலித்தது. அவள் கண்களிலிருந்து பனித்த கண்ணீர்த் துளிகள் அவள் மனதில் ஏற்பட்டுவிட்ட தாக்கத்தை அவன் பிரசன்னாவிற்கு உணர்த்தின.

பிரசன்னா மௌனமாகவேயிருந்தான். வெறுத்துவிட்ட இந்த உலக வாழ்க்கையில் அவன் வாழ்வது இப்பொழுது ஒன்றுமறியாத தன் இரு பிள்ளைகளுக்கும் அகல்யாவுக்குமாகவே.

அகல்யா நிமிர்ந்து அவனைப் பார்த்தாள். கேள்விக் குறியுடன் அவனைப் பார்த்தாள். பரிவுடன் அவனைப் பார்த்தாள்.

'அத்தான் நீங்கள் அப்படிச் செய்யக் கூடியவரா என்பது போல்' அவனைப் பார்த்தாள்.

மென்மையான அவளது கரங்கள் நடுங்கிய வண்ணமே அவன் தோள்களைப் பற்றப் போயின.

அவன் அவளை நிமிர்ந்து பார்த்தான். பரிதாபமான அவள், அகல்யா முகத்தைப் பார்த்தான்.

'வீணாக இவள் தன்னை வருத்திக் கொள்கிறாள்' என்று புரிந்து கொண்டவன் தன் கைகளை எடுத்து அவள் முகத்தை வருடிக் கொடுக்கப் போனான்.

அப்பொழுது அகல்யா அவன் கைகளைத் தட்டி விட்டாள்.

"நீங்கள் முதலில் எனக்கு பைரவியுடன் பழகுவது உண்மையா என்று தெரிய வேணும்" என்று சொன்னாள்.

அவன் 'ஆம்' என்பதற்கு அடையாளமாக தலையாட்டினான்.

அவள் அகல்யா கத்தி அழுதாள். அவனைப் பார்த்து "இந்த மனுசனை ...." என்று சொல்லிக் கொண்டே கத்தி அழுதாள்

பிரசன்னா காய்ந்து விட்ட தொண்டையை ஈரமாக்கி அடிக்குரலில் "அகல்யா" என்று கூப்பிட்டான்.

அவள் அவன் முகத்தைப் பார்க்கவில்லை.

“என்னில் என்ன குறை இருக்கிறது என்று அவளுடன் அந்தப் பைரவியுடன்....பழகுகிறீர்கள்?” அவள் கேட்டாள்.

அவன் அகல்யாவைப் பார்த்தான். சில கணங்கள் கண் வெட்டாமல் அகல்யாவைப் பார்த்தான்.

வாழ்க்கையில் எல்லாம் அவனுக்கு சோதனைகளாகவே வந்து கொண்டிருக்கிறது.

பலவீனமான அவனது இதயத்திற்கு இன்னுமொரு தாக்கமா ?

ஆரதியின், அவனது அந்த இனியவளின் கதை தெரிந்தும் தன்னை விரும்பித்தானாகவே அவனைக் கேட்டு மணம் முடித்த இந்த அகல்யாவா? தன்னை நம்பாமல் இப்படிக் கேட்கிறாள் என்று நினைக்க அவன் மனதில் மீண்டும் ஒரு தாக்கம்.

அவன், அவள் அகல்யாவைப் பார்த்தான்.

“என்னை நீயாக விரும்பி மணம் முடித்த உனக்கு நான் அப்படிச் செய்வேனா?” அவன் கேட்டான்.

“இந்தக் காலத்தில் யாரைத்தான் நம்புகிறது” அகல்யாவின் பதில்.

அவள் இன்னும் அவன் சொன்னதை நம்பவில்லை என்று அவள் சொன்ன அந்த வார்த்தைகள் எடுத்துக் காட்டின.

பலவீனமான அவனை, அவள் தன்னையறியாமலேயே இன்னமும் பலவீனமாக்கிக் கொண்டிருந்தாள்.

அவன் பிரசன்னா அடிக்குரலில் மீண்டும் அவளைப் பரிவுடன் கூப்பிட்டான்.

"கணவன் மனைவிக்கிடையே கேள்விக் குறிகளும், நம்பிக்கையின்மையும் இருந்தால் அந்த வாழ்க்கை பாழாகப் போய் விடும் அகல்யா!"

"எனது வாழ்க்கையும் பாழாகத்தானே போய்க் கொண்டிருக்கிறது"

மீண்டும் அவனுக்கு ஒரு தாக்கம்.

"அகல்யா! நீ நினைப்பது போல் அந்தப் பைரவிக்கும் எனக்கும் எந்தவித அந்தரங்கத் தொடர்புகளும் இல்லை".

அகல்யா நிமிர்ந்து அவனைப் பார்த்தாள்.

அவன் சொன்னான். 'அவள் பைரவி வளர்ந்துவிட்ட சூழ்நிலை, அவள் பழகும் விதம், அவள் ஒரு தலையாகவே தன்னை விரும்பியதுதான். அவளுக்கு அகல்யாவைப்பற்றி, ஆரதியைப்பற்றி சொல்லி அவள் பைரவிக்கு புத்தி சொல்லியது,' எல்லாவற்றையும் அவள் அகல்யாவுக்கு பிரசன்னா சொன்னான்.

"பலவீனமாகி விட்ட அவன் வாழ்க்கையில், போலியான அவன் வாழ்க்கையில் அவன் கண்டு விட்ட உண்மைதான் என்ன?

“உனக்கு உண்மை தெரிய வேணுமென்றால் அவளைக் கூப்பிடு……!

“எவளை?”

“பைரவியைத்தான் அகல்யா,” தொலைபேசி நம்பரைக் கொடுத்தான்.

ஒரு கணம் குளிர்ந்த அகல்யாவின் உடல் மீண்டும் சூடாகியது போன்ற உணர்வு.

மென்மையான உள்ளம் படைத்த பிரசன்னாவை நான் தண்டித்து விட்டேனோ என்ற ஒரு சந்தேகம்.

பிரசன்னா கதிரையில் சாய்ந்திருந்தபடியே ஒரு சிகரெட்டை எடுத்துப் பற்ற வைத்துக் கொண்டான்.

தன்னைத் தணலாக்கிக் கொண்டிருந்த அந்த சிகரெட், அவன் உள்ளத்தையும் மெதுவாகத் தணலாக்கிக் கொண்டிருந்தது.

அவன் உள்ளம் விரக்தியின் உச்சிக்கே சென்றுவிட்டது.

அகல்யா, பைரவிக்கு தொலைபேசியில் பிரசன்னா வரக்கூறியதாக அழைப்பு விடுத்தாள்

பைரவியும் அதற்கு “ஆம்” என்று சொல்லிவிட்டாள்.

பைரவியின் மனம் பேதலித்தது. பிரசன்னா என்னை ஏன் அழைத்திருக்க வேண்டும். அதுவும் தன் wife விடம் சொல்லி….! அவள் நிலை தடுமாறினாள்.

தான் ஆசைப்பட்ட தன் காதலன் எங்கோ தூரம் பிரிந்து போகின்ற உணர்வு அவளுக்கு....!

இளமையான அவளது இதயம் இறுக்கமாகி விரைவாகத் துடித்தது.

பிரசன்னாவுக்கு ஏதுமென்றால்........!

"No It won't happen," அவள் தன்னை ஒரு நிலைப்படுத்த முயன்றாள்.

சிகரெட் புகைத்துக் கொண்டிருந்த பிரசன்னா சத்தமாக அகல்யாவைக் கூப்பிட்டான்.

அவள் ஒன்றும் சொல்லாமல் மௌனமாகவே தனது வேலைகளைக் கவனித்துக் கொண்டிருந்தாள்.

மீண்டும் பிரசன்னா "அகல்யா! அகல்யா! என்று கத்தினான்.

திலக்கும் சிந்துவும் பிரசன்னாவிடம் ஓடி வந்தார்கள்.

அகல்யாவும் ஒரு கண நேரம் ஏதோ நினைத்தவளாய், அவனை நோக்கி ஓடிவந்தாள்.

"எனக்கு எல்லாமே இருட்டிக் கொண்டு போகிறது" அவன் சொல்ல.....

"பிரசன்னா! பிரசன்னா" அவள் அகல்யா செய்வதறியாது கத்தினாள்,

கோலிங் பெல் அப்போது அடித்தது.

சிந்து ஓடிப்போய் முன் கதவைத் திறந்தாள்.

அங்கே பைரவி சிலையாக நின்றிருந்தாள்.

"Hello Kutty"! என்றவள் உள்ளே எட்டிப் பார்த்தாள்.

அகல்யா அவன் அருகில் இருந்து அவன் முகத்தை வருடினாள்.

பிரசன்னா நிமிர்ந்து பார்த்தான். அகல்யாவைப் பார்த்தான்.

அவள் அவனைப் பார்த்தாள். குற்ற உணர்வுடன் அவனைப் பார்த்தாள்.

ஆனால் பிரசன்னாவின் இதயத்துக்கு இன்னும் தாக்கங்களை ஏற்கும் சக்தியில்லை.

அகல்யா அவனைக் கட்டிப்பிடித்து கட்டிலில் படுக்க வைத்து கொண்டிருந்தாள்.

அவன் நெஞ்சு மூச்சு எடுக்க அவதிப்பட்டு தடுமாறித் தடுமாறி விம்மித் தணிந்தது.

அகல்யாவுக்கு என்ன செய்வது என்று தெரியவில்லை. கத்தினாள். பெரிதாகக் கத்தினாள்.

"அத்தான் அம்புலன்ஸ் இப்ப வந்துவிடும் ஆஸ்பத்திரிக்குப் போக எல்லாம் சரியாகிவிடும்" என்று அவனைப் பிடித்துக்

கொண்டு, அவன் கைகளை இறுக்கமாகப் பிடித்துக் கொண்டு அவனுக்குச் சொன்னாள்.

அவன் சுய நினைவில்லாமல் மயங்கிக் கொண்டிருந்தான்.

பைரவி உள்ளே ஓடிச் சென்றாள். அவளுக்கு ஒன்றும் புரியவில்லை.

"அக்கா what happened to him?" அவள் பைரவி, அகல்யாவின் தோளை உலுக்கிக் கேட்க..

"எல்லாம் உன்னால்தான்..." அகல்யாவிடமிருந்து பதில் வந்தது.

அம்புலன்ஸ் வந்தது. பிரசன்னாவை முதலுதவிச் சிகிச்சையுடன் ஆஸ்பத்திரிக்குக் கொண்டு சென்றனர்.

பைரவி திகைத்துப் போனாள். "Me............" அவளால் பேச முடியவில்லை. சொட்டாகக் கண்ணீர்த் துளிகள் பனிக்க அவள் அகல்யா முகத்தையே பார்த்தாள்.

பிரசன்னா மயங்கிய நிலையிலும் ஏதோ பிதற்றிக் கொண்டிருந்தான்.

பைரவி அவன் முன்னே நிற்பது அவனுக்குத் தெரியாது. "அவள் பைரவி பாவம்.....! சின்னவள், ஏதோ ஆசைப்பட்டு விட்டாள்..." அவன் வாயிலிருந்து இந்தச் சொற்கள்.........!

அந்தச் சொற்களை ஒவ்வொன்றாக இணைத்த பைரவியின் கண்களிலிருந்து பொல பொலவென கண்ணீர் வழிந்து கழுத்தோரம் தடவிச் சென்றது.

"அக்கா..! I didn't hurt him" பைரவி அழுதாள். பெரிதாக அழுதாள்.

பிரசன்னாமேல் ஆசைப்பட்டதைத் தவிர வேறு எந்த குற்றவுணர்வும் இல்லாத அவளது நெஞ்சிலிருந்து அந்த வார்த்தைகள்தான் திரும்பத் திரும்ப

"I did'nt hurt him" .......!

அகல்யாவுக்கு ஓரளவு உண்மை விளங்கி விட்டது.

அம்புலன்ஸ் வந்து முதலுதவிச் சிகிச்சையுடன் அவன் பிரசன்னாவை ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் சென்றது.

ஆனால்........பைரவி......!

செய்வதறியாது குழப்பமடைந்தவளாய் ஒரு சிறு பிள்ளைபோல் அகல்யாவின் பின்னே சென்றாள்.

பல நேர சோதனைகளின் பின் "Anxiety Depression" ('எதிர்பார்ப்பு மனச்சோர்வு') என்றும், அதிலிருந்து பிரசன்னா விடுபட்டு வருவானோ என்று உடனே சொல்ல முடியாது என்றும் டாக்டர் அகல்யாவுக்குச் சொன்னார்.

அவனுக்கு இந்த மனச்சோர்வு வருவதற்கு எதிர்பார்ப்புகளும் ஏமாற்றங்களுமே காரணம் எனவும், கவனமாக அவனைப் பார்க்க வேண்டும் என்றும் டாக்டர் அகல்யாவுக்கு விளக்கினார்.

அகல்யா விக்கி விக்கி அழுதாள். தாலியைக் கையில் பிடித்துக் கொண்டு "பிரசன்னா எனக்கு வேணும்" என்று கத்தி அழுதாள்.

தம்பிமுத்து வாத்தியாரும் பிரசன்னா ஆஸ்பத்திரியில் என்று கேள்விப்பட்டு ஓடோடி வந்து விட்டார். அகல்யாவுக்கு ஆறுதலாக அவள் பக்கத்தில் தம்பிமுத்து வாத்தியார் நின்றிருந்தார்.

அகல்யாவின் மனம் குற்ற உணர்வுடன் அழுதது. 'அத்தானுக்கு இந்த வருத்தம் வர நானும் பாதிக் காரணமாக இருந்து விட்டேனே' என்று நினைத்து அவள் விக்கி விக்கி அழுதாள்.

"கடவுளே என் அத்தானை எனக்குத் தந்துவிடு" வாழ்க்கையில் சோர்ந்து போன அவரை நான் கவனமாகப் பார்ப்பேன் கடவுளே. எனக்கு அவர் இல்லாமல் வாழவே முடியாது கடவுளே!

அவள் அகல்யா அழுதாள். பிரசன்னாவை இன்னும் ஐந்து மணித்தியாலங்களிற்கு எவரும் போய்ப் பார்க்க முடியாது என்று டாக்டர் சொல்லியிருந்தார்.

அவனை "தீவிர கண்காணிப்புச் சிகிச்சைப் பிரிவில்" வைத்திருந்தார்கள்.

தம்பிமுத்து வாத்தியார் அங்குமிங்குமாக நடந்து கொண்டிருந்தார்.

சிந்துவும் திலக்கும் கூட அடுத்த வீட்டு வெள்ளைக்கார மனுசன் பீற்றருடன் ஆஸ்பத்திரிக்கு வந்து விட்டார்கள்.

"Where is daddy" சிந்து அகல்யாவைக் கேட்டாள்.

அவள் அகல்யா இருவரையும் கட்டிப்பிடித்து தன்னுடன் அணைத்துக் கொண்டு பதில் சொன்னாள்.

பைரவியின் கைகளும் கால்களும் தன்னையறியாமலேயே நடுங்கின.

தன்னால்தான் இப்படி நடந்துவிட்டதோ என்ற குற்றவுணர்வு அவளை மிகவும் பாதித்தது.

"அக்கா" ! அவள் எச்சிலை மென்று விழுங்கிவிட்டு அகல்யாவைக் கூப்பிட்டாள்.

"I am sorry........" அவள் பைரவியின் வார்த்தைகள் தடுமாறின..

ஏதோ குடும்பத்தைப் பிரித்து விட்டோம் என்ற மனவுறுத்தல் அவளுக்கு.

அகல்யா பிள்ளைகள் இருவரின் அணைப்பையும் விடுத்து, அவளை நிமிர்ந்து பார்த்தாள்.

பைரவி ஒரு குற்றவாளியாக .........! நடுங்கும் கைகளை இறுக்க மடித்து, நடுங்கும் கால்களை வலுவாக ஊன்றி .......!

சேலைத் தலைப்பை எடுத்து கண்களைத் துடைத்துக் கொண்டு, அவள் அகல்யா ஒன்றுமே சொல்லாமல் பைரவியின் தலையைத் தடவி விட்டாள்.

போலியான இந்த உலகத்தில் வாழும் வாழ்க்கை கூட போலியானதுதான். அந்தக் குறுகிய காலத்திற்குள் ஒரு மனிதன் எத்தனை நல்லவற்றை, கெடுதலைச் செய்கிறான், செய்ய நினைக்கிறான்.

நர்ஸ் வந்து "இனி நீங்கள் விரும்பினால் பிரசன்னாவைப் போய்ப் பார்க்கலாம்" என்று சொன்னாள்.

அகல்யா இருபிள்ளைகளையும் அணைத்துக் கொண்டு முன்னே செல்ல, பைரவியும் ஒரு சிறு பிள்ளையைப் போல் கூனிக்குறுகி அவள் பின்னே சென்றாள்.

அவன் பிரசன்னா கண்களைத் திறந்து அவர்களைப் பார்த்தான். எல்லாம் சரியாகிவிட்டது போல் அவர்களைப் பார்த்தான்.

அகல்யாவின் கண்கள் சிவந்து இன்னமும் கண்ணீர்த் துளிகள் வழிந்தோடிக் கொண்டிருந்தன.

அவன் அவர்களைப் பார்த்துச் சிரித்து விட்டு கண்களை மூடிக் கொண்டான்.

எல்லோரும் போய் அவன் பக்கத்திலேயே நின்றார்கள்.

"அத்தான்" அகல்யா மெதுவாகக் கூப்பிட்டாள்.

அவன் கண்களைத் திறந்தான். "என்னை மன்னித்து விடுங்கள் அத்தான் ..." அவள் அழுதாள்.

பைரவியின் கண்களிலிருந்து துளிகளாக .........!

பைரவி, பிரசன்னாவின் கைகளைப் பிடித்துக் கொண்டு "You are a silly man" என்று சொல்ல..

அகல்யா பைரவியின் கைகளில் அடித்து "He is mine" என்றாள்.

உள்ளே வந்த தம்பிமுத்து வாத்தியார் உட்பட எல்லோரும் சிரித்தார்கள்.

பிரசன்னா சிரித்துக் கொண்டே கண்களை மூடினான்.

அவன் ஆரதி ! அவன் முன் மெல்ல நடந்து வந்தாள்.

"பிரசன்னா என்னை மறந்து விடுங்கள். நீங்கள் விரைவில் குணமாகி விடுவீர்கள். உங்கள் அகல்யாவுடன் குடும்பமாக வாழப் பழகுங்கள்". சொல்லி விட்டு அவள் சிரித்தாள்.

இன்னும் பல நாட்கள் ஆஸ்பத்திரியில் இருந்து சிகிச்சை பெறவேண்டும் என்று டாக்டர் கூற பிரசன்னா மௌனமாகவே தலையாட்டினான்.

இந்தமுறை பைரவி தனியாகவே திரும்பி பல்கலைக்கழகம் சென்றாள்.

அந்தப் புகையிரத நிலையம்..... புகையிரதம்..... எல்லாம் பிரசன்னாவின் நினைவுகளை மீண்டும் தோற்றுவிக்க.....

"He is married, I am silly" என்று முணுமுணுத்த வண்ணம் அவள் பாடப் புத்தகத்தைப் புரட்டினாள்.

ஆனால் பிரசன்னா இன்னும் மூன்று மாதங்கள் இந்த ஆஸ்பத்திரியில்......

**எதிர்பார்ப்புகளும், ஏமாற்றங்களும் இருக்கும்வரை இப்படி எத்தனையோ பிரசன்னாக்கள் உருவாகத்தான் செய்வார்கள்.**

முற்றும்

## "SURUTHI PETHAMADAIKIRATHU"

**(Tamil Novel)**

***By Vavuniyoor Ra. Uthayanan***

வாழ்க்கை என்பது பல அத்தியாயங்களைக் கொண்ட ஒரு கதைப் புத்தகமாகும் பிரசன்னா. அதில் சிரித்து மகிழ வேண்டிய அத்தியாயங்களும் உண்டு. அழுது மறக்க வேண்டிய அத்தியாயங்களும் உண்டு !

- ஆரதி

ஆரதி விதவை என்று தெரிந்தும், அவளை மனதாரக் காதலித்து இருவரும் சந்தோசமாக சந்தித்து வந்த அந்த நாட்களுள் ஆரதிக்குத் தெரியாமலேயே அவள் உடம்பில் வளர்ந்து வந்த நோய் முற்றிவிட்டது !

- பிரசன்னா

பிரசன்னா Darling இப்பொழுது உங்கள் பக்கத்தில் இப்படி உங்கள் கதையைக் கேட்டுக்கொண்டு உங்கள் தோளில் உரிமையுடன் சாய்ந்து வருவதும், என்னைப் பொறுத்தவரை ஒரு சுவையான அத்தியாயம் தானே!

- பைரவி

இலங்கைப் பல்கலைக்கழகத்தில் பட்டம் பெற்றிருந்தாலும் விரைவில் பிரசன்னா பெறப்போகும் எம்.எஸ்.சி. பட்டம், அத்துடன் இங்கிலாந்தில் உயர்கல்வி படித்த மதிப்பு இவையெல்லாம் எனது கணவருக்கு பெரியதொரு வேலை எடுக்க உதவியாயிருக்கும்!

- அகல்யா



சுருதி பேதமடைகிறது....

வவுனியூர் இரா. உதயணன்

ISBN : 978-955-1347-03-1

PRINTED BY UNIE ARTS (PVT) LTD., 48B, BLOEMENDHAL ROAD, COLOMBO 13. TEL: 2330195